தன்னைப் பற்றி நினைத்து ஆச்சர்யப்பட்டாள், சுபத்ரா. "எப்படிக் கொஞ்சம் கூடத் தயக்கமின்றிச் சரளமாகப் பொய் பேசுகிறேன்!"

கல்யாணோ அவளைப் பிரமிப்புடன் பார்த்தான்.

"உண்மையிலேயே உங்களைப் பார்க்கிறப்ப பொறாமையா இருக்கு, மேடம். நீங்க அவரைப் பத்தி உயர்வாப் பேசறதும், அவர் உங்களைப் பத்தி சிலாகித்துப் பேசறதும்.. கேக்கவே சந்தோஷமாயிருக்கு. உங்களை மாதிரியே எல்லாத் தம்பதி களும் இருந்துட்டா, டைவர்ஸ் என்கிற வார்த்தையை அகராதியிலிருந்தே விரட்டியடிச்சுடலாம். என் கண்ணே பட்டுடும் போல. திருஷ்டி சுத்திப் போட்டுடுங்க."

அதை ஆமோதிப்பது போலத் தலையாட்டிச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பின் அர்த்தம் அவளன்றி யார் அறிவார்?

★ ★ ★

மாமரத்தில் அமர்ந்திருந்த பறவைகளின் இன்னிசைக் கச்சேரி... சூழ்நிலையை ரம்மியமாக்கி இருந்தது. காற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் இளம் பிஞ்சுகள் உதிர்ந்து பரவலாகக் கிடந்தன.

சருகுகளோடு சேர்ந்து பெருக்கிக் கூட்டிய பார்வதி எதேச்சையாக மாடியைப் பார்த்தாள்.

ஜன்னல் கதவுகள் இன்னும் திறக்கவில்லை.

பார்வதியின் நெற்றி சுருங்கியது.

சந்தனா இன்னும் எழுந்திருக்கவில்லை! மணி ஒன்பதாகப் போகிறதே! என்னாச்சு இவளுக்கு? கொஞ்ச நாட்களாகவே டல்லாயிருக்கிறாள். அதிகாலையில் எழுந்து வாக்கிங் போவாள். இப்போது அதுவுமில்லை. எந்நேரமும் படுத்துக் கொண்டே இருக்கிறாள். ஏன்? கணவனை இழந்திருந்த அந்தத் தாயின் கவலை பலவிதமாய் யோசிக்க வைத்தது.



துடைப்பத்தைப் போட்டுவிட்டு, மாடியை நோக்கிச் சென்றாள்.

உட்புறம் தாழிடப்படாத கதவு கை வைத்ததும் திறந்து கொண்டது.

இருண்டு கிடந்தது அறை. கட்டிலில் குப்புறப்படுத்துக் கிடந்தாள், சந்தனா.

சுவிட்சைப் போட்டாள். டியூப் லைட் கண் சிமிட்டி எரிந்தது. ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டாள். காத்திருந்த வெளிச்சம் குபுக்கென உள்ளே பாய்ந்தது.

திடீரென ஆக்ரமித்த ஒளியால் கண்களைச் சுருக்கியபடி எழுந்தமர்ந்தாள்.

"நீயா? ஏம்மா லைட்டைப் போட்டுத் தொந்தரவு பண்றே?"

'ஆமான்டி... சூரியன் உச்சிக்கு வந்து முறைக்கிறான். நீ இன்னும் தூங்கிக்கிட்டிரு."

"நான் ஒண்ணும் தூங்கலே. சும்மாதான் படுத்துக்கிட்டிருந் தேன்!"

"அதான் ஏன்? உன்னை இப்படிச் சோர்ந்து போய்ப் பார்த்ததே இல்லையே! கொஞ்ச நாளாவே இப்படித்தானி ருக்கே! உடம்பு கிடம்பு சரியில்லையா? எதுவாயிருந்தாலும் சொல்லுடி!"

"அடடா... உன்கிட்டே இதாம்மா தொல்லை. எப்பவும் ஒரே மாதிரி இருந்துட முடியுமா? கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும் போலத் தோணுச்சு. அவ்வளவுதான்."

"அதுக்கேன் முகம் சோர்ந்து போயிருக்கு? வழக்கமா வாக்கிங் போவே. அதுக்கும் போறதில்லே."

"அதான் சொன்னேனம்மா... ரெஸ்ட் எடுக்கறேன்னு,"

என்றாள், எரிச்சலாய்.

''எதுவாயிருந்தாலும் அம்மாகிட்டே சொல்லு, சந்தனா.. உங்கண்ணன் திட்டினானா?''

''ஒண்ணுமில்லேன்னா விடேன்மா.. சும்மா ரெஸ்ட் எடுக்கக் கூடச் சுதந்திரமில்லையா எனக்கு? சே..!'' போர்வையை உதறி எறிந்து விட்டுக் குளியலறை நோக்கிச் சென்றாள், சந்தனா.

நினைத்த மாதிரி எதுவும் பிரச்சனையில்லை என்றுணர்ந்ததும்... நிம்மதி பரவ எழுந்து வெளியே வந்தாள், பார்வதி.

குளியலறையில்...

பூத் தூவலாய் ஷவரிலிருந்து தண்ணீர் சீறிப்பாய... உடையைக் களையக் கூட நினைப்பில்லாதவளாய்... நைட்டியுடன் நனைந்து கொண்டிருந்தாள், சந்தனா.

தண்ணீர் சில்லென்று உடலைத் தழுவினாலும், உள்ளம் எரிமலையாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

''மித்ரா..! என்னையா அவமானப்படுத்தினாய்? உன் கணவனை எனக்குப் பிடிக்கும். கல்யாண் என் கணவராய் வாய்த்திருந்தால் நன்றாக யிருக்குமே என்று எண்ணினேயொழிய ஒருநாளும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டதில்லை. ஒரு நல்ல தோழியாய்ப் பழகினேன். பெண்தானே என்றும் பாராமல் அவமானப்படுத்தி விட்டாய். மனசு ஆறவில்லை. நான் துடிப்பது போல் நீயும் துடிக்கவேண்டும். அப்போதுதான் உன் தவறு புரியும். விட்டு விடுவேனா? உன்னை நிம்மதியாய் விட்டு விடுவேனா? சீண்டிப் பார்த்து விட்டாய். என் சீற்றத்தைப் பார்க்கப் போகிறாய்!''

சந்தனாவின் மனதில் குரூரமான எண்ணம் உதித்தது.

★ ★ ★

இரண்டு வெள்ளித் தம்ளரில் பாதாம் பாலை எடுத்துக் கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தாள் சங்கமித்ரை.

புலனாய்வு வார இதழில் மூழ்கியிருந்த கல்யாண், மெல்லிய கொலுசொலியில் கலைந்து, புத்தகத்தை மூடி வைத்தான்.



ஆளுக்கொரு தம்ளரை எடுத்துக் கொண்டு பருகினார்கள்.

''உங்க மேடத்துக்கு ஒரே ஒரு பொண்ணுதானா?'' என்றாள் திடீரென்று.

பால் குடிப்பதை நிறுத்திவிட்டு, அவளைப் பயத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

''ஏன் இப்ப அவங்களைப் பத்தி?''

''சும்மாதான்... ஏன் பேசக் கூடாதா..?''

''இல்லேடா. சம்மந்தமே யில்லாம இந்த நேரத்திலே கேட்டியா.. அதான்!''

மித்ரா அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். விரல்களால் அவன் மார்பு ரோமங்களில் சிக்கெடுத்தவளாய்... ''நீங்க அந்த மேடத்து மேலே ரொம்ப மரியாதை வச்சிருக்கீங்க.. அதனால அவங்களப் பத்தி தெரிஞ்சுக்கணும்னு கேட்டேன். வேண்டாம்னா விட்டுடுங்க.''

''அவங்களைப் பத்தித் தெரியணும்.. அவ்வளவுதானே? ரொம்ப பண்பானவங்க. அமைதியானவங்க, திறமைசாலி. ஒன்பது வயசு மஞ்சுளாவைத் தவிர வேறு குழந்தையில்லை. தாம்பத்ய வாழ்க்கையைப் பத்தி அருமையா புரிஞ்சு வச்சிருக்காங்க.. எனக்கே சில சமயம் அட்வைஸ் பண்ணுவாங்க!''

'அட்வைஸா?... ஏன் நம்ம சண்டையைப் பத்தியெல்லாம் அவங்ககிட்டே சொல்வீங்களா என்ன?'

மித்ராவின் விழிகள் கணவனைக் கூர்மையாய்த் துளைத்தன.

ஒரு கணம் திகைத்துப் போனான் கல்யாண்.

''அ.. அய்யோ...! நான் ஏன்டா சொல்றேன்? நம்ம பர்சனல் விஷயங்கள்ல யாரும் தலையிடக் கூடாதுங்கிறதுல எனக்கு அக்கறை இருக்காதா? நான் ரொம்ப நேரமா ஆபீஸே கதின்னு உட்கார்ந்திருந்தா, 'உங்க மனைவி உங்களுக்காக வீட்லே

காத்துக்கிட்டிருப்பாங்கன்னு ஞாபகமிருக்கா, இல்லை யா?'ன்னு விரட்டி விடுவாங்க.. அதைச் சொன்னேன்!'' என்று சமாளித்தான்.

''ம்.. அப்புறம்?''

''உன்னை மாதிரி அவங்களும் நல்லா சமைப்பாங்க, மித்ரா. உன் சமையலை அவங்களும் விரும்பிச் சாப்பிடுவாங்க!''

ஆக.. சாப்பாட்டைப் பகிர்ந்து சாப்பிடுமளவிற்கு இவர்கள் நட்பு வளர்ந்திருக்கிறதா?' நினைப்பே கசப்பைத் தந்தது.

''அவங்க புருஷன் எப்படி? உங்களுக்கு நல்ல பழக்கமா?''

'நான் இதுவரை அவரைப் பார்த்ததேயில்லை. அவரைப் பார்க்கணும்னு ஆவலா யிருக்கேன். பார்த்து ஒரே ஒரு கேள்வியைக் கேட்கணும். 'எங்க மேடத்தைக் கட்டிக்கிட்ட நீங்க அதிர்ஷ்டசாலியா? இல்லே உங்களைக் கட்டிக்கிட்ட.தால மேடம் அதிர்ஷ்டசாலியா?'ன்னு...'' உற்சாகத்தில் பேசிக் கொண்டே போக...

மித்ராவின் இதயம் சுருங்கியது.

''பேசியது போதும். லைட்டை அணைச்சிடு, மித்ரா!'' காதோரம் கிசுகிசுத்தான் கிறக்கமாய்.

''ரொம்பத் தலை வலிக்குது... தைலம் தேய்க்கணும்... தைலத்தை எங்கே வைச்சேன்?''

தேடும் சாக்கில் அவனிடமிருந்து விலகி எழுந்தாள்.

கல்யாண் பலூன் பிடுங்கப்பட்ட குழந்தையாய்ப் பரிதாப மாய் ஏக்கத்துடன் பார்த்தான்.

* * *

கல்யாணின் அலுவலகத்தை ஒட்டிய பஸ் ஸ்டாண்ட்! சந்தனா டைட் ஜீன்ஸ், சர்ட்டில் அவனுக்காகக் காத்திருந்தாள்.

தூரத்தில் கல்யாண் பைக்கில் வருவதைப் பார்த்து விட்டவள் அவன் கண்ணில் படும்படி நின்று கை காட்டினாள்.



அவளைப் பார்த்துவிட்ட கல்யாண், அதிர்ந்தான்.

இவளெங்கே இங்கே?



## 15

சந்தனா கை காட்ட, வேறு வழியின்றிப் பைக்கை நிறுத்தினான், கல்யாண்.

வலிய உதட்டில் புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டான்.

''என்ன சந்தனா இந்தப் பக்கம்?''

''உனக்காகத்தான்!'' மனசு முணுமுணுத்தது.

''என் சித்தி வீட்டுக்கு வந்தேன்!''

''உனக்கேது சித்தி? உங்கம்மாவுக்குக் கூடப் பிறந்தவங்கனு யாருமே இல்லையே!''

''கூடப் பிறந்தால்தான் சித்தியா? கொஞ்சம் தூரத்துச் சொந்தம். சொன்னால் உங்களுக்குப் புரியாது!''

''....?''

''என்ன இருந்தாலும் மித்ரா என்னை அப்படிப் பேசியிருக்கக் கூடாது, கல்யாண். தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் தூங்கி எத்தனை நாளாச்சு, தெரியுமா?''

''அவளுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன், சந்தனா. உன் வேதனை எனக்குப் புரியாமலில்லை?''

''அவ என்னை மட்டுமில்லை.. உங்களையும் சேர்த்துத்தான் அசிங்கப்படுத்தி யிருக்கா. ஆனா, கம்பீரமா ஆண் மகன் கல்யாண் அந்த நேரத்திலே என்ன செய்திருக்கணும்?''

''...''

''என் கண்ணெதிரிலேயே நாலு அறை அறைஞ்சு தள்ளியிருக்க வேண்டாமா? எதை வேணும்னாலும் தப்பா

பேசலாம். ஆனா நம்ம நட்பைக் கொச்சைப் படுத்திப் பேசியிருக்கக் கூடாது, கல்யாண். பேசியிருக்கக் கூடாது!''

''மறந்துடு ப்ளீஸ்! இதைத் தவிர வேற எதையும் என்னால சொல்ல முடியாது.''

''சரி... உங்களுக்காக முயற்சி பண்றேன்!'' துளிர்க்காத கண்களைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

''தாங்க்ஸ், சந்தனா... நேரமாச்சு.. நான் கிளம்பறேன்!''

''வீட்டுக்குத்தானே போறீங்க? நானும் வர்றேன்..''

என்னது? இவள் என்னோட பைக்கிலா? வேற வினையே வேண்டாம். மித்ராவுக்குத் தெரிந்ததோ.. என்னைத் தூக்கிப் போட்டு மிதித்தே சாகடிப்பாள். இந்தப் பெண்ணுக்காவது விவஸ்தை வேண்டாமா?

''என்ன கல்யாண் யோசிக்கிறீங்க?''

''அ.. அதில்லே, சந்தனா.. நா.. நான் இப்ப வீட்டுக்குப் போறேன்னு யார் சொன்னது? எம்.டி.யோட வீட்டுக்குப் போய்க்கிட்டிருக்கேன். உடனே வரச் சொன்னார்,'' என்றான் பதட்டமாய்.

''ஓஹோ.. அப்படியா?'' என்றாள் அசுவாரஸ்யமாய்.

''ஓகே.. பை!'' பைக்கைச் சீற விட்டான்.

கடந்து போனவனை ஏமாற்றத்துடன் பார்த்தாள்.

தவிர்க்கிறாயா, கல்யாண்? எத்தனை முறை உன்னுடன் பைக்கில் வந்திருக்கிறேன்! இப்போது தேடிப் பிடித்து ஒரு பொய்யைச் சொல்லிவிட்டுப் போகிறாயா? போ..!

அடுத்த அரை மணி நேரத்தில் பஸ்ஸில் வந்திறங்கிய சந்தனா, வேண்டுமென்றே கல்யாண் வீட்டுத் தெருப் பக்கமா நடந்து சென்றாள், தன் வீட்டிற்கு.



அவள் நினைத்தது போலவே, கல்யாண் வீட்டு வாசலில் அவன் பைக் நின்றிருந்தது.

இதழோரம் கேலியாய்ப் புன்னகை பிறக்க... தன் வீட்டை நோக்கி வேகமாய் நடந்தாள் சந்தனா.

★ ★ ★

அதிசயமாய் அன்று நிதானத்திலிருந்தான், பிரபாகரன். சுபத்ராவுக்கு வியப்பாய் இருந்தது.

'இன்று காந்தி ஜெயந்தி கூட யில்லையே - கடை மூடி இருக்க? அப்படியே இருந்தாலும் முன்பே எச்சரிக்கையாய் வாங்கி வைத்துக் குடிப்பவனாயிற்றே!'' யோசித்தபடியே சமையலில் ஈடுபட்டிருந்தாள்.

''மஞ்சு.. மஞ்சும்மா!'' குரல் உயர்த்தி அழைத்தான் பிரபாகரன்.

''இதோ வர்றேனப்பா!'' படித்துக் கொண்டிருந்த பாடப் புத்தகத்தைக் கவிழ்த்து வைத்துவிட்டு, அம்மாவிடம் கண்களாலேயே அனுமதி வாங்கிக் கொண்டு, படியிறங்கி ஓடினாள், மஞ்சு.

சுபத்ரா மேல் படிக்கட்டிலேயே நின்றிருந்தாள்.

எதற்காக அழைத்தான்?

''என்னப்பா?'',

''வா.. கோவிலுக்குப் போய் வரலாம்!''

''கோவிலுக்கா? ஏனப்பா? இன்னைக்கு உங்க பிறந்த நாளா?''

''பிறந்த நாளா? நான் செத்து ரொம்ப நாள் ஆச்சுடா! இன்னைக்கு என் பொண்டாட்டியோட இறந்த நாள். அவளோட ஆத்மா சாந்தியடையணும்னு வேண்டிக்கப் போகிறேன், புறப்படு.''

''நா.. நான் வரலேப்பா.. நாளைக்கு முழுப் பரிட்சை. படிச்சிட்டிருக்கேன். இன்னொரு நாள் கண்டிப்பா வர்றேன்ப்பா..!'' என்றாள் பதற்றமும், குழப்பமுமாய்.

மகளையே சில கணங்கள் வெறித்துப் பார்த்தான்.

''படிச்சுப் படிச்சுப் புத்தியை வளர்த்து அவளை மாதிரி நீயும் கெட்டுப் போகாதே.. அவ்வளவுதான் சொல்வேன்! போ.. போ...'' எரிச்சலாய்க் கூறிவிட்டு வெளியேறினான்.

அத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த சுபத்ராவிற்கு அப்போதுதான் உறைத்தது.

'அடடா... இன்னைக்கு என்னோட கல்யாண நாள் இல்லையா? எப்படி மறந்து போனேன்?'

'ஆமா.. ஞாபகம் வச்சுக்கிட்டா மட்டும்? அப்படியென்ன கூத்தும் கும்மாளமுமாய்ப் புருஷனோட வாழ்ந்துக்கிட்டிருக்கியா.. கொண்டாடுவதற்கு?' மனசு கேலி செய்தது.

மஞ்சு அம்மாவின் அருகில் வந்து நின்றாள்.

சட்டென அம்மாவை இடுப்போடு அணைத்துக் கொண்டு விம்மினாள்.

''எனக்குப் பிடிக்கலேம்மா. நீ உயிரோட இருக்கும் போதே செத்துட்டதா அப்பா சொல்லும்போது வேதனையா இருந்துச் சும்மா... இவர் வேண்டாம்மா. நாம வேற எங்கயாவது போய்டலாம்மா!''

திகைத்துப் போய்ச் சுபத்ரா மகளை இறுக அணைத்துக் கொண்டாள்.

''மஞ்சு..! அப்படியெல்லாம் பேசக் கூடாது. நீ சின்னப் பொண்ணு. யாரையும் எதிரியா நினைக்கக் கூடாது. அவர் உன்னோட அப்பாடா. எதை வேணும்னாலும் பேச உரிமை இருக்கு. அவர் என்னை வெறுத்தாலும் உன் மேலே அன்பாயிருக்கிறார்.. இல்லையா? உன்னோட எண்ணமெல்லாம்



படிப்பு மேலே மட்டும்தான் இருக்கணும். எல்லாத்துக்கும் சேர்த்துக் கஷ்டப்பட துக்கப்பட நான் இருக்கேன். புரியுதா? இந்த மாதிரி எண்ணம் மறுபடி வரவே கூடாது... என்ன?''

தாயைப் பரிதாபமாய்ப் பார்த்தாள். மெல்லத் தலையாட்டினாள்.

★ ★ ★

மருமகள் கொடுத்த காபியை ஆர்வமாய் வாங்கிப் பருகினாள் கனகம்.

''இன்னைக்கு என் பிறந்த நாளும் அதுவுமா.. நீ நம்ம வீட்டுக்கு வருவேன்னு எதிர்பார்க்கவே இல்லேம்மா! சர்ப்ரைஸ் கிஃப்ட் இது!'' கல்யாண் மனம் நிறைந்து சொன்னான்.

''மொத்தமா க்ஷேத்திராடனம் கிளம்பியாச்சு. காஞ்சி காமாட்சி அம்மனைத் தரிசிக்க வந்தோம். சரி, வந்தது வந்தோம், பக்கத்திலேயே சென்னை. உன் பிறந்த நாள் வேற. பார்க்கணும் போல இருந்துச்சு. பஸ் பிடிச்சுத் தனியே வந்துட்டேன். மதியம் இருந்து சாப்பிட்டுட்டுத்தான் போவேன்!''

''கண்டிப்பாம்மா! உன்னோட சேர்ந்து சாப்பிடணும்னு எனக்கும் ஆசையா இருக்கு! தரிசனம் முடிச்சிட்டு எல்லோரும் இங்கேதானம்மா வருவாங்க?''

''இல்லேப்பா! அங்கே ஓட்டல்ல அறை எடுத்துத் தங்கியிருக்காங்க. அங்கேர்ந்தே மதுரைக்குப் போறதா முடிவு பண்ணியிருக்கோம். சாப்பிட்டு முடிச்சதும் காஞ்சிபுரம் கிளம்பிடுவேன். மித்ரா... வெந்நீர் வச்சுத் தாம்மா... குளிக்கணும்!''

''இதோ.. போட்டுடறேன், அத்தை!'' நகர்ந்தாள்.

''சரிம்மா. ஓய்வு எடுத்துக்க. நானும் மித்ராவும் கோவிலுக்குப் போய்ட்டு வந்திடறோம்!''

''சரிப்பா.''

அரை மணி நேரம் கடந்தது.

மனைவி பரிசளித்த உடையில் அழகு கூடித் தெரிந்தான், கல்யாண்.

''புறப்படலாமா?'' பட்டுப் புடவையில், தலை நிறைய மல்லிகையில் லட்சுமி தேவி போல் வந்து நின்ற மனைவியை அள்ளி அணைத்து முத்தமிட்டான். ''தாங்க்ஸ்டா. டிரஸ் செலக்ஷன் சூப்பர்!''

''போதும், விடுங்க. புடவை கசங்குது!''

''நானே சரிபண்ணி விடறேன்!'' நீவிச் சரி பண்ண முயல, அவன் குறும்பை உணர்ந்தவளாய் நகர்ந்தாள்.

''அய்யா மடிப்பைச் சரிபண்ண ஆரம்பிச்சா கோவிலுக்குப் போன மாதிரிதான்... நானே பண்ணிக்கறேன்.. கிளம்பலாமா?'' என்றாள், சரி செய்தபடி.

''ஒரு அருமையான வாய்ப்பை நழுவ விட்டுட்டியே.. கல்யாண்!'' மேலே பார்த்துப் புலம்பினான்.

''ரொம்பத்தான் வழியாதீங்க. வாங்க!'' அவனை இழுத்துக் கொண்டு நடந்தாள்.

அப்போது பாக்கெட்டிலிருந்து செல்போன் அழைத்தது. பேசினான்.

''ஹலோ..''

''...!''

''ரொம்ப தாங்க்ஸ் மேடம்..!'' முகம் மலர்ந்தது.

''....''

''ஆமாம்.. கோவிலுக்குத்தான் கிளம்பிக்கிட்டிருக்கோம்!''

''....''

''ம்... சூப்பரா ஒரு பரிசு கொடுத்தா.''



''....''

''ஒக்கே... தாங்க்ஸ்.. பை மேடம்!''

அணைத்து, பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

''யாருங்க போன்ல?''

''சுபத்ரா மேடம்! பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னாங்க!''

''ஓ.. அவ்வளவு பிஸியிலேயும் உங்க பிறந்த நாளை எல்லாம் ஞாபகம் வச்சிருக்காங்களே.. பெரிய விஷயம்தான்!'' ஏனோ, அவள் அவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு வாழ்த்துச் சொன்னதை நல்ல விதமாய் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, மித்ராவினால்.

★ ★ ★

பகல்!

மணக்க மணக்க உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தாள், மித்ரா.

செல்போன் அழைத்தது.

சின்னத் திரையில் சந்தனா என்கிற பெயர் ஒளிர்ந்தது.

கல்யாண் சங்கடத்துடன் 'ஹலோ' என்றான்.

''...''

''ம்..''

''....''

''தாங்க்ஸ்..''

''....''

''சரி..''

அவன் ஒற்றை வார்த்தையில் பதில் கூற... மித்ராவிற்கு உள்ளுக்குள் கொதித்தது.

சட்டென செல்போனைப் பிடுங்கிக் காதில் வைத்துக் கொண்டாள்.

''புரியுது... கல்யாண். மித்ரா பக்கத்திலே இருக்காளா? ஆபீஸ்லே இருப்பீங்கன்னு பண்ணிட்டேன். நாளைக்குப் போன் பண்றேன்... ஓக்கே!'' என்றாள் மறுமுனையில், சந்தனா.

இது போதாதா மித்ராவிற்கு?

கணவனைக் கனல் கக்கும் விழிகளோடு ஏறிட்டாள்.



## 16

''மித்ரா..! என்ன இது அநாகரிகம்? பேசிக் கிட்டிருக்கும் போது போனைப் பிடுங்கி ஒட்டுக் கேக்கிறது தப்பில்லையா?'' கல்யாணுக்குக் கோபம் எட்டிப் பார்த்தது.

''அப்படிக் கேட்டதால்தானே நீங்க எப்பேர்ப் பட்ட நாகரிகமான ஆள்னு தெரிஞ்சுது!'' குரலை உயர்த்தினாள், மித்ரா.

சாப்பிட்டு முடித்து ஓய்வாகத் தொலைக்காட்சியில் கவனம் பதித்திருந்த கனகம் இவர்களைத் திரும்பிப் பார்த்தாள்.

''மித்ரா... என்ன பேசறோம்னு யோசிச்சுத்தான் பேசறியா? அம்மா இருக்காங்க.. வாயை மூடு!''

''நான் ஏன் வாயை மூடணும்? உங்கம்மாவும்தான் தெரிஞ்சுக் கட்டுமே, தன் பிள்ளை எவ்வளவு மட்டமான வர்ன்னு!''

''மித்ரா..! என் கோபத்தைக் கிளறாதே! இல்லாத ஒரு பிரச்சனையைச் சொறிஞ்சு சொறிஞ்சு புண்ணாக்குகிற கதையா பெரிசாக்கறதே உனக்கு வழக்கமாப் போச்சு.''

''இல்லாத பிரச்சனையைப் பெரிசாக்க நான் என்ன பைத்தியக்காரியா? எனக்கு இப்ப ஒரு உண்மை தெரிஞ்சாக ணும். அந்த வீணாப் போன சந்தனாவோட இன்னமும் தொடர்பு வச்சிருக்கீங்களா?''



''படிச்சவளாடி நீ? எவ்வளவு கேவலமான ஒரு கேள்வியைக் கேக்கறே?'' சாப்பாட்டுத் தட்டிலேயே கையைக் கழுவினான் கோபமாய்.

''கோபப்படற மாதிரித் திசை திருப்பி உங்களோட தப்பை மறைக்கப் பார்க்காதீங்க.. கேட்டதுக்குப் பதில் வேணும் எனக்கு.''

''என்ன பதில் வேணும்? இன்னைக்கு என் பிறந்த நாள். ஒவ்வொரு வருஷமும் சந்தனா வாழ்த்துச் சொல்றது வழக்கம். அதே மாதிரி இன்னைக்கும் சொன்னா. இதிலே எங்கே தப்பைக் கண்டுபிடிச்சே?''

''அது தப்பில்லேதான். ஆனா 'பக்கத்துல மித்ரா இருக்காளா? நீங்க ஆபீஸ்லே இருக்கீங்கன்னு நினைச்சு போன் பண்ணிட்டேன். நாளைக்கு ஆபீஸுக்கு போய்ட்ட பிறகு போன் பண்றேன்'னு சொன்னாளே. அது தப்பில்லையா? ஸோ, எனக்குத் தெரியாம, நீங்க ரெண்டு பேரும் ஊர் சுத்தறீங்க. பழகிக்கிறீங்க... பேசிக்கிறீங்க!''

''அய்யோ..! மித்ரா..! அபத்தமா கற்பனை பண்ணாதே. அவ யதேச்சையா எதையோ பேசியதை வச்சு ஒரு நல்ல நாளை ஸ்பாயில் பண்ணாதே!''

''நல்ல நாள்தான்! உன் பவிசு என்னன்னு தெரிஞ்சுக் கிட்டேன். நல்ல நாள்தான்!''

''என்ன மித்ரா, மரியாதை குறையுது?''

''உனக்கெல்லாம் என்னய்யா மரியாதை? கட்டின பொண்டாட்டிக்குத் துரோகம் பண்றவனெல்லாம் நாசமாத்தான் போவானுங்க!''

''என்னடி நானும் பார்த்துக்கிட்டுதான் இருக்கேன். ஓவரா பேசிக்கிட்டே போகிறே?'' கனகம் அவளருகே வந்தாள்.

''கோவில் கோவிலாப் போய்ப் புண்ணியம் தேடிக்கிறப்ப உங்க பிள்ளையோட பாவத்தையும் சேர்த்துத் தலை முழுகிட்டு வாங்க!''

"என்னடா இவ இப்படியெல்லாம் பேசறா?"

"இது வழக்கமா நடக்கறதும்மா. உனக்கு நேரமாச்சே. நீ கிளம்பும்மா."

"ஏன் அவங்களும் தெரிஞ்சுக்கட்டுமே, உன் பவிசைப் பத்தி.."

"சீ... வாயைக் கழுவுடி! நீ யாருடி? என் புள்ளையை உனக்கு எத்தனை வருஷமாத் தெரியும்? என்னடி தெரியும் அவனைப் பத்தி? இந்த அழகுல காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டாளாம்...? என்ன புரிஞ்சு வச்சிருக்கே? உன்னைவிட எல்லா விதத்திலேயும் எத்தனையோ வரன்கள் வீடு தேடி வந்தும் மித்ராவைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு ஒத்தைக் கால்ல நின்னவன் என் பிள்ளை! எத்தனையோ வருஷமா இந்த வீட்டுக்கு வந்து போய்க்கிட்டிருந்தவதான் சந்தனா. மனசிலே எதையும் வச்சுக்காத கள்ளம் கபடமில்லாத பொண்ணு. நீதான் வந்து எல்லாத்திலேயும் நஞ்சு கலக்கறே. மனசைச் சுத்தமா வச்சுக்க. அநாவசியமா சந்தேகப்பட்டு என் பிள்ளையோட வாழ்க்கையைக் கெடுத்துடாதே! ஒழுங்கா, நல்லபடியா அவன் மனசறிஞ்சு குடும்பம் நடத்தற வழியைப் பார்!"

"ஓகோ.. இப்பத்தான் புரியுது.. புள்ளையோட தப்புகளைக் கண்டும் காணாம விட்டுட்டு... எனக்கே அட்வைஸ் பண்றீங்களா?"

"அநாவசியமாப் பேசினே... பல்லைத் தட்டிடுவேன்!"

"ஆமா... அதுவரைக்கும் ஈன்னு காட்டிட்டிருப்பேன்! பதிலுக்கு எனக்கும் செய்யத் தெரியும்!"

"என்னடி சொன்னே? எங்கம்மாவையே கை நீட்டி அடிச்சிடுவியா.. நாயே!" எங்கிருந்துதான் அவ்வளவு ஆத்திரம் வந்ததோ? கல்யாண் சங்கமித்ராவை இழுத்து நிறுத்திப் பளாரென அறைந்தான்.



கண்களுக்குள் மின்மினிப் பூச்சிகள் பறந்தன.

கன்னம் சூட்டில் ஜிவுஜிவுத்தது. வலி தாங்க மாட்டாமல் கண்கள் பொங்கின.

சங்கமித்ரை தன் வாழ்நாளில் இப்படியொரு அடியை வாங்கியதில்லை. பெற்று வளர்த்தவர்கள் கூட இதுவரை அடித்ததில்லை.

அவமானமாய் உணர்ந்தாள்.

கல்யாண் அடித்து விட்டானா? என்னையா? உருகி உருகிக் காதலித்துக் கல்யாணமும் செய்து கொண்டு, தான் பக்கத்தில் இல்லாவிட்டால் பசிப்பதுமில்லை, உறக்கமும் இல்லை என்று பரிதவித்தவனா அடித்து விட்டான்? என்னை விட இவனுக்கு அம்மாதான் முக்கியமா? இவனுடன் வாழ்க்கையின் கடைசி வரை வருகிறவள் நான்தானே! பெற்றவள்தான் என்றாலும் பாதியிலேயே போகப் போகிறவளுக்கு என்னைப் போல..! இனி, இங்கு எனக்கென்ன வேலை?

கணவனை உடல் தகிக்க ஏறிட்டாள்.

"அடிச்சிட்டேயில்ல! பார்த்துக்கறேன் உன்னை! என்னைத் தேடி வ்ற வேலை வச்சுக்காதே! அடிப்பாவி..! எங்களுக்குள் சண்டையை மூட்டி வைக்கிறதுக்குன்னே காஞ்சிபுரத்திலிருந்து வந்தியா? இப்ப திருப்தியா? உருப்பட மாட்ட... நாசமாப் போய்டுவே!" தன்னிலை மறந்து கத்தினாள்.

அந்த நொடியே வீட்டை விட்டு வெளியேறினாள்.

கனகம் திக்பிரமையோடு நின்றிருக்க, கல்யாணோ, அவளைத் தடுக்கத் திடமின்றித் தொப்பென்று சேரில் அமர்ந்தான்.

"என்ன கல்யாண்... அவ இந்தப் பேச்சுப் பேசிட்டுப் போகிறா?"

"அவசர புத்தி... வேறென்ன சொல்ல? உனக்கு நேரமாச்சேம்மா. நீ புறப்படு!"

''உன்னை இப்படி விட்டுட்டுப் போகவே கஷ்டமா இருக்குப்பா! பார்க்க சாதுவா இருந்துட்டு மோசமா பேசிட்டுப் போறாளே.. 'ரொம்ப இடம் கொடுத்திட்டே. ஆரம்பத்திலேயே இந்த அடியை அடிச்சிருந்தா இவ்வளவு தூரம் ஆடியிருக்க மாட்டா. இதோ பாருப்பா கல்யாண். உங்கப்பா ஓங்கி ஒரு குரல் கொடுத்தாக் கூட ஈரல் குலை நடுங்கும் எனக்கு. அப்படி யெல்லாம் பயத்தோட, மரியாதையோட குடும்பம் நடத்தினவ நான். ஆம்பளையோட கை உசரலாமே தவிர, பொம்பளை யோடு கை உசரக் கூடாது. அவளாத்தானே போனா? அவளாவே திரும்பி வரட்டும். நீ போய்க் கெஞ்சிக் கூத்தாடி அழைச்சிட்டு வராதே.. சொல்லிட்டேன். என்ன?''

''சரிம்மா.''

சற்று நேரத்தில் கனகம் புறப்பட்டுச் சென்று விட்டாள்.

வீடு படு அமைதியாய்ச் சகிக்க முடியாததாய் இருந்தது. சங்கமித்ரையை நோக்கி மனசு விரைந்தது.

அம்மா சொன்னது நினைவிற்கு வரக் கடிவாளம் போட்டான்.

வரட்டும். அவளே வரட்டும். போகத் தெரிந்தவளுக்கு, வர வழி தெரியாதா? வரட்டும்!

கோபாவேசமாக வீட்டை விட்டு வெளியேறிய சங்க மித்ரையை, அதே தெருவில் இரண்டு வீடு தள்ளியிருந்த தன் தோழி வீட்டின் மாடியறை ஜன்னலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சந்தனா வாய் விட்டுச் சிரித்தாள், ஆனந்தமாய்.

அவள் நினைத்தது நடந்து விட்டது!

★ ★ ★

**கா**ற்றில் படபடத்த காலண்டரில் நேற்றைய தேதியைக் கிழித்தாள் சங்கமித்ரை.

அவள் அம்மா வீட்டுக்கு வந்து ஒரு வாரமாகி விட்டது. இதுவரை கல்யாண் வந்து எட்டிக் கூடப் பார்க்கவில்லை.



குறைந்தது ஒரு போன் கூடப் பண்ணவில்லை. இதுநாள்வரை அவள் கோபித்துக் கொண்டபோதெல்லாம் நாய்க் குட்டியாய்ப் பின்னாடியே அலைவான். பிச்சைக்காரனைப் போல் வாசலிலேயே பழியாய்க் கிடப்பான்.

ஆனால், இப்போது கையும் களவுமாய்ப் பிடித்திருக்கிறேன். அந்தப் பயம் கூட இல்லையே! மனசு உறுத்தவில்லையே! பயம் விட்டுப் போயிற்றா? சந்தனா வீட்டிற்கு வந்து கும்மாளம் போட்டுக் கொண்டிருப்பாளோ?

செந்தாமரை காபியுடன் அறைக்குள் வந்தாள்.

வாங்கிப் பருகிய மகளை ஆதங்கம் அகலாது பார்த்தாள்.

''நீ தப்புப் பண்றியோன்னு தோணுது!''

''என்னம்மா உளர்றே?''

''நீ இங்கே வந்து இத்தனை நாள் ஆகிவிட்டது.ஆனால், மாப்பிள்ளை உன்னை அழைச்சிட்டுப் போக வரவேயில்லை. ஏன்? புரியுதா உனக்கு?''

''ஏன் புரியாம? என் முகத்திலே விழிக்க ஏது தைரியம்?''

''இங்கேதான்டி தப்புப் பண்றே! பாலாஜி கூட மாப்பிள்ளை கிட்டே பேசினான்... அவளாதானே போனா? நான் அனுப்பலையே.. அவளாகவே வரட்டும்! நான் எந்தத் தப்பும் பண்ணலே.. எதுக்காக அவகிட்டே வந்து கெஞ்சணும்னு கேட்டிருக்கார். கல்யாண் நல்ல பிள்ளை, மித்ரா. உன் மேலே எவ்வளவு பாசமாயிருந்தார்னு அறியாதவளா நான்? உன்னைப் பிரிஞ்சு ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாதவர்... ஏழு நாள் பிரிஞ்சிருக்கார்னா.. நீ அந்தளவு காயப்படுத்தி இருக்கே. சமைக்கக் கூட ஆளில்லாம தனியா கஷ்டப்படறதையும் பொறுத்துக்கிட்டு இருக்கார். என்ன அர்த்தம்? இந்தக் காலத் திலே ஆண்களும், பெண்களும் நண்பர்களா இருக்கிறது சகஜமான விஷயம். அப்படி அவன் எல்லாம் தப்பான கண்ணோட்டத்திலே பார்க்கணும்னா.. நீ பாலாஜியோட

நண்பர்கள் கிட்டே பேசினதையெல்லாம் தப்பா எடுத்துக் கணுமே! சும்மா மூச்சு விட்டால் கூடச் சண்டை போடற பழக்கத்தை விட்டுடு மித்ரா. புருஷன் காத்தாடி மாதிரி. நூல் உன் கையிலேதான் இருக்கணும். அப்புறம் விட்டுட்டு அவஸ்தைப்படாதே! உன் ஈகோவையெல்லாம் ஒதுக்கி வச்சிட்டு மாப்பிள்ளைக்கு போன் பண்ணிப் பேசு. அவ்வளவுதான் சொல்லுவேன். உன் வாழ்க்கையைச் சிக்கல் இல்லாம அமைச்சுக்கிறது உன் கையிலதான் இருக்கு!''

அம்மாவின் அறிவுரை காபியுடன் கசப்பாய்த் தொண்டைக் குள் இறங்கியது, சங்கமித்ரைக்கு.

★ ★ ★

பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்து கொண்டிருந்தாள், சந்தனா.

மனசு கும்மாளமிட.. பிடித்த பாடலை முணுமுணுத்தபடி உற்சாகத்தோடு நடையை எட்டிப் போட்டாள்.

அப்போது...

அவளுக்குக் குறுக்கே போலீஸ் ஜீப் வந்து நின்றது.

அதிலிருந்து பாலாஜி இறங்கினான்.



## 17

வெலவெலத்துப் போனாள், சந்தனா.

மித்ராவின் அண்ணன் அல்லவா? இவன் ஏன் என்னை நோக்கி வருகிறான்? பார்வையே சரியில்லையே!

வலியப் புன்னகையைத் தருவித்துக் கொண்டாள்.

''ஹலோ.. இன்ஸ்பெக்டர் சார்! பார்த்து ரொம்ப நாளாச்சு. நல்லாயிருக்கீங்களா?''

''ம்.. நான் கூட உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சேன்னு தான் இப்ப பார்க்க வந்தேன்!'' என்றான், அவளைக் கண்களால் அளந்தபடி.



''ஓ!'' உள்ளுக்குள் நடுங்கிற்று.

''நீ எப்படி யிருக்கே? உடம்புக்கு எப்படி யிருக்கு?''

''உ.. உடம்புக்கு என்ன?''

''ரொம்பக் கொழுப்பேறிப் போயிருக்கியே..! அதான் கேட்டேன்.''

''என்ன சார், பேச்சு ஒரு மாதிரியாப் போகுது. காக்கிச் சட்டையைப் போட்டுக்கிட்டா என்ன வேணாலும் பேசிட லாம்னு எண்ணமா? எனக்கும் சட்டம் தெரியும்..!'' படபடத் தாள்.

''எனக்கும் உன் யோக்யதை தெரியும்!''

''...?''

''என்னடி முழிக்கிறே? உனக்குத் தெரிஞ்ச அதே சட்டத்தை வச்சு எளிதா உன்னை ஜெயிலுக்கு அனுப்ப முடியும் என்னால?''

''ஏன்? என்னை ஏன் ஜெயிலுக்கு அனுப்பணும்? நான் என்ன தப்புப் பண்ணினேன்?''

''சொல்லவா?''

''....?''

''மித்ரா உன் மேல பழி சொன்னாங்கற காரணத்துக்காக அவளைப் பழிவாங்க நினைச்சே. அதைச் சொல்லவா? கல்யாணை உன் வலையில வீழ்த்தணும்னு நினைச்சி அவனோட அலுவலக பஸ் ஸ்டாண்ட்ல காத்திருந்தியே... அதைச் சொல்லவா? அவனோட பிறந்த நாள் அன்னைக்கு எதிர் வீட்லே இருந்துக்கிட்டே அவனுக்கு ஒண்ணும் தெரியாத மாதிரி போன் பண்ணிக் குட்டையக் குழப்பி மித்ராவை வீட்டை விட்டு வெளியேற்ற வச்சியே.. அந்த சமயோசித புத்தியைப் பத்திச் சொல்லவா? சொல்லும்மா.. எதைச் சொல்லணும்?''

வியர்த்துக் கொட்டிற்று, சந்தனாவுக்கு.

"இ.. இதென்ன.. நீங்களா எதையாவது கற்பனை பண்ணிச் சொல்வீங்க. நான்.."

"அடச் சீ..! வாயை மூடு! வயசுப் பொண்ணாச்சே, கல்யாணமாக வேண்டிய பொண்ணாச்சேன்னு பார்க்கிறேன். இல்லேன்னா ரோடுன்னு கூடப் பார்க்காம ஜீப்ல ஏத்திக் கிட்டுப் போய்டுவேன். ஜாக்கிரதை. நீ பண்ணின காரியத்துக்கு பிராத்தல் கேஸ் போட்டு உள்ளே தள்ளிடுவேன். கவனமா இருந்துக்க. உனக்குக் கல்யாணமானா உன் புருஷனோட வேற பொண்ணுங்க ஜாலியா தொட்டுப் பேச அனுமதிப் பியா? நட்பைக் கொச்சைப் படுத்தாதே! ஒழுங்கா இருந்துக்க...!"

சந்தனாவின் கண்களில் கரகரவென வழிந்தது.

"இனிக் கல்யாண் இருக்கிற பக்கம் தலை வச்சுப் படுக்கக் கூடாது. சரியா?"

"ம்...!" தலையாட்டினாள்.

"உன்னால ஒரு குடும்பம் கெட்டுக் குட்டிச் சுவராப் போச்சுங்கிற பேரை எடுக்காதே! சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கிட்டு அடுத்தவங்களை நிம்மதியா வாழ விடு! என்னைக்கு உன்னால மித்ரா வாழ்க்கையிலே பிரச்சனை வர ஆரம்பிச்சதோ.. அன்னேலேர்ந்து உன்னைக் கண்காணிச்சிட்டு தான் வர்றேன். இனிமேலும் உன் குறுக்குப் புத்தியைக் காட்டி னியோ... ஒட்ட நறுக்கிடுவேன். எடுய்யா வண்டிய..." அவளை எச்சரித்து விட்டு ஜீப்பில் ஏறி அமர்ந்தான் பாலாஜி.

ஜீப் விரைந்து திரும்பிக் கடந்தது.

சுற்றிலும் உள்ளவர்கள் அவளையே பார்த்தனர்.



கூனிக் குறுகிப் போயிருந்த சந்தனாவுக்கு உடம்பெல்லாம் புழுக்கள் நெளிவதைப் போன்று அருவருப்பாய் இருந்தது. வாய் விட்டுக் கதற வேண்டும் போல் இருந்தது.

வந்த வழியே சென்றாள் விரைவாய்.

★ ★ ★

ஒரு கஸ்டமர் வீட்டுக்குச் சென்றுவிட்டு அப்போதுதான் அலுவலகம் திரும்பிய சுபத்ரா, கல்யாணின் டேபிள் மீது டேப்ரிக்கார்டர் ஒன்று அமர்ந்திருந்ததைப் பார்த்தபடி, தன் சீட்டில் அமர்ந்தாள்.

தன் பணியில் மூழ்கியிருந்த கல்யாண் அவளைப் பார்த்து விட்டான்.

"வாங்க மேடம்... ரொம்ப லேட்டாயிடுச்சு போல. சாப்பிட்டீங்களா?"

"இனிமேல்தான் சாப்பிடணும். லேட்டானதுக்கு சந்தோஷ மான காரணமிருக்கு. புது வாய்ப்பு ஒண்ணு கிடைச்சிருக்கு. நான் போயிருந்த கஸ்டமர் வீட்டுக்கு அவங்க உறவினரான கன்ஸ்ட்ரக்ஷன் துறையிலே வெற்றி பெற்ற தொழிலதிபர் ஒருவரும் வந்திருந்தார். நம்மோட மாடுலர் கிச்சனைப் பார்த்துட்டு ரொம்ப பாராட்டினதோடயில்லாம, தான் கட்டிக்கிட்டிருக்கிற பில்டிங்குக்குப் பதினெட்டு மாடுலர் கிச்சனை செட் பண்ணித் தரச் சொல்லி அட்வான்ஸ் பணமும் கொடுத்துட்டார்!"

"வெரி குட்!" என்றான் எதிர்பாராத மகிழ்ச்சியில்.

"நாளைக்கு நீங்களும், நானும் அவரோட அலுவலகத் துக்குச் செல்ல வேண்டியிருக்கு!"

"கண்டிப்பாகப் போகலாம், மேடம்! மீதி அப்புறம் பேசலாம், முதல்ல சாப்பிடுங்க!"

"அதென்ன டேப்ரிக்கார்டர்!"

''ரிப்பேரா யிருந்தது. கடையில் குடுத்திருந்தேன். சரி பண்ணிக் குடுத்தாங்க! மித்ராவுக்குத் தனிமையிலே பாட்டுக் கேக்கறதுன்னா ரொம்பப் பிடிக்கும்!'' என்றான்.

அப்போது,

எம்.டி. அழைப்பதாக பியூன் வந்து அழைக்க... உடனே எழுந்து சென்றான் கல்யாண்.

பேகைத் திறந்து டிபன் பாக்ஸை எடுத்து மேஜையிலே வைத்தவள் நினைத்துக் கொண்டவளாய் டேப் ரிக்கார்டரை ஆன் செய்தாள்.

'கந்தன் காலடியை வணங்கினால்'

- என்ற பக்திப் பாடல் ஒலிபரப்பானது.

அதை ரசித்தபடி சாப்பிடத் துவங்கினாள்.

★ ★ ★

சங்கமித்ரை கோவில் வளாகத்தினுள் அமர்ந்திருந்தாள்.

அவள் உள்ளம் போராட்டக் களமாய் இருந்தது.

அண்ணன் கூறிய விஷயங்கள் அவளுள் ஓரளவு தெளிவையும், சந்தோஷத்தையும் தந்தாலும், மனதில் ஓரளவு சந்தேகம் இருந்து கொண்டேதான் இருந்தது.

சந்தனாதான் திட்டம் போட்டுப் பிரச்சனையை உருவாக்கி இருக்கிறாள், கல்யாண் மீது எந்தத் தவறும் இல்லை என்று விளக்கிச் சொன்னான் பாலாஜி. அதன் பிறகே கோவிலுக்குக் கிளம்பி வந்தாள்.

அம்மாவின் அறிவுரை, அண்ணனின் தெளிவுரை, எல்லாமுமாக அவளை ஒரு முடிவுக்கு வர வைத்தன.

'அவருக்குப் போன் பண்ணிப் பேசினா என்ன?'

கோவிலை விட்டு வெளியில் வந்தவள், பொதுத் தொலைபேசி நோக்கிச் சென்றாள்.



கல்யாணின் செல்போனுக்கு எண்களை அழுத்தினாள்.

மறுபுறம் ரிங் போயிற்று...

சாப்பிட்டுக் கொண்டிருந்த சுபத்ரா... செல்போன் சிணுங்கியதைக் கண்ணுற்றாள்.

அடடா.. மறந்து இங்கேயே வச்சிட்டுப் போயிட்டாரே..!

சப்தம் நிற்கவில்லை.

முக்கியமான தகவலாய் இருக்கலாமோ? ஒருவேளை மித்ரா பண்றாளோ? எடுத்துப் பேசித் தகவலைச் சொல்லலாமா? பலத்த யோசனைக்குப் பின் செல்போனை எடுத்துப் பேசினாள்.

''ஹலோ..!''

எதிர்முனையில் கேட்ட பெண் குரல் சங்கமித்ரையைத் திடுக்கிட வைத்தது.

இது சுபத்ராவின் குரல் அல்லவா? அதெப்படி அவள் கையில் இவரின் செல்போன்? சாமி பாடல் வேறு ஒலிக்கிறதே.. அப்படியானால் அவர் அலுவலகத்தில் இல்லை. வெளியில் இருக்கிறார். கூடவே சுபத்ராவும். கற்பனையே கசந்தது.

''ஹலோ.. ஹலோ...'' சுபத்ரா கத்திக் கொண்டிருக்க, சில கணங்களுக்குப் பிறகு எதிர்முனை அமைதியானது.

யாராயிருக்கும்? ஏன் பேசவில்லை? வியப்புடன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே கல்யாண் அறைக்குள் நுழைந்தான்.

''கல்யாண்! உங்களுக்கு போன் வந்தது. எடுத்துப் பேசினேன். பேசாமல் கட் பண்ணி விட்டார்கள்,'' என்றாள்.

''மித்ராவாய் இருக்குமோ?'' எதிர்பார்த்துப் பார்த்து ஏங்கிப் போயிருந்த கல்யாண் சட்டென வாங்கி நம்பரைப் பார்த்தான்.

இல்லை.. இது மித்ராவின் நம்பர் இல்லை! தொய்ந்து போனான்.

''என்ன கல்யாண், ஒரு மாதிரியாகிட்டீங்க? ஏதாவது பிரச்சனையா?''

''ஆமாம் மேடம்... எனக்கு நம்பிக்கையான ஒரே நபர் நீங்கதான். உங்ககிட்டே எல்லாத்தையும் கொட்டினாதான் மனசு கொஞ்சமாவது சாந்தமாகும்.'' தவிப்பும் வேதனையுமாய் அவன் பேசியது அவளை அசைத்தது.

''என்ன விஷயம்... சொல்லுங்க!''

''இங்கே வேண்டாம். அலுவலக நேரம் முடியப் பத்து நிமிஷம்தான் இருக்கிறது. முடிந்ததும் வெளியில் போய்ப் பேசுவோமே!''

''சரி!'' என்றாள்.

★ ★ ★

கடற்கரை நடைபாதையோரம் கல்யாணும் சுபத்ராவும் நடந்து கொண்டிருந்தனர்.

காற்றுப் பிடுங்கிச் செல்ல முயற்சித்த சேலைத் தலைப்பை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டாள்.

கல்யாண் சொன்ன அனைத்தையும் கவனமாய்க் கேட்டாள்.

''சொல்லுங்க. இதில் என் தவறு என்ன இருக்கிறது? அவள் அப்படிப் பேசலாமா? என் அம்மா என்ன பாவம் பண்ணினாங்க? அவங்களையும் அவள் விட்டு வைக்கவில்லையே. வயசான காலத்தில் இப்படியொரு வேதனையா?''

''புரியது, கல்யாண். உங்க வேதனை புரியுது. ஆனா, மித்ரா சராசரிப் பொண்ணில்லை. அதுக்காக அவளைக் கெட்டவள்னு சொல்லிட முடியாது. உங்க மேலே உள்ள அளவு கடந்த காதல்தான் அவளை அப்படிப் பேச வச்சிருக்கு. இதிலே யார் முதல்ல இறங்கி வர்றதுன்னு காத்திருப்பது முட்டாள்தனம். ஊதிப் பெருசாக்காதீங்க.. மித்ராவை உடனே போய்



அழைச்சிட்டு வாங்க!'' பேசிக் கொண்ட வந்தவள், செருப்பில் சேலை தடுக்கித் தடுமாறி விழப்போக...

கண நேரத்தில் அவள் இடுப்பைத் தாங்கித் தடுத்தான் கல்யாண்.

அதே நேரம்... அதே சாலையில், கொதிக்கும் மனதுடன், ஆட்டோவில் வீடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சங்கமித்ரை...

அந்தக் காட்சியைப் பார்த்து விட்டாள்!



## 18

செந்தாமரை தவித்துக் கொண்டிருந்தாள். மறுபடி மகளின் அறைக் கதவைத் தட்டப் பதிலே வரவில்லை. அறையை ஒட்டிய ஜன்னலின் வழியே.. கட்டிலில் சங்கமித்ரை குப்புறடித்துப் படுத்திருப்பது மட்டும் தெரிந்தது.

பாவி மகள் இன்னைக்கென்ன பிரச்சனையைச் சுமந்து வந்திருக்காளோ? கோவிலுக்குப் போய்ட்டு வர்றேன்னுதானே போனா? பாலாஜி எல்லாம் எடுத்துச் சொன்ன பின் உணர்ந்தவளாய்த் தெளி வுடன் தலையாட்டினாளே! பிரச்சனை தீர்ந்தது என்று சந்தோஷப்பட்டேனே! வரும்போது பேயறைந்தவள் மாதிரி வந்தாளே. அதற்குள் என்ன ஆகிவிட்டது? கல்யாண் திட்டியிருப்பானோ?

''ஏன்டி பெண்ணே! கதவைத் திறயேன். நீ பாட்டுக்கு வீட்டுக்குள்ளே நுழைஞ்சதும் அறைக்குள்ளே புகுந்து தாழ் போட்டுக்கிட்டு, திறக்காம அழிச்சாட்டிம் பண்ணினா என்ன அர்த்தம்?''

''வாய மூடிக்கிட்டு உன் வேலையைப் பார்த்துக்கிட்டு போன்னு அர்த்தம்!'' உள்ளிருந்து ஆணவமாய் வந்தது குரல்.

மலைத்துப் போனாள் செந்தாமரை.

''பேசுவேடி.. பேசுவே... அதிகமாய்ச் செல்லம் கொடுத்து வளர்த்ததுக்கு ஓங்கிக் கன்னத்துல அறைஞ்சாலும் அறைவே! இந்த வாயை வச்சுக்கிட்டு வாழப் போனா எவன்தான் சகிச்சுக்குவான்? மகராசி பெத்து வளர்த்ததுக்கு என் பேரையும் நாறடிச்சிடாதே. செல்லமா வளர்த்தாலும் நல்லதைச் சொல்லித் தான் வளர்த்தேன். நீ இப்படி ஆணவம் பிடிச்சித் திரிவேன்னு நான் எதிர்பார்க்கலேடியம்மா! என்னமோ போ. உன் தலைல நீயே மண்ணள்ளிப் போட்டுக்காதே! அவ்வளவுதான் சொல்ல முடியும்.''

''ஒரு வார்த்தைக்கு நூறு வார்த்தை பதில் பேசியே சாகடிக்காதே. அப்பா ஏன் சவுதியே கதின்னு இருக்கிறார்ன்னு இப்பப் புரியுது. என் பிரச்சனையை எப்படிச் சமாளிக்கிறதுன்னு எனக்குத் தெரியும். யாரோட அட்வைசும் எனக்குத் தேவை யில்லை.''

''கடவுளே..! இவளை நீதான் காப்பாத்தணும்!'' வேதனை யுடன் முணுமுணுத்தபடி சமையலறை நோக்கிச் சென்றாள் செந்தாமரை.

சப்பாத்தியும் சென்னா மசாலாவும் சமைத்து முடித்துவிட்டு நிமிர்ந்தபோது, இரவு மணி எட்டைத் தாண்டியிருந்தது.

வாசலில் பைக் வந்து மூச்சடக்கும் சப்தம் கேட்டது.

'பாலாஜி இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டானா என்ன? வருவதற்குப் பன்னிரண்டுக்கு மேலாகி விடும் என்றானே!' கைகளை முந்தானையால் துடைத்துக் கொண்டே வாசலுக்கு வந்தவள், விழிகள் தெறித்து விழும்போல் ஆச்சர்யப்பட்டாள்.

படியேறி வந்துக் கொண்டிருந்தான் கல்யாண்.

''வாங்க மாப்பிள்ளே..''



''என்ன அத்தை, புதுசா மரியாதை? வழக்கம் போல் வாப்பா கல்யாண்னு கூப்பிடுங்க.. அதுதான் அந்நியோன்யமா யிருக்கு..''

''எப்டியோப்பா... இப்பவாவது வர வழி தெரிஞ்சதே உனக்கு.. சந்தோஷம்பா!''

பேச்சுச் சப்தம் கேட்டுப் படுக்கையில் பாம்பைப் போல் சடக்கெனத் தலை உயர்த்தினாள், சங்கமித்ரை.

வந்திருப்பது கல்யாணா? என்ன தைரியம்? உடம்பெல் லாம் கோபம் நெருப்பாய்ப் பற்றிக் கொண்டது.

''மித்ராவை அழைச்சிட்டுப் போகலாம்னு வந்தேன்!''

''தாராளமாய்க் கூட்டிட்டுப் போ! அவ உன்னோட சொத்தாச்சே!''

கதவைத் திறந்துக் கொண்டு வெளியில் வந்தாள், சங்கமித்ரை.

சோபாவில் அமர்ந்திருந்த கல்யாணுக்கு அதுவரை இருந்த கொஞ்ச நஞ்சக் கோபமும் பறந்து போனது. மனைவியை ஆசையுடன் ஏறிட்டான்.

''வா, மித்ரா. இப்படி வந்து உட்கார்!''

''எங்கே வந்தே?''

அந்தக் கேள்வியில் கல்யாண் மட்டுமல்ல, செந்தாமரையும் ஆடிப் போனாள்.

''ஏய்...! என்னடி பேசறே... மரியாதை இல்..''

''அம்மா.. ப்ளீஸ்.. என் விஷயத்தில் தலையிடாதே!'' முழுதாய்ப் பேச விடாமல் கை நீட்டித் தடுத்தாள்.

''பெத்தே. வளர்த்தே. அவ்வளவுதான் உன் லிமிட். இது நானே ஏற்படுத்திக்கிட்ட வாழ்க்கை. அதனால் நானே

சமாளிச்சுக்கிறேன். உன் திருவாயைக் கொஞ்சம் மூடிக்க... அது போதும். சொல்லுங்க சார்.. எங்கே வந்தீங்க?''

''ஏன் இவ்ளோ கோபமாய்ப் பேசறே? உங்கம்மாவைப் பார்... கண் கலங்கறாங்க.''

''தேவையில்லாத கதை யெல்லாம் எதுக்கு? என்ன விஷயமா இங்கே வந்தீங்க?''

எட்டிப் பார்த்த கோபத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

''உன்னை அழைச்சிட்டுப் போகத்தான் வந்தேன்!''

''ஏன்... நைட்டுக்கு வந்து படுத்துக்க சுபத்ரா வர மாட்டேன்னு சொல்லிட்டாளா?''

''ஏய்.. என்ன இது.. சுபத்ராவை..அவங்களைப் போய்... மித்ரா.. என்ன பேசறே நீ?''திடீரென வந்து விழுந்த வெடிகுண்டில் மூச்சுத் திணறிப் போனான் கல்யாண்.

''ஏன்.. அதிர்ச்சியா இருக்கா? இவளுக்கு எப்படிடா உண்மை தெரிஞ்சதுன்னு குழப்பமா யிருக்கா?''

செந்தாமரையும் மகள் பேசுவதைக் கண்டு விக்கித்துப் போயிருந்தாள்.

'வேணாம் மித்ரா... எல்லாத்துக்கும் ஒரு அளவிருக்கு. என் மரியாதைக்குரியவங்க சுபத்ரா. வயசிலேயும் பெரியவங்க. நல்ல நட்பைக் கொச்சைப்படுத்தாதே.. அப்புறம்.. நான் மனுஷனா இருக்க மாட்டேன்!'' விரல் நீட்டி எச்சரித்தான், உடலும் உள்ளமும் பதற...

''எது நட்பு? உடம்பையும் பகிர்ந்துக்கிறதா? உங்க ரெண்டு பேரோட அருமை பெருமையும் எனக்குத் தெரியும்.''

''வேணாம், மித்ரா... அளவுக்கதிகமாய்ப் பேசறே.. என் பொறுமையில கை வைக்காதே!''



''இன்னும் அதிகமாகப் பேசுவேன்.. என்ன பண்ணுவே? உங்கம்மா ஒருத்தனுக்கு மட்டுமே சுமந்து பெத்திருந்தா மறுபடி என்னைத் தேடி வராதே... நமக்குள்ள எல்லாமே முடிஞ்சு போச்சு..!'' ஆவேசத்தில் என்ன பேசுகிறோம் என்று உணராமல் வார்த்தைகளை அக்னியாய்க் கொட்டினாள்.

''ச்சீ!'' அவளை அருவருப்பாய் நோக்கியவன், மறு வார்த்தை பேசாமல் வீட்டை விட்டு வெளியேறினான்.

அடுத்த கணம்...

அவள் கன்னத்தில் பொளேரென அறை விழுந்தது.

அறைந்தவள் அம்மாதான்!

''பேயே...என்ன வார்த்தையடி பேசினே? உனக்கு இஷ்டம்னா காதலிப்பே, கல்யாணம் பண்ணிப்பே, பிடிக்க லேன்னா சண்டை போட்டுடுப் பிரிஞ்சு வந்துடுவே, இதுக்கு நடுவிலே எதுக்குடி பெத்தவங்களை இழுக்கற? ஒரு வார்த்தை யாலே அந்தத் தாயை அசிங்கப்படுத்திட்டியே. வெக்கமா இருக்குடி.. உன்னை இந்த வயித்திலேதான் சுமந்தேன்னு நினைச்சா.. அப்படியே குடலை உருவி எறிஞ்சிடலாம் போல அசிங்கமாயிருக்குடி.. சீ.. போ!'' அழுகையினூடே.... அவளை எரித்து விடுவது போல் பார்த்து விட்டுப் போய்விட்டாள்.

கன்னத்து எரிச்சலுடன் அம்மாவையே முறைத்துப் பார்த்தாள் சங்கமித்ரை.

★ ★ ★

நாடி நரம்புகள் முறுக்கேறின, கல்யாணுக்கு.

மொட்டை மாடியில் கட்டாந்தரையில் மல்லாந்து படுத்திருந்தவனின் கன்னங்களிலிருந்து கசிந்த கண்ணீர் காதில் இறங்கியது.

முழு நிலவு அவன் சோக முகம் காணப் பிடிக்காமல் மேகத்தின் பின்னே மறைந்து சோகையாய் ஒளிர்ந்தது.

மின்மினிப் பூச்சிகள் எந்தக் கவலையுமின்றிப் பாடிக் கொண்டிருந்தன.

''மித்ரா... நீயா? உன்னிடமிருந்தா அப்படியொரு கேவலமான வார்த்தைகள்? உன்னின் இன்னொரு முகம் இவ்வளவு கோரமானதா? இதயம் முழுக்க உன்னை மட்டுமே நிரப்பியிருக்கும்போது, எப்படி வேறொரு பெண்ணை? ச்சீ! உன்னால் முடியுமா மித்ரா? என்னால் மட்டும் எப்படி முடியும்? சுபத்ரா மேடம் எப்படிப்பட்ட பெண்? அவங்களைப் போய்.. விஷயமறிந்தால் அவள் எப்படித் துடித்துப் போவாள்?''

அம்மா... மலர் இதழிலும் மென்மையான உள்ளம் படைத்த என்னைப் பெற்றவளையும் நாக் கூசாமல் பேச எப்படியடி முடிந்தது காதகி?

பெண்ணிற்கு இலக்கணமே மென்மையும், பொறுமையும் தான். அதையெல்லாம் சுட்டுப் பொசுக்கி, சற்றும் உண்மை யில்லாத ஒரு விஷயத்தை உறுதிப்படுத்திப் பேசி... துடிக்கத் துடிக்கக் கொல்பவள்.. இனி அவசியமா?

இப்படிப்பட்ட மனைவி தேவைதானா?

என்னையும் அசிங்கப்படுத்தி, என்னைச் சுற்றியுள்ள பெண் களையும் அவமானப்படுத்தி...யார் கொடுத்தது அந்த உரிமையை?

இந்த உரிமையைக் கொடுத்த உறவு எது?

அதைத் துண்டித்து விட்டால்?

கல்யாண் யோசித்து... யோசித்து விடியும் போது ஒரு முடிவிற்கு வந்திருந்தான்.

★ ★ ★

செந்தாமரை மகளிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. விபரமறிந்த பாலாஜிக்குக் கூடத் தங்கை மீது வெறுப்புதான்.



மகளுக்குப் பார்த்துப் பார்த்துச் செய்தவள், எந்த உபசரணை யும் பண்ணுவதில்லை. காபியைக் கூட மித்ராவே வந்து போட்டுக் குடிக்கிறாள்.

சமைத்த உணவு வகைகளை மேசை மீது வைத்துவிடுவாள், செந்தாமரை.

தானே எடுத்துப்போட்டுச் சாப்பிட்டுக் கொள்வாள் மித்ரா.

மித்ரா ஒரு விஷயத்தில் மட்டும் உறுதியாய் இருந்தாள். 'கல்யாணால அவளைப் பிரிந்து வாழ முடியாது. அவளின் கோபம் அவனை மிரளச் செய்யும். இனி எந்தச் சந்தர்ப்பத் திலும் தவறு செய்யத் துணிவு வராது. என்றிருந்தாலும் அவளிடம் வந்து சரணாகதி அடைவது நிச்சயம்! அப்போது அவனைத் தன் இஷ்டப்படி ஆட்டிப் படைக்கலாம்!' இதுவே அவளின் எண்ணம்.

அதனால்தான் வரம்பு மீறிப் பேசி விட்டோமே என்ற உறுத்தல் கொஞ்சமும் இல்லை அவளிடம்.

சாப்பிட்டு முடித்து கையைக் கழுவுவதற்கும், 'போஸ்ட்' என்று குரல் வருவதற்கும் சரியாய் இருந்தது.

வாசலுக்கு வந்தாள்.

பதிவுத் தபால்.. அவள் பெயருக்குத்தான் வந்திருந்தது.

பிரித்துப் படித்தவள்... உச்ச பட்சமாய் அதிர்ந்து போனாள்.

கல்யாண் வக்கீல் மூலமாக விவாகரத்து நோட்டீஸ் அனுப்பியிருந்தான்.



19

சங்கமித்ரையால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

''என்னையா? விவாகரத்தா? எப்படி நினைக்க முடிந்தது இப்படியெல்லாம்? கல் யாண் அப்படிப்பட்டவனில்லையே. என்னை

இத்தனை நாள் பிரிந்திருந்ததே அவனால் இயலாத காரியம் எனும்போது, நிரந்தரமாகப் பிரிவதற்குத் துணிந்து விட்டானா?'

'கல்யாண், நீயா? அப்படியானால் என்னை நேசித்த தெல்லாம் நிஜமில்லையா? நீ இப்படி மாறுவாய் என்று நினைத்துக் கூடப் பார்த்ததில்லை! இப்போது புரிகிறது. உன்னுடைய இந்த மனமாற்றத்திற்கான சூத்திரதாரி யார் என்று!

'சுபத்ரா..! உன்னை விடப் போவதில்லை. என் வாழ்க்கையை நாசம் பண்ணத் துணிந்து விட்டாயா? இரட்டை வேடம் போடும் கேவலமான பிறவியே! நீ யார் என்பதை இந்த ஊருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறேன். இதனால் எனக்கு எவ்வளவு பெரிய இழப்பு வந்தாலும் பரவாயில்லை. இனி என் ஆட்டம் ஆரம்பிக்கப் போகிறது.'

'ஆனால், கல்யாண்... கேவலம் சுபத்ரா என்ற பெண்மணிக் காக என்னை இழக்கத் துணிந்து விட்டானே... அவ்வளவுதானா உன் காதல்? எந்தளவு நேசித்தேன் உன்னை? அதற்கு நீ தரும் பரிசா இது?'

குளியலறையில் நெஞ்சு வெடிக்க வாய் விட்டு அழுதாள்.

★ ★ ★

அறைக்குள் வியர்வை நெடி சற்றுத் தூக்கலாகவே இருந்தது. இடுப்பில் வேட்டியுடன் தரையில் மல்லாந்து படுத்திருந்தான் பிரபாகரன். அறை நடுவே கட்டப்பட்டிருந்த கொடியில் அழுக்குத் துணிகள் இடம் பிடித்திருந்தன. வழக்கம் போல் போதையிலிருந்த பிரபாகரனின் கண்களில் நீர் பொங்கிக் காதில் இறங்கிக் கொண்டிருந்தது.

அவன் அருகில் தரையில் சுவரோரமாக வைக்கப்பட்டிருந்த ஒரு இளம் பெண்ணின் புகைப்படம். மிக அழகாக இருந்தாள். இதழ் பிரியாத சிரிப்பில் கனிவும், ஈர்ப்பும் இருந்தது. புகைப்படத்திற்கு ரோஜாப் பூ மாலை போட்டிருந்தான்.



ஒன்றும் புரியாமல் வியப்பும், பயமுமாய்த் தந்தையின் அருகில் அமர்ந்திருந்தாள், மஞ்சு.

பிரபாகரன் அழைப்பிற்கிணங்க வந்து அரை மணி நேரத்திற்கும் மேலாகி விட்டது.

தந்தையோ.. இதுவரை பார்த்தேயிராத பெண்ணின் புகைப்படத்தின் முன்பு அழுது கொண்டேயிருந்தால்.. அந்தச் சிறுமி என்னதான் செய்வாள்? ஏதும் கேள்வி எழுப்பப் பயம் தடுத்தது. அப்பா போதையில் இருந்தார்.

யார் இவங்க? ஏன் அப்பா அவங்களைப் பார்த்து அழுகிறார்?

ஒரு வழியாய்த் தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்த பிரபாகரன் எழுந்து அமர்ந்தான்.

போதையும், அழுகையும் சேர்ந்து கண்களை ரத்தச் சிகப்புக்கு மாற்றி விட்டிருக்க,

அந்தக் கோலத்தில் அப்பாவைப் பார்க்க... மஞ்சுவுக்குள் நரம்புகள் தந்தியடித்தன.

'படிக்க வேண்டியது ஏகமாய் இருக்க.. அழைத்து விட்டு என் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறாரே அப்பா!' சிறு பெண் மனம் புலம்பியது.

''என்ன மஞ்சு, அமைதியா யிருக்கே?''

''ஒ... ஒண்ணுமில்லேப்பா!''

''என்னடா.. அப்பா அழுதுட்டிருக்காரேன்னு பார்க்கிறியா?''

''ம்..!''

''எல்லாம் மாடியிலே இருக்காளே..அவளால்தான்டா.. என் வாழ்க்கையைப் பாழாக்கின பாவி அவ..!''

''....?!''

''இந்தப் புகைப்படத்தில் இருக்கிறவ யார் தெரியுமா?''

'ம்ஹூம்!''

''இவதான்டா உங்கம்மா! என் தேவி, என் மனைவி, என் தெய்வம்!''

''எ.. என்ன? இவங்க என் அம்மாவா?'' மஞ்சுவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''ஆமாண்டா.. இவதான் உங்கம்மா! இத்தனை நாளா ஏன் சொல்லலேன்னு தோணுது உனக்கு. அப்படித்தானே? நீ சின்னப் பொண்ணு.. பக்குவம் வரட்டும்னு காத்துக்கிட்டிருந்தேன். அதான் இப்பச் சொன்னேன். அந்தச் சுபத்ராவை நம்பாதே.. அப்பா பேச்சை மட்டும் கேளு.. என்ன?''

மஞ்சு குழப்பத்தின் உச்சியில் இருக்க, வாசலில் ஒரு ஆண் குரல் ஒலித்தது.

''பிரபா.. பிரபா...!''

''சந்தானம் வந்திருக்கான். சரி.. நீ போ!'' என்று மகளை அனுப்பி விட்டு வெளியே எழுந்து சென்றான்.

தயங்கித் தயங்கி மாடிக்குச் சென்ற சின்னவளின் உள்ளத்தில் நெருடல்.

'அப்பா சொல்வது நிஜமா? அவங்களா என் அம்மா?'

சுபத்ரா சமையலறைக்குள் இருந்தாள்.

அம்மாவை நெருங்கிய மஞ்சு பதறி விட்டாள்.

ஆள்காட்டி விரலில் நனைந்த துணியைச் சுற்றியிருக்க... ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது.

''அ.. அம்மா... என்னம்மா ஆச்சு? கையெல்லாம் ரத்தம்.''

''ஒண்ணுமில்லேடா. வெங்காயம் நறுக்கும்போது தவறுதலா விரலையும் சேர்த்து நறுக்கிட்டேன்..'

''வலிக்குதாம்மா?''



''சில நாக்குகள் தர்ற வலியை விட, இதொன்னும் அதிகமில்லை! என்ன சொல்றார் உங்கப்பா..?''

''டாக்டரிடம் போகலாமாம்மா? ரத்தம் வந்துக்கிட்டே இருக்கே?''

''பரவாயில்லே மஞ்சு. சரியாப் போயிடும். உன் முகம்தான் வாட்டமாயிருக்கு.. என்னாச்சு?''

''...?''

''அட... மஞ்சும்மா... ஏன் உன் கண்ணு கலங்குது?'' திடுக்கிட்டாள் சுபத்ரா.

''அ..அம்மா... நீங்க எனக்கு அம்மாதானே?''

அடி வயிற்றில் சூடு போட்டது போலிருந்தது அந்தக் கேள்வி.

''எவ்வளவு மோசமான கேள்வி? ஏன் இப்படிக் கேட்டே... அதுவும் என்னைப் பார்த்து..''

''அப்பா... அப்பாதாம்மா சொல்றார்... அங்கே ஒரு புகைப்படம் இருக்கு. அப்பா ரொம்ப நேரமா அதைப் பார்த்து அழுதுகிட்டிருந்தார். பேரு தேவியாம்.. அவங்கதான் என் அம்மாவாம்... அவங்க என் அம்மான்னா.. அப்ப நீங்க யாரு எனக்கு?''

''ம...ஞ்..சு!'' உதடுகள் துடிக்க, விரல்கள் நடுங்க, மகள் முன் மண்டியிட்டு அமர்ந்து, அவளை அணைத்துக் கொண்டாள்.

''பேசாதே.. மஞ்சு. இதற்கு மேல் ஒரு வார்த்தையும் பேசிவிடாதே. தாங்க முடியவில்லை மஞ்சு. எதையும் விளக்கிச் சொல்ல உன் வயசு என்னைத் தடுக்கிறது. காலமும், நேரமும் வரட்டும். எல்லாமே தெரிய வரும். நான் உன் அம்மாதான்டா... அதிலே எந்தச் சந்தேகமும் வேண்டாம்!''

''அப்ப அவங்க யாரு?''

"இப்ப வேண்டாம். இன்னும் சில வருஷங்கள் போகட்டும். சொல்றேன். இப்ப உன் கவனமெல்லாம் படிப்பில் மட்டும்தான் இருக்கணும். புரியுதா?"

"ம்.. அப்பாகிட்டே ஏம்மா பேச மாட்டேங்கறே? அவரும் பாவமில்லையா?"

அடுத்தடுத்து மகளிடமிருந்து பாய்ந்து வந்த கேள்விகளால் திணறித்தான் போனாள்.

மவுனமாய்ச் சில கணங்கள் மகளையே பார்த்துக் கொண்டிருந்த சுபத்ராவிடம் அந்தக் கேள்விக்குப் பதில் இல்லை.

"போய்ப் படி, மஞ்சு. எனக்குச் சமைக்கிற வேலையிருக்கு!" நகர்ந்து போனாள், தளும்பிய கண்களுடன்.

ஏன் அம்மா சரியான பதிலைத் தர மாட்டேங்கிறாள்? அம்மாவை வித்தியாசமாய்ப் பார்த்தாள், மஞ்சு.

★ ★ ★

குப்பென்ற மதுவின் நெடியும், புகையின் கொடிய நாற்றமும் குடலைப் பிடுங்கின.

ஆனால், அங்கு ஆங்காங்கே கும்பல் கும்பலாய் டேபிள் முன்னே, மதுக் கோப்பைகளுடனும், இறைந்திருந்த உணவு வகைகளுடனும் அமர்ந்திருந்த ஆண்களுக்கு அதுதான் சொர்க்கமா யிருந்தது.

பிரபாகரனைச் சுற்றி ஆறேழு பேர் அமர்ந்திருந்தனர். எல்லோரும் அவனைத் தேடி வீட்டிற்கு வருபவர்கள்தான். அந்த 'பார்' பிரபாகரன் வழக்கமாய் வரும் சரணாலயம்.

பேச்சு இப்படிச் சுற்றி அப்படிச் சுற்றிப் பிரபாகரனின் குடும்பத்தில் வந்து நின்றது.

"என்னதான் சொல்லு... பிரபாவோட மனைவி மாதிரி நான் யாரையும் பார்த்ததில்லை. அன்னைக்கு குணா வீட்டுக்குப் போனேன். அவன் பொண்டாட்டி முகத்திலே அடிக்காத



குறையா, 'இனி குடிக்கிறதுக்குன்னு என் வீட்டு வாசப்படியை எவனாவது தாண்டி வந்தா நடக்கிறதே வேறன்னு கதவைச் சாத்திட்டா. ஆனா பிரபாவோட வீட்டுக்காரம்மா தங்கம்னா தங்கம். கண்டுக்கவே மாட்டாங்க. கொடுத்து வச்சவன்டா நீ!" என்றான் வேதமூர்த்தி.

குப்பெனச் சிரிப்பொலி எழுந்தது அங்கு.

பிரபாகரன் மட்டும் அமைதியாய் இருந்தான்.

"நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படிச் சிரிக்கிறீங்க?" என்றான் வேதமூர்த்தி.

"பின்னே... ஆளைப் பார்த்து எடை போடாதேன்னு இதைத் தான் சொல்லுவாங்க!" கிண்டலாய்க் கூறினான் பாஸ்கர்.

"என்ன பாஸ்கர், பிரபாகரன் எதிரிலேயே அவன் பொண்டாட்டியைப் பத்தி...". பயத்துடன் ஏறிட்டான் வேதமூர்த்தி.

"உனக்கு என்னடா தெரியும்? பாவம்டா நம்ம பிரபாகர். இன்னைக்கு வாழ்க்கையைத் தொலைச்சிட்டு அம்போன்னு நிக்கறான்னா அதுக்கு அவன் பொண்டாட்டிதான் காரணம்!"

பிரபாகரன் சுய பச்சாதாபத்தில் கேவிக் கேவி அழ ஆரம்பித்தான்.

பாஸ்கர் மேற்கொண்டு தன் கற்பனை வளத்தையும் சேர்த்துச் சுபத்ராவை அசிங்கப்படுத்திக் கொண்டிருந்தான். காரணம் இல்லாமலில்லை. ஒரு முறை அவளிடம் வாலாட்ட முயல.. செருப்பால் அடித்து அனுப்பினாள் சுபத்ரா.

"அது மட்டுமல்ல.. இப்ப புதுசா ஒரு ஆளோட சுபத்ரா சுத்திக்கிட்டிருக்கா. நானே பலமுறை ரெண்டு பேரையும் சேர்த்துப் பார்த்திருக்கிறேன். பேரு கூட கல்யாண். அவ கூட வேலை செய்யறானாம். ஆளும் பார்க்க அம்சமா இருக்கான். அன்னைக்குக் கூடக் கடற்கரையிலே..." அவன் சொல்லிக் கொண்டே போக.. புதுத் தகவலால் அழுவதை நிறுத்தி நெற்றி சுருக்கினான் பிரபாகரன்.

கல்யாணா? இதென்ன புதுக் கதை?



## 20

ஆட்டோவை விட்டிறங்கிய சுபத்ராவால் நடக்கவே சிரமமாக இருந்தது. உடல் அனலாய்த் தகித்தது. வயிற்று வலி வேறு உயிரைப் பிய்த்துத் தின்றது. அலுவலகத்திலிருந்து கிளம்பும் போதே காய்ச்சல் அதிகமாய் இருந்தது.

அப்படியே மருத்துவமனைக்குச் சென்று விட்டாள். நிறையக் கூட்டம் இருந்ததால் வீடு திரும்பத் தாமதமாகி விட்டது.

உடல் வலியை விட, மஞ்சு சாப்பிடாமல் காத்திருப்பாளே.. இவ்வளவு நேரம் குழந்தை பசி தாங்க மாட்டாளே என்கிற வேதனைதான் அவளை வாட்டி எடுத்தது.

வீட்டிற்கு வந்து சமைத்துக் கொடுப்பதற்குள் குழந்தை தூங்கி விடுவாள் என்றெண்ணி ஓட்டலிலேயே வாங்கிக் கொண்டு வந்துவிட்டாள்.

தளர்ந்த நடையுடன் சுபத்ரா வீட்டிற்குள் நுழைவதை ஏளனச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டுதானிருந்தான், பிரபாகரன்.

'அந்தக் கல்யாண் கூட நல்லா ஆட்டம் போட்டுட்டு களைச்சுப் போய் வர்றியா? உன் ஆட்டத்துக்கெல்லாம் ஒரு முடிவு கட்டப் போகிறேன்டி. என் வாழ்க்கையைப் பாழாக்கினது போதாதா? இப்ப அந்தக் கல்யாணையும் பொண்டாட்டிட்டேர்ந்து பிரிச்சுக் கொட்டமடிச்சிட்டு இருக்கியா? இனி, நீ எப்படி சேலையைக் கட்டிக்கிட்டுத் தெருவிலே இறங்கி நடக்கிறேன்னு பார்க்கிறேன்!'

பிரபாகரனின் சூழ்ச்சி அறியாமல் சிரமப்பட்டு மாடிப்படியேறினாள்.

மஞ்சு கட்டிலில் படுத்திருந்தாள்.



''மஞ்சு.. மஞ்சும்மா...எந்திரிடா!''

''எனக்குத் தூக்கம் வருது. விடும்மா..'' வேண்டுமென்றே கண்களை இறுக மூடியிருப்பது புரிந்தது.

''சாப்பிடாம என்ன தூக்கம்? எந்திரிம்மா. அம்மா உனக்காக மசாலா இட்லி வாங்கிட்டு வந்திருக்கேன். உனக்குத்தான் ரொம்பப் பிடிக்குமே!''

''வேணாம். நான் சாப்பிட்டேன்..!'' என்றாள் கண்களைத் திறக்காமலே.

''சாப்பிட்டியா? எப்படி?''

''அப்பா வாங்கிக் கொடுத்தார்!''

''எ.. ன்.. ன?''

''....?''

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லேடா, அப்படியே ஹாஸ்பிடல் போய்ட்டு வந்ததால லேட்டாயிடுச்சு. மன்னிச்சிடு, மஞ்சு!''

''சரி.''

அந்த ஒற்றைப் பதிலில் தளர்ந்துபோனாள் சுபத்ரா.

வழக்கமாய்த் தனக்கொரு தலைவலி என்றாலே பதறி முகத்தை வருடும் மஞ்சு இவள் இல்லை. என்ன கோபம் என் மீது?

மகளின் மனதில் தந்தை விஷ விதை தூவி இருப்பதை, பாவம்! சுபத்ரா அறியவில்லை.

''என் மேல் கோபமா மஞ்சு?''

''தூக்கம் வருதுன்னு சொல்றேம்மா. சும்மா தொந்தரவு பண்ணாதே!'' போர்வையைத் தலை வரை இழுத்துப் போர்த்திக் கொண்டாள் மஞ்சு.

இடிந்து போய்விட்டாள். ஒருவிதப் பயம் மனசுக்குள் பரவ.. காய்ச்சல் அதிகரித்தது. அந்த உணர்வில் சாப்பிடவோ, மருந்தை உட்கொள்ளவோ மறந்து போனாள்.

★ ★ ★

மகளின் வாழ்க்கைப் பிரச்சனை செந்தாமரையை நடைபிணமாக்கி விட்டிருந்தது. பிரச்சனைகள் சுமூகமாய்த் தீர்ந்து பழையபடி வாழ வேண்டுமென முறையிடுவதற்காகக் கோவிலுக்கு புறப்பட்டுச் சென்றாள்.

பாலாஜியும் தங்கையின் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்று குழம்பிக் கொண்டிருந்த நிலையில் தேர்தல் பந்தோபஸ்துக்கென டெல்லிக்கு அனுப்பி வைத்தது நிர்வாகம்.

செந்தாமரை கோவிலுக்குச் சென்ற பத்து நிமிடத்தில் கூரியரில் சங்கமித்ரைக்கு ஒரு கடிதம் வந்தது.

பிரித்துப் படித்தவளுக்கு வாய் வழியே இதயம் துள்ளிக் குதித்து வந்து விடும் போல் வேகமாய்த் துடித்தது.

பெயர் குறிப்பிடாத யாரோ ஒரு உண்மை விளம்பி கல்யாணையும், சுபத்ராவையும் இணைத்து மிகவும் கேவலமாக எழுதியிருந்தார்.

அதில் பாதி அவளறிந்தது. மீதி அவளறியாதது. ஆக.. ஊர் கூடிக் கை கொட்டிச் சிரிக்குமளவிற்கு அவர்களின் காதல் லீலைகள் வெட்ட வெளிச்சமாகி விட்டனவா?

கல்யாணா இப்படி மாறிப் போனான்? இந்தக் கேள்விதான் ஒவ்வொரு முறையும் புதிதாய் வேல் பாய்ச்சியது.

கடிதத்தின் கடைசி வரி, ‘சுபத்ரா வெளிப்பார்வைக்குப் பத்தினி வேடம் போடுபவள். வீட்டிலும் கூட! உங்கள் வாழ்க்கையைப் பறித்தவளை நீங்கள் சும்மா விடக் கூடாது!’ என்று முடிக்கப்பட்டிருந்தது.

26918



சங்கமித்ரை மறுபடி அந்த வரிகளைப் படித்தாள்.

★ ★ ★

சங்கமித்ரைக்கு மட்டுமல்ல, அலுவலகத்திற்கும்; அதில் முக்கியப் பணியிலிருப்பவர்களுக்கும் மொட்டைக் கடிதங்கள் வந்திருந்தன.

தலைமைக் கணக்கர் நான்கு பெண்களைப் பெற்ற பெரியவர். அவரால் அவர்களின் களங்கமில்லா நட்பைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவர்கள் இருவரையும் அழைத்துக் கடிதத்தைக் காட்டி, ‘‘இதற்காக வருத்தப்படாதீங்க மேடம். நல்ல அரிசியிலேதான் கல்லும், குருணையும் கலந்திருக்கு. அதை எடுத்துப் போட்டுட்டு சாப்பிடாம இருக்கோமா என்ன? பத்து நல்ல மனுஷங்க இருக்கிற இடத்திலே நாலு களவாணிப் பசங்களும் இருக்கிறது சகஜம்தானே? அப்படி நாலு பேர் இருந்தாதானே நல்லவங்களையும் இனம் கண்டுக்க முடியறது? மனசிலே எதையும் வச்சுக்காம இதையெல்லாம் இப்படி ‘ப்பூன்னு’ ஊதித் தள்ளுங்க!’’ என்றவர், அக்கடிதத்தை நாலாய், எட்டாய், சுக்குநூறாய்க் கிழித்து ஊதிப் பறக்கவிட்டார்.

அட்டெண்டர் வீரப்பன் கொதித்து விட்டான்.

‘‘எந்தப் பொறுக்கி ராஸ்கல் சார் இப்படி எழுதினது? உங்களுக்கு எவன் மேலேயாவது சந்தேகமிருந்தா சொல்லுங்க சார், வெட்டிப் போட்டுட்டு ஜெயிலுக்குப் போகிறேன்!’’ என்று.

இவர்களின் வார்த்தைகள் இருவருக்கும் பெரும் ஆறுதலாய் இருந்ததென்னவோ நிஜம். ஆனால், அலுவலகத்திலிருந்த அத்தனை பேருமே நம்பினால்தானே? கேலிப் பார்வைகளாலும், தலை தெரிந்ததும் பேச்சை அடக்குவதன் மூலமாகவும், இதயத்தைக் காலில் போட்டு மிதித்தனர்.

கல்யாண் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே சங்கடமாயிருந்தது சுபத்ராவிற்கு. அதே நிலைதான் அவனுக்கும்.

ஆனால், இதே நிலை நீடித்தால்? பிறர் வாய்க்கு அவலாக நேரிடுமே!

''கல்யாண்... இன்னைக்குப் பெங்களூர் டீலருக்கு ஒரு ஃபேக்ஸ் அனுப்பணும்னு சொல்லிட்டிருந்தீங்களே, அனுப்பிட்டீங்களா?'' என்றாள் இயல்பாய்.

அழுததில் அவள் கண்கள் சிவந்திருந்தன. உடல் நிலை வேறு படுத்தியதால்.. முகம் ரொம்பவே சோர்ந்து போயிருந்தது.

''அனுப்பிட்டேன், மேடம். உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகமிருக்கா?''

''இ.. இல்லை..'' என்றவளுக்குக் குழப்பமாயிருந்தது.

அவளுக்குத் தெரிந்து அவளை இடம், நேரம் பார்க்காமல் அசிங்கப்படுத்தும் ஒரே ஆத்மா பிரபாகரன்தான். ஆனால், இந்த அலுவலகத்தைப் பற்றியோ, கல்யாணைப் பற்றியோ, அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியே அவன்தான் காரணம் என்றாலும், கல்யாணிடம் எப்படிச் சொல்ல முடியும்? பின்.. அவள் பரிதாப நிலை வெட்ட வெளிச்சமாகி விடாதா?''

ஆனால், கல்யாணுக்குச் சங்கமித்ரை மீதுதான் முழுக்கவே சந்தேகம்.

ஏற்கெனவே இருவர் மீதும் புழுதி வாரித் தூற்றியவள் தானே! இப்போது இந்தளவிற்கு இறங்கி வந்திருக்கிறாள். தன் சந்தேகத்தைச் சுபத்ராவிடம் சொல்ல அவனுக்கும் தயக்கமிருந்தது.

'விவாக ரத்துவரை அவர்களின் திருமண வாழ்க்கை போயிருப்பது அவளுக்குத் தெரியாதே. தெரிந்தால் வருத்தப் படுவாளே!'

''நீங்கள் வருத்தப் படாதீர்கள், மேடம்!''



''சேச்சே..! அதெல்லாமில்லை. நீங்களும் வருத்தப்படக் கூடாது.''

''என் வருத்தமெல்லாம் உங்கள் மனம் புண் பட்டு விடக் கூடாதே என்றுதான்,'' என்றான் இதமான குரலில்.

அந்த வார்த்தை அவள் தலையை வருடி விட்டாற் போலிருந்தது.

கண்கள் பளிச்சிடக் கல்யாணையே பார்த்தாள்.

''நம் நட்பை யாரும் பிரித்துவிட முடியாது, கல்யாண்!''

''நன்றி.. ரொம்ப நன்றி.. நன்றி மேடம்!'' அவனுள்ளும் குளிர்ச்சி.

★ ★ ★

வீட்டிற்குள் நுழைந்த சுபத்ராவிற்குத் தூக்கி வாரிப் போட்டது.

யாரோ ஒரு பெண்ணின் குரல். காச் மூச்சென்று கத்திப் பேசிக் கொண்டிருந்தாள்.

உள்ளே நுழைந்தவள் திடுக்கிட்டாள். அப்பெண் வேறு யாருமல்ல.. சங்கமித்ரைதான்!

கூடத்தில் பிரபாகரனும், அவனருகே மஞ்சுவும் நின்றிருக்க.. எதிரே சங்கமித்ரை!

உள்ளே நுழைந்தவளைப் பார்த்துவிட்டவள், ''வாங்க மேடம். ரொம்பக் களைச்சுப் போயிருக்கீங்க.. ரொம்ப வேலையோ?'' என்றாள்.

''மித்ரா..! நீங்க எப்ப வந்தீங்க? வாங்க.. உக்காருங்க.''

''போதும். நடிக்காதே! என்ன குறைச்சல் உனக்கு? கண்ணுக்கு நிறைவா புருஷன், பேர் சொல்ல ஒரு குழந்தை, அருமையான வாழ்க்கை - அப்படியிருந்தும் உன்னால எப்படித்

துரோகம் பண்ண முடிஞ்சது? என் புருஷன் வயசென்ன, உன் வயசென்ன? அவரை என்கிட்டேர்ந்து அபகரிச்சிட்டியே. விவாகரத்து வரை கொண்டு வந்து நிறுத்திட்டியே..!''

''மித்ரா... நீ என்ன சொல்றேன்னே புரியலே... நான் சொல்றதைக் கொஞ்சம்..''

''அருமையா நடிக்கிறே! நீ எதைச் சொன்னாலும் நம்பற துக்குதான் என் புருஷன் இருக்காரே. அங்கே சொல்லு.. என்கிட்டே வேணாம்... உன்னை இத்தோட சும்மா விட்டுட மாட்டேன். என் வாழ்க்கையை அழிச்ச உன்னை எரிக்காம விடமாட்டேன்!'' சூளுரைத்து விட்டு வெளியேறினாள், சங்கமித்ரை.

அவள் போன அடுத்த நொடி பிரபாகரன் கை கொட்டிப் பலமாய்ச் சிரித்தான்.

''மஞ்சு..! நீயும் நூலைப் போலச் சேலையா மாறிடாதே! பேசாம ஹாஸ்டல்ல போய்த் தங்கிக்கோ!'' என்றான்.

மஞ்சு அம்மாவையே விரைப்பாய்ப் பார்த்தாள்.

பிரபாகரனிடம் தெரிந்த மகிழ்ச்சி, சிரிப்பு, நடவடிக்கை சுபத்ராவுக்குச் சொல்லாமல் சொல்லியது.

நடந்த சம்பவங்களின் சூத்திரதாரி அவன்தான் என்று..!



## 21

சுபத்ரா யோசனையுடன் மாடிப்படியேற... அவள் பின்னேயே மஞ்சுவும் அமைதியாக ஏறினாள்.

ஒரு மூலையில் அமர்ந்து பாடப் புத்தகத் தைப் பிரித்து வைத்துக் கொண்டாள் மஞ்சு.

எப்போதும் தான் அலுவலகம் முடிந்து வந்ததும் ஓடி வந்து கட்டிக் கொள்ளும் மஞ்சு அவள் இல்லை.



வளவளவென்று அன்றைக்குப் பள்ளியில் நடந்த விஷயங் களையெல்லாம் அம்மாவிடம் ஒப்பிக்கா விட்டால் அவளுக்குச் சாப்பாடும் இறங்காது, உறக்கமும் வராது.

எவ்வளவு நேரமானாலும், அம்மா வந்ததும், பால் காய்ச்சி அவள் கையால் அமுல் சக்தி கலந்து கொடுத்தால்தான், அடுத்த வேலையே ஓடும்.

தலை சுற்றுவது போலிருக்க, பேகை வைத்து விட்டு ஸ்டவ்வில் பாலை வைத்தாள்.

''எனக்கு அமுல் சக்தி வேண்டாம்.. அப்பா ஜூஸ் கொடுத்தார்!'' என்றாள் மஞ்சு தலையை உயர்த்தாமலேயே.

பதிலேதும் பேசாமல் ஸ்டவ்வை அணைத்தாள்.

ஒரு சின்ன மாற்றம் மஞ்சுவிடம் தெரிவதைக் கவனித்தாள்.

ஆயாசமாக இருந்தது.

''என்ன சமைக்கட்டும், மஞ்சும்மா?''

எப்போது இந்தக் கேள்வியைக் கேட்டாலும், வரிசையாய்த் தனக்குப் பிடித்ததை எல்லாம் பட்டியலிடுவாள் ஆசையாய்.

மகளை ஆவலாய்ப் பார்த்தாள்.

அவளோ, ''உன் இஷ்டம்மா!'' என்றாள்.

''மஞ்சு...நீ மட்டும்தான் எனக்கு! உனக்காகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என்னை வெறுத்திடாதே, மஞ்சு!'' மனசுக்குள் கதறினாள்.

இரவுச் சாப்பாட்டின்போது குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டு முடித்த மகளை வேதனையுடன் பார்த்தாள்.

அம்மா மேல் கால் போடாமல் தூங்க மாட்டாள், மஞ்சு. அன்றோ, சற்று இடைவெளி விட்டே படுத்துக் கொண்டாள்.

சுபத்ரா இரவெல்லாம் உறங்காமல், சத்தம் வராமல் அழுதாள்.

'மனைவி என்றும் பாராமல், என்னை இவ்வளவு அசிங்கப் படுத்துகிறாரே! அப்படி என்னதான் செய்து விட்டேன் நான்? மித்ரா வீடு தேடி வந்து கத்துமளவிற்கு! சே..! என்னவோ சொன்னாளே.. டைவர்ஸ் அது இது என்று... நிஜம்தானா? அந்தளவு பிரச்னையா இருவருக்குள்ளும்? கல்யாண் இதைப் பற்றி யெல்லாம் ஒன்றுமே சொல்லவில்லையே! ஏன்? எதனால்? என்னாலா?''

நான் என்ன செய்தேன்? சாதாரணமாகவே மித்ரா சந்தேகப் பேர்வழி. ஆபீஸ்லேயும், வீட்டிலேயும் ஒரே நாளில் அதே பிரச்சனை என்றால்? மித்ராவுக்கும் பிரபாகரன் லெட்டர் அனுப்பியிருக்க வேண்டும். கடவுளே, கல்யாணும், மித்ராவும் நல்லாயிருக்கணும்னு நினைக்கிற முதல் ஆத்மா நான்தான். என்னைப் போய்ப் புழுதி வாரித் தூற்றுகிறார்களே!

இந்தப் பழியிலிருந்து நான் விடுபட்டேயாக வேண்டும். என்ன செய்யலாம்? நாளை என் மகளே கூடச் சந்தேகப்பட லாம். அதற்குள் நான் சுதாரித்துக் கொள்ள வேண்டும். அவளுக்கும் என்னைப் பற்றிப் புரிய வைக்க வேண்டும். இனியும் காலத்தைக் கடத்தக் கூடாது! இரவெல்லாம் அழுதபடி யோசித்ததில் தலைவலியும் காய்ச்சலும் அதிகரித்திருந்தன. அதிகாலையில்தான் உறங்கவே தொடங்கினாள்.

அவள் கண் விழித்தபோது எட்டைத் தாண்டியிருந்தது.

பதறிப் போனாள்.

கடவுளே..! இவ்வளவு நேரமாகவா தூங்கிவிட்டேன்! மஞ்சுவை ஸ்கூலுக்கு அனுப்ப வேண்டுமே! அவசரமாய் எழ முயன்றவள்.. முடியாமல் தளர்ந்து போனாள்.

காய்ச்சல் ரொம்பவே அதிகப்பட்டிருந்தது. கண்களுக்குள் நெருப்பை வைத்துக் கட்டியது போல் எரிச்சலாய் இருந்தது.



சிரமப்பட்டு எழுந்தவள், ''மஞ்சு... மஞ்சு..'' என்றழைத்த படியே மெல்ல நடந்து சென்றாள்.

''என்னம்மா, கூப்பிட்டியா?'' ஸ்கூல் பேக்கை மாட்டிக் கொண்டு தயாராய் எதிரில் வந்து நின்றாள்.

''ரெடியாயிட்டியா மஞ்சு? என்னை எழுப்பியிருக்கலாமே!''

''நேரமாச்சு. புறப்படறேம்மா!''

''கிளம்பறியா? சாப்பிடாமலா? அஞ்சு நிமிஷம் பொறுத் துக்க. அம்மா உனக்குத் தோசை சுட்டுத் தர்றேன்!''

''வேண்டாம்மா. அப்பாகிட்டே கேட்டேன். ஓட்டல்லேர்ந்து டிபன் வாங்கிட்டு வந்து கொடுத்தார். மதியத்துக்கு கேன்டீன்ல சாப்பிட்டுக்கச் சொல்லிப் பணமும் கொடுத்தார்!''

''உனக்கு டிபன் வேணும்னா என்னைக் கேட்கலாமே, மஞ்சு. அம்மாவுக்கு உடம்புக்கு முடியலேடா.. அதனாலதான் நேரத்துக்கு எந்திரிக்க முடியாமப் பேச்சு. நீயாவது எழுப்பி யிருக்கலாமே.. டிபன் லஞ்ச் எல்லாம் சமைச்சிருப்பேனே.. இத்தனை நாளா நான்தானே உனக்குப் பார்த்துப் பார்த்து எல்லாமே செய்தேன்! இப்ப என்ன புதுசா அப்பாகிட்டே கேக்கறது? ரொம்ப மாறிட்டே, மஞ்சு!'' பரிதவிப்பும் கோபமும் போட்டி போட்டன குரலில்.

மஞ்சு அம்மாவைப் பார்த்த பார்வையில் வியப்புத் தெரிந்தது.

''நீதாம்மா மாறிட்டே! நீதானே அப்பாகிட்டே பாசமா இருக்கணும். அப்படிப் பேசக் கூடாது, இப்படிப் பேசக் கூடாதுன்னு அட்வைஸ் பண்ணுவே! இப்ப ஏன் மாத்திப் பேசறே? அவர் என் அப்பாதானே? எனக்குத் தேவையானதை அவர்கிட்டே ஏம்மா கேட்கக் கூடாது?''

''ம..ஞ்..சு!''

''அப்புறம் இன்னொரு விஷயம்மா. என்னை ஹாஸ்டல்ல சேர்த்து விட்டுடு. நான் அங்கேயே தங்கிப் படிச்சுக்கிறேன்!''

ஆயிரம் இடிகள் தலை மேல் வந்து விழுந்தது போல் அதிர்ந்து போனாள் சுபத்ரா.

''உன்னால முன்னே மாதிரி என்னைக் கவனிச்சுக்க நேரமில்லை. ஆபீஸ்ல நிறைய வேலை! நீ லேட்டா வர்றே! அதுவரைக்கும் தனியா காத்திருக்கப் பயமா இருக்கும்மா. அதுமட்டுமில்லே, யார் யாரோ இந்த வீட்டுக்கு வர்றாங்க, போறாங்க, குடிக்கிறாங்க. சண்டை போடறாங்க, நேத்துக்கூட மித்ரா ஆன்ட்டி வந்து கத்திட்டுப் போனாங்களே. எனக்கு இதெல்லாம் பிடிக்கலேம்மா. படிக்க முடியலே. என்னை ஹாஸ்டல்ல சேர்த்து விட்டுரும்மா. ப்ளீஸ்...'' ஒவ்வொரு வார்த்தையும் தெளிவாய், மனமுதிர்ச்சியோடு வந்து விழுந்தது.

அவளால் நம்ப முடியவில்லை. பேசுவது மஞ்சுதானா? பத்து வயதுச் சிறுமி பேசுகிறாளா? என்னைப் பிரிந்துபோக வேண்டும் என்கிற எண்ணத்தை விதைத்தது யார்? என் மகள் என்னை வெறுத்து விடுவாளா?''

''மஞ்சு!'' நெகிழ்ந்து, கண் கலங்கி, மகளைப் பிடித்துக் கொள்ள, நாசூக்காய்த் தன்னை விடுவித்துக் கொண்டு வர்றேன்ம்மா!'' என்று இறங்கிப் போய் விட்டாள்.

குட்டி போட்ட பூனையாய் அலுவலக அறைக்குள் நடந்து கொண்டிருந்த கல்யாணுக்கு ரத்தம் கொதித்தது.

இன்று காலைதான் சங்கமித்ரை அவனுக்குப் போன் பண்ணி, சுபத்ரா வீட்டுக்குச் சென்று தாறுமாறாய்ப் பேசிவிட்டு வந்ததை எகத்தாளமாய்ச் சொல்லி விட்டு வைத்தாள்.

அதை அறிந்ததிலிருந்து அவனால் இயல்பாய் இருக்க முடியவில்லை.

வீட்டிற்கே சென்றிருக்கிறாளா? கடவுளே! சுபத்ராவின் கணவர் என்ன நினைப்பார்? ஏற்கெனவே இல்லாத ஒன்றை இருப்பதாக நினைத்துச் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கும்



மித்ரா.. அங்கே போய் அதையே பேசியிருப்பாளே? நல்ல கணவன் மனைவியாய் வாழும் அவர்களுக்கும் இதன் காரணமாகப் பிரச்சனை ஏற்பட்டு விட்டால்? நினைக்கவே தாங்க முடியவில்லையே! அவளைக் கட்டிக்கிட்ட பாவத் திற்கு நான் மட்டும் தண்டனை அனுபவித்தால் போதாதா? சுபத்ரா மேடம் என்ன பாவம் செய்தார்கள்?

சுபத்ரா வரவிற்காகக் காத்திருந்தான். ஆனால், பிறகே வீரப்பன் மூலம் தகவல் அறிந்தான்.

உடல் நிலை சரியில்லை என்று மேடம் வரமாட்டேன் என்று போன் பண்ணியதாக.

கல்யாணுக்கு இருப்புக் கொள்ளவில்லை. மேடத்திடம் உடனே பேச வேண்டும். மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று துடித்தான்.

சுபத்ராவின் செல்போனுக்கு முயற்சி செய்தான்.

அவளோ அதை ஆஃப் பண்ணியே வைத்திருந்தாள். ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று நாட்கள் அலுவலகத்திற்கு வரவில்லை. போனும் பண்ணவில்லை. இவனாலும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

அலுவலகத்தில் முக்கியப் பொறுப்பு வகிப்பவள், அவசரம், ஆலோசனைக்கென்று தொடர்பு கொள்வார்கள் என்று அறியாதவளா? செல்போனை ஆஃப் செய்தே வைத்திருக் கிறாள் என்றால், சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடிய வில்லையே. கணவன் மனைவிக்குள் ஏதாவது பிரச்சனையா?

மித்ரா பேசியதை எல்லாம் அவள் கணவர் நம்பி விட்டிருப்பாரோ?

சேச்சே! இருக்காது. அவர் தன்னை நன்கு புரிந்தவர், உள்ளங்கையில் வைத்துத் தாங்குபவர் என்று மேடம் சொல்லியிருக்கிறாரே! அப்படிப்பட்டவர் மித்ரா பேசியதை

நம்புவாரா?

தனக்குச் சாதகமாய்ச் சமாதானம் சொல்லிக் கொண்டாலும், தொண்டைக்குள் ஏதோ ஒன்று நிரடிக் கொண்டேயிருந்தது.

அன்று மாலை!

வீட்டிற்கே சென்று பார்த்து விடுவது என்று முடிவு செய்து...

சுபத்ரா வீட்டிற்குப் புறப்பட்டான், கல்யாண்.



22

கல்யாண் வீட்டைக் கண்டுபிடிக்கச் சற்று சிரமமாகவே இருந்தது.

இங்கொன்றும் அங்கொன்றுமாக முளைத்திருந்த வீடுகளில் விசாரித்தபோது, யாருக்கும் சுபத்ராவைத் தெரியவில்லை. எப்படியோ தெருவைக் கண்டுபிடித்து நுழைந்து விட்டான்.

நடந்து சென்ற ஒரு நடுத்தர மனிதரை நிறுத்தி வைத்து விசாரித்தான்.

''ஓ.. அந்தக் குடிகாரப்பய வீடா? அதோ அங்கிட்டு ஒரு சின்ன மாடி வீடு தெரியுதில்லே. பக்கத்துல தென்ன மரம் இருக்குதே.. அந்த வீடுதான்,'' என்றார்.

குழம்பிப் போனான் கல்யாண்.

குடிகாரன்வீடா! அப்படியானால் நிச்சயமாய் அது சுபத்ரா வீடாய் இருக்க முடியாது.

அந்த வீட்டைக் கடந்து போனான்.

அலைந்து திரிந்தான். ஆனால், அந்த முகவரி எண் அந்த வீட்டை மட்டுமே சுட்டிக் காட்டியது.



பைக்கை நிறுத்தி விட்டு, வாசலில் வந்து நின்றான். திறந்திருந்த கதவின் வழியே குப்பென விஸ்கி நாற்றம் முகத்தில் அறைந்தது.

தொடர்ந்து குளறலான ஏளனமான ஒரு ஆணின் குரல்.. அவனை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்தது.

''மஞ்சு.. அப்பா மேல நம்பிக்கை இருக்குல்ல? நான் உன் அப்பாடா! உன் மேல் எனக்கில்லாத அக்கறை வேற யாருக்கு இருக்கு? இனிமேலும் நாம இங்கே இருக்க வேண்டாம். ரெண்டு பேரும் எங்கேயோவது போய்டலாம். உன்னை நல்லாப் படிக்க வைக்கிறேன். நல்லவனாப் பார்த்துக் கல்யாணம் பண்ணித் தர்றேன். உனக்கொரு நல்ல வாழ்க்கையை உருவாக்கித் தர்றது என் பொறுப்பு. நீயே பார்க்கிற இல்லே? உங்கம்மான்னு சொல்லிக்கிட்டு ஊர் பொறுக்குகிற அவளால் உனக்குதான் கஷ்டம்! தான் நல்லா இருந்துட்டா போதும் அவளுக்கு. வேற எதையும் நினைச்சுப் பார்க்க மாட்டாள். அன்னைக்கு ஒரு பொண்ணு வந்தாளே, சித்ராவோ, மித்ராவோ! நீயும்தானே இருந்தே? இப்படித்தான் எப்பவும் அடுத்தவங்க வாழ்க்கையைத் தட்டிப் பறிச்சுக்கிறது, அவ அந்த சுபத்ரா நல்லவ இல்லே, மஞ்சு. என்ன சொல்றே? நீ என் கூட வந்திடறியா?''

மஞ்சு அப்பாவையே பயத்துடன் பார்த்தாள்.

''சொல்லுடா.''

''நான்தான் ஹாஸ்டல்ல சேர்ந்து படிச்சுக்கிறேன்ப்பா!''

''ம்.. அப்படியா! இதுவும் நல்ல யோசனைதான். எது எப்படியோ நீ அவ கூட இருக்கக் கூடாது. அவ்வளவுதான்!'' என்றான், சிவந்திருந்த கண்களில் விஷமம் மின்ன.

கேட்டுக் கொண்டிருந்த கல்யாணுக்குத் தலை சுற்றியது.

என்ன நடக்கிறது இங்கே?'

திரும்பிப் போய்விடலாமா என்று எண்ணிய நேரத்தில், பிரபாகரன் அவனைப் பார்த்து விட்டான்.

''யாரது?''

'அ.. வந்து.. பிரபாகரன் சார்?''

''அது நான்தான். நீங்க யாரு?'' என்றான் நெருங்கி வந்து.

வியர்வை நாற்றமும், விஸ்கி நாற்றமும் குடலைப் புரட்டியது. போதையின் பிடியில் முரட்டுத்தனம் நிரந்தரமாகத் தங்கியிருந்த முகத்துடன்... இவரா மேடத்தின் கணவர்?'

''கேக்கறேன்ல.. யாரு சார் நீங்க?'

''எ.. என் பேரு கல்யாண். சுபத்ரா மேடம் இருக்காங்களா?''

''ஓ! நீங்கதானா அது?'' நக்கலாய்ச் சிரித்தபடி அவனைப் பார்வையால் எடை போட்டான். ''மேலதான்.. தனியாதான் இருக்கிறா.. போங்க!'' என்றவன், திரும்ப ஹால் கடிகாரத்தைப் பார்த்தான், வேண்டுமென்றே.

கூசிப் போனான் கல்யாண். நான் இங்கே வந்தது, அதுவும் இரவு எட்டு மணியளவில் வந்தது பெரும் தவறு.

''பரவாயில்லை.. அவங்க எப்ப ஆபீசுக்கு வருவாங்கன்னு கேட்டுச் சொல்லிடுங்க.''

''எதுக்குத் தயக்கம்? மேல போங்க... உங்களை யாரும் தொந்தரவு பண்ண மாட்டாங்க.. போங்க... மஞ்சு! நீ என் ரூமுக்கு வா!'' மகளை அழைத்துக் கொண்டு தன் அறைக்குள் சென்றான்.

கல்யாணுக்கு அங்கே நிற்பதே அசிங்கமாய் இருந்தது.

மாடிப் படி ஏறினான் மெல்ல.

பளிச்சென்று புரிந்தது... மாடியில் தனிக் குடித்தனம் நடப்பது!

ஹாலை ஒட்டிய சிறிய அறையில் கட்டிலில் கிழிந்த நாறாய்ப் படுத்துக் கிடந்தாள் சுபத்ரா.



முகத்தின் களைப்பில் துவண்டிருந்த உடம்பில், காதோரம் வழிந்திருந்த கண்ணீரில்.. அவள் வாழ்ந்து கொண்டிருக்கும் அவலம் தெரிந்தது.

அப்படியானால் இவள் தன் கணவனைப் பற்றி, தாம்பத்யத்தைப் பற்றிச் சொன்னதெல்லாம் பொய்யா?

''மேடம்!''

திடுக்கிட்டு எழுந்தமர்ந்தாள் சுபத்ரா. அங்கே, அந்தச் சூழ்நிலையில், அந்த நேரத்தில், அவனை எதிர்பார்க்காததால் நிலை குலைந்து போனாள்.

★ ★ ★

வீடு வந்து சேர்ந்த பின்பும் கல்யாணால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை. அங்கு அவளிடம், அலுவலக ரீதியாய் மட்டும் சில கேள்விகள் கேட்டுவிட்டு உடல் நலம் விசாரித்து விட்டு, உடனே புறப்பட்டு விட்டான். சுபத்ரா அலுவலகம் வரட்டும் என்று காத்திருந்தான். இரண்டு நாள் கழித்து அலுவலகம் வந்த சுபத்ரா குற்ற உணர்வில் அவனை நிமிர்ந்து பார்க்கக் கூட அச்சப்பட்டாள்.

கல்யாண் அலுவலகம் முடியும்வரை அது விஷயமாய் எதையும் பேசவில்லை. அவளும் பேசவில்லை. முடியும் தறுவாயில் கல்யாண்தான் பேசினான்.

''மேடம்..! உங்ககிட்டே நான் கொஞ்சம் பேசணும்.. அடுத்த தெருவில் செங்காளியம்மன் கோவில் இருக்கிறது. அங்கே போவோமா?''

''இல்லை.. எனக்கு..''

''ப்ளீஸ். நான் பேசியே ஆக வேண்டும். என்னை உங்க நண்பனா நினைக்கிறீர்கள்தானே இன்னும்?''

''என்ன கல்யாண், இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்?'' என்றாள் வருத்தமுடன். ரொம்பவே இளைத்திருந்தாள்.

''பேக் வைக்கிறீங்க..'

''சரி, வர்றேன்!''

சென்றனர்.

''ஏன் என்கிட்டே சொல்லாம மறைச்சீங்க?'' என்று கேட்டான் எடுத்த எடுப்பிலேயே..

விசேஷ தினமில்லாததால் கூட்டமில்லை. பழைய கோவில் அது. சந்து பொந்துகளில் தயாராகப் புறாக்கள் அமர்ந்திருந்தன. மணியோசைக்குப் பறப்பதற்கு.

பாசி நிரம்பிய குளத்துப் படிக்கட்டில் அமர்ந்திருந்தனர் இருவரும்.

''எ.. எதை?''

''நிறையவே. அதில் ஒண்ணு மித்ரா உங்க வீட்டுக்கு வந்து சண்டை போட்டது.''

''அதெல்லாம் எதுவுமில்லையே! மித்ராவாவது என் வீட்டுக்கு...''

''ப்ளீஸ் மேடம்... எனக்கு எல்லாமே தெரியும். மித்ராவே போன் பண்ணிச் சொல்லிட்டா. ஏன் மறைச்சீங்க என்கிட்டே?''

''நீங்களும்தான் மறைச்சீங்க... உங்க பிரச்சனை டைவர்ஸ் வரைக்கும் போனதைச் சொல்லவே யில்லையே! இவ்வளவு தானா கல்யாண் நீங்கள்? அவசரப்பட்டு முடிவெடுப்பவரா என் நண்பர்?''

''அவசரப்பட்டு எடுக்கவில்லை, மேடம். ரொம்ப ரொம்ப அவஸ்தைப்பட்டுத்தான் எடுத்தேன். தலைக்கு மீறி எல்லாமே போய்டுச்சு!''



''மித்ரா கொஞ்சம் அவசரக்காரி. அதைப் பெரிசு பண்ணி கோர்ட் வரைக்கும் போகணுமா?''

''வேற வழியில்லை, மேடம். அவளால ரொம்பவே காயப்பட்டுட்டேன்!''

''என்னையுமல்லவா காயப்படுத்துகிறீர்கள்?''

''நானா?''

''ஆமாம். உங்கள் டைவர்ஸுக்குக் காரணம் நான்தான் என்கிறாள் மித்ரா. இது எந்தளவில் உண்மை?''

''அவள் எந்த உண்மையையும் பேசுவதில்லை என்பதால் தான் பிரச்சனையே! நான் நேசிக்கிறவர்களை எல்லாம் வேதனைப்படுத்துவதுதான் அவளுடைய பொழுதுபோக்கு. அதற்காக மன்னிப்புக் கேட்கத்தான் உங்க வீட்டுக்குவந்தேன்.''

''ஸாரி, கல்யாண். வீடு தேடி வந்த உங்களைச் சரியாய் உபசரிக்கக் கூட முடியவில்லை என்னால்.''

''என்ன பிரச்சனை உங்களுக்கு?''

''காய்ச்சலும் வயிற்று வலியும்.''

''நான் கேட்டது உங்கள் தாம்பத்யத்தைப் பற்றி?''

'ஏன்... எனக்கென்ன பிரச்சனை, கல்யாண்?''

''வேண்டாம்.. மேடம். கஷ்டப்படாதீங்க! அன்று கீழே உங்கள் கணவரைச் சந்தித்துப் பேசிய பின்னரே மேலே வந்தேன்!''

''கடவுளே..! நான் நினைத்தது போல் எல்லா விஷயமும் தெரிந்து விட்டதா?''

''நீங்கள் கதை கதையாய்ச் சொன்ன குடும்ப வாழ்க்கையும், கணவரையும் பற்றி ஓரளவு தெரிந்தபோது அதிர்ந்தேன். நான் மானசீகமாய்ப் பொறாமைப்பட்ட பிரபாகரன் ஒரு மனிதனாய்க் கூட இல்லை என்பது ஜீரணிக்க முடியாத விஷயம். சிறு பெண்ணிடம் உங்களைப் பற்றி மோசமாய்ப் பேசியதும்,

என்னிடம் அசிங்கமாய் நடந்து கொண்டதும், மேடம் கூடப் பொய் பேசுவீங்களா என்று ஆச்சரியப் பட்டேன்!''

''....?''

''எல்லோரும் மாமியார், மாமனாரை விட்டுத் தனிக்குடித் தனம் நடத்துவார்கள். ஆனால், புருஷனும், பொண்டாட்டியும் தனித்தனியாய்க் குடித்தனம் நடத்துவதை நான் அன்றுதான் பார்த்தேன்.''

சுபத்ரா அதற்கு மேல் தாங்க மாட்டாமல் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதாள்.

''மேடம்! ப்ளீஸ்.. பொது இடம் இது. கண்ட்ரோல் யுவர் செல்ஃப்!'' என்றான் கெஞ்சலாய்.

அவன் பேச்சிற்கு மதிப்பளித்து, முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு, ''சொல்கிறேன்,'' என்றாள்.



## 23

திருநெல்வேலி!

சுபத்ரா பிறந்து வளர்ந்த ஊர்! சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தவளை அவளுடைய ஒரே அண்ணன் நீலகண்டன்தான் இமைக்குள் வைத்து வளர்த்தார்.

அண்ணனுக்கும், தங்கைக் கும் பதினெட்டு வயது இடைவெளி. அதனால் தங்கையை மகளாய்ப் பாவித்ததோடு, திருமணமும் செய்து கொள்ள வில்லை.

வசதிக்குக் குறைச்சலில்லை. ஏகப்பட்ட நிலபுலன்கள், வீடுகள் என இருந்தன. போதாததற்கு இயற்கையிலேயே நீலகண்டனிடம் இருந்த முரட்டுக் குணம் ஏரியாவில் ரவுடி என்கிற பட்டத்தையும் பெற்றுத் தந்திருந்தது. அவருக்கு



அத்தனை பேரும் பயப்படுவார்கள். பஞ்சாயத்துத் தலைவரும் அவரே. அவர் சொல்வதுதான் தீர்ப்பு.

சுபத்ரா இளங்கலைப் பட்டம் முடித்திருந்தாள். மேற் கொண்டு படிக்க ஆசைப்பட்டாலும், அண்ணன் அனுமதிக்க வில்லை. இரவெல்லாம் கண் விழித்துப் படிப்பதால், இளைத்து விட்டாளாம்! படித்தவரை போதும், காலா காலத்தில் உன்னை ஒரு நல்லவன் கையில் ஒப்படைத்தால்தான் எனக்கு நிம்மதி என்றவர் மாப்பிள்ளை வேட்டையில் தீவிரமாய் இறங்கி விட்டார்.

திக்கென்றானது சுபத்ராவிற்கு.

இது நாள்வரை மனசுக்குள் ரகசியமாய்ப் பூட்டி வைத்திருந்த விஷயத்தை எப்படி அண்ணனிடம் வெளிப்படுத்துவது என்று பயந்தாள்.

காரணம் பிரபாகரன்!

ஏழை விவசாயியின் மகன். மூன்று தெரு தள்ளித்தான் வீடு. தன் மகனை நன்கு படிக்க வைத்துப் பெரிய வேலைக்கு அனுப்ப வேண்டுமென்பது அவன் தந்தை கன்னியப்பனுக்கு ஆசை! பிரபாகரனும் நன்கு படிப்பவன்தான். ஒரே நாள் காய்ச்சலில் ஒரேயடியாய்ப் போய்ச் சேர்ந்து விட்டார் கன்னியப்பன்.

திக்குத் தெரியாமல் அனாதையாகிப் போன பிரபாகரனை நீலகண்டன்தான் இரக்கப்பட்டு அவனுக்குப் பணம் கட்டி ஹாஸ்டலில் சேர்த்துப் படிக்க வைத்ததோடு, சாப்பாடு, துணிமணி என்று எல்லாச் செலவையும் பார்த்துக் கொண்டார். அது மட்டுமின்றி அவன் படித்து முடித்ததும் தெரிந்தவர் மூலமாகச் சென்னையில் ஒரு நல்ல வேலைக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தார். லீவு நாட்களில் நீலகண்டனின் தோட்ட வீட்டில்தான் வந்து தங்கியிருப்பான் பிரபாகரன்.

கனிவான முகமும், கம்பீரமும், படித்தவன் என்கிற மரியாதையும் சுபத்ராவை வெகுவாய்க் கவர்ந்தது.

பார்க்கிற அருமையான வரன்களை எல்லாம் ஒற்றை வார்த்தையில் ‘பிடிக்கவில்லை’ என்று மறுத்த தங்கையைக் கவலையாய்ப் பார்த்தவருக்குச் சந்தேகமும் எழுந்தது. அந்தச் சந்தேகத்தைக் கேட்டும் விட்டார்.

பயந்து போனாலும் எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொல்லி விட்டாள் பிரபாகரனைப் பற்றி. அதிர்ந்து போன நீலகண்டன் பதிலேதும் கூறாமல் நகர்ந்து விட்டார். இரண்டு நாள் நன்றாக யோசித்து விட்டு, ‘‘ஏழையோ, பணக்காரனோ, ஆனா அவன் உன் மனசுக்குப்பிடிச்சவனா இருக்கிறதுதான் முக்கியம். பிரபாகரனை வரச் சொல்லி இருக்கிறேன். பேசி முடிச்சிடலாம்... கவலைப்படாதே! எனக்கு உன் சந்தோஷம்தான் முக்கியம், சுபத்ரா. உனக்காகவே உயிர் வாழ்றவன் இந்த அண்ணன். பிடிக்காத வாழ்க்கைக்கு நிர்பந்தப்படுத்துவேனா? உன் சந்தோஷத்தை விடவும் இந்த உலகத்தில் வேறெதுவும் முக்கியமில்லை, சுபத்ரா!’’என்றார்.

பிரபாகரனைத் தோட்ட வீட்டில் வைத்துச் சந்தித்த நீலகண்டன், தன் தங்கையின் விருப்பத்தைச் சொன்னார்.

சற்றும் எதிர்பார்க்காத பிரபாகரன் மிக மிக அதிர்ந்தான். காரணம், ஏற்கெனவே, அவன் மனதில் ஒருத்தி இடம் பெற்றிருந்ததுதான். அதே ஊரில், அதே தெருவில் குடியிருந்த தேவியும், பிரபாகரனும் காதலர்கள்.

பிரபாகரன் தன்னை நிதானப்படுத்தித் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, தேவியைப் பற்றிக் கூறினான்.

தூக்கி வாரிப் போட்டது, நீலகண்டனுக்கு.

யோசித்தார். ஒரு நிமிடம்தான்.



அவருக்குச் சுபத்ராவின் மகிழ்ச்சி மட்டுமே முக்கியமாகப் பட்டது. காதலிக்கிறார்கள்... அவ்வளவுதானே? கல்யாணம் செய்து கொண்டார்களா? காதலிக்கிறவர்கள் அத்தனை பேரும் திசை மாறிப் போவதில்லையா என்ன? சுபத்ராவை விடத் தேவி எந்த விதத்தில் உசத்தி? பிரபாகரன் தனக்கில்லை என்றதும் உயிரை மாய்த்துக் கொள்ள மாட்டாள் என்பது என்ன நிச்சயம்? ஐயோ..! நினைத்தாலே பதறுதே! என் வீட்டுக் குலவிளக்கு அணைந்து போவதா? விடமாட்டேன்.

அதன் பின், கிட்டத்தட்ட பிரபாகரனை மிரட்டினார், நீலகண்டன்.

‘‘தேவியை மறந்தே ஆக வேண்டும். இல்லாவிட்டால் அவள் மட்டுமல்ல, நீயும் உயிரோடிருக்க மாட்டாய். என் பலமும், செல்வாக்கும், நீ அறியாதது அல்ல. நீங்க ரெண்டு பேரும் எந்த ஊருக்கு ஓடிப் போனாலும் என்னை ஏமாற்ற முடியாது என்பதும் உனக்குத் தெரியும்,’’ என்றார் கோபமாக.

அவர் போட்ட உப்பைச் சாப்பிட்ட உடம்பு. படிப்பும் வேலையும் அவர் போட்ட பிச்சை. ஆகவே தயவாய் மறுத்தான். எடுத்துச் சொல்லிப் பார்த்தான். ஆனால் நீலகண்டன் மசியவில்லை. வேறு வழியின்றிப் பயத்துடன் சுபத்ராவைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தான்.

‘‘இதோ பார் பிரபா! என் தங்கை ரொம்ப மென்மையானவ. உன் காதல் விஷயமெல்லாம் தெரிஞ்சா உடைஞ்சு போய்டுவா. அதனால அவளுக்கு எக்காரணத்தை முன்னிட்டும் தேவியப் பத்தி தெரியக் கூடாது. கல்யாணம் முடிஞ்சதும் வேலைய ராஜினாமா பண்ணிடு. நம்ம தொழிலை எல்லாம் பார்த்துக்க. என்ன பார்க்கிறே? இனி, நீதான் முதலாளி. என் சுபத்ராவைக் கட்டிக்க நீ கொடுத்து வச்சிருக்கணும்!’’ என்றார் மிடுக்குடன்.

பிரபாகரன் உள்ளுக்குள் ரத்தக் கண்ணீர் வடித்தான். அந்த நொடியே சுபத்ராவைப் பிடிக்காமல் போனது.

ஒரே வாரத்தில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

சுபத்ரா கழுத்தில் பிரபாகரன் தாலி கட்டிய அதே முகூர்த்த நேரத்தில் தேவி தன் வீட்டில் தூக்கில் தொங்கி விட்டாள்.

திருமணம் முடிந்து இரண்டு மணி நேரம் கழித்தே பிரபாகரனின் காதுக்குச் செய்தி எட்ட, துடிதுடித்துப் போனான். குளியலறையில் யாரும் அறியாமல் வாய்விட்டு அழுதான்.

நீலகண்டனும் விஷயம் அறிந்தார். ஆனால், அதைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளாமல் அன்றிரவு சாந்தி முகூர்த்தத் திற்காக ஏற்பாடு செய்தார்.

முதலிரவில் ஏகப்பட்ட கனவுகளுடன் வெள்ளிச் சொம்பில் சுண்டக் காய்ச்சிய பசும்பாலுடன் அறைக்குள் நுழைந்தவளை விஷம் போல் பார்த்தான்.

என் காதலை என் தேவியை வேரோடு சாய்த்ததற்குக் காரணம் இவள். என் தேவி வாழாற வாழ்க்கையை நீ வாழக் கூடாது. மிரட்டிச் சாதித்து விட்டதாய் நினைக்கிறானே, இவளின் அண்ணன்? அவன் நினைப்பில் மண்ணள்ளிப் போடப் போகிறேன். இனி இவள் என் மனைவி. இவளை என்ன செய்தாலும் அதைக் கேட்க நீலகண்டனுக்கு உரிமையில்லை. என் தேவியின் ஆத்மா சாந்தி அடைய வேண்டும். அதற்கு என்ன வேண்டுமானாலும் செய்வேன் எனத் தீர்மானித்தான்.

வெட்கமும் எதிர்பார்ப்புமாய்க் கணவனை நெருங்கிய வளிடம்,

''இதோ பார் சுபத்ரா. வீட்டோடு மாப்பிள்ளையாய் இருப்பதில் எனக்கு விருப்பமில்லை. நல்ல வேலையில் இருக்கிறேன், கைநிறையச் சம்பாதிக்கிறேன். என் கம்பீரத்தை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. சென்னைக்குச் சென்று



விடலாம். நீதான் உன் அண்ணனிடம் எடுத்துச் சொல்லிச் சம்மதிக்க வைக்க வேண்டும்,'' என்றான்.

முகம் மலர்ந்தாள், சுபத்ரா.

''என் மனதில் இருந்ததை அப்படியே சொல்லி விட்டீர்கள். உங்கள் சம்பளத்தில் சிக்கனமாய்க் குடும்பம் நடத்தவே ஆசைப்படுகிறேன். அண்ணனைச் சம்மதிக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு!'' என்றாள் பால் தம்ளரை நீட்டி.

''இதெல்லாம் வேண்டாம். வாந்தி வர்ற மாதிரியிருக்கு. அதுமட்டுமில்ல. எல்லாமே சென்னைக்குப் போன பிறகுதான்.. புரிஞ்சிருக்கும்னு நம்பறேன்.''

''புரியுதுங்க. ஏன் வாந்தி வர்ற மாதிரியிருக்கு? தலைவலி, காய்ச்சல் ஏதும்...''

''ஒண்ணுமில்லே. ரெஸ்ட் எடுத்தாப் போதும்!'' என்றவன், தனியே விரிப்பைப் போட்டுப் படுத்துக் கொண்டான்.

அவன் செய்கை எதுவும் தவறாக அவளுக்குத் தோண வில்லை. உறங்குபவனையே விடிய விடியக் காதலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எப்படியோ முரண்டு பிடித்த அண்ணனிடம் பேசி ஒரு வழிக்குக் கொண்டு வந்து விட்டாள், சுபத்ரா. இஷ்டமே இல்லாமல் மூன்றாவது நாளே அவர்களைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார் நீலகண்டன்!

சிறியவீடுதான். என்றாலும் காதல் கணவனுடன் வசிக்கப் போகிறோம் என்கிற நினைப்பே அது அவளுக்குச் சொர்க்க மாகத் தெரிந்தது. பரபரப்பான சுறுசுறுப்பான சென்னையும் அவளை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

அன்று முதலிரவு.

பிரபாகரன் அவளுக்கு எந்தக் குறையும் வைக்காமல் திகட்டத் திகட்ட இன்பத்தை வாரி வழங்கினான். சுபத்ரா புதிய உலகில் சஞ்சரித்தாள்.

ஆயிற்று. எல்லாம் முடிந்து சந்தோஷத்தில் களைத்திருந்தவளை, அந்த ஆங்காரமான சிரிப்பு திடுக்கிட வைத்தது.

சிரித்தது. பிரபாகரன்தான்!

''எ.. என்ன.. எதுக்குச் சிரிக்கிறீங்க?''

''சந்தோஷமா இருந்தியா?''

''ம்..'' என்றாள் வெட்கத்தில் முகம் சிவக்க.

''வெட்கப்படறதுக்கு இதிலே ஒண்ணுமே இல்லே: இதுதான் கடைசி!''

''எது?''

''முதலும் கடைசியுமா நீ சந்தோஷமா இருந்தது இதுதான் கடைசி!''

''எ.. என்ன சொல்றீங்க?' என்றாள் புரியாமல்.



24

''நீங்க... நீங்க என்ன சொல்றீங்கன்னே புரியலே..!'' என்றாள், முகம் வெளிற.

''காதல்னா என்னன்னு தெரியுமா உனக்கு?''

என்ன கேள்வி யிது? இவரைக் கல்யாணம் செய்து கொண்டதே காதலித்துத்தானே!

''ம்..'' என்றாள்.

''நான் உனக்குக் கிடைக்கலேன்னா என்ன பண்ணி இருப்பே?''

''உங்களை ரொம்ப நேசிச்சேன்.''



''அதனால்?''

''செத்துப் போயிருப்பேன்!''

''அதைத்தான் பண்ணினா என் தேவியும்!''

''தேவி?'' திடுக்கிட்டாள்.

''நம்ம கல்யாணத்தன்னைக்குத் தூக்குல தொங்கினாளே, தேவி? அவளைத் தெரியுமில்லே உனக்கு?''

'தெரியும்.. ஆனா, அவ எப்படி உங்களை...'

''நான் கிடைக்காத ஒரே காரணத்துக்காக உன் அண்ணனின் மிரட்டலுக்குப் பயந்து தொங்கிட்டா. நான் உன் கழுத்துல முடிச்சுப் போட்டேன். அவ தனக்குத் தானே போட்டுக்கிட்டா. என்ன... புரியலியா? விளக்கமாச் சொல்றேன்!'' என்று நடந்த அனைத்தையும் சொன்னான்.

அதிர்ச்சியில் உடல் நடுங்கிக் கேட்டுக் கொண்டிருந்தாள், சுப்தரா.

''இவ்வளவு நடந்திருக்கிறதா? எனக்கு எதுவும் தெரியாதே!''

''படிச்சவதானே நீ? என்ன செய்திருக்கணும்? என்கிட்டே முதல்ல கேட்டிருக்க வேண்டாமா? உங்கண்ணன் படிக்க வச்சிட்டா, நான் அடிமையா? உன்னாலதான் என் தேவி செத்துப்போயிட்டா!'' சொல்லி முடித்ததும் அழுகை பொத்துக் கொண்டுவரப் பெண்களைப் போல் கேவிக் கேவி அழுதான், பிரபாகரன்.

அரை மணி நேரம் கடந்தது.

அழுது, அடங்கிச் சுவரைப் பார்த்தபடி, மவுனமாய் இருந்தான்.

மெல்ல அவனருகில் அமர்ந்த சுபத்ரா அவன் தோளைத் தொட்டாள்.

ஏறிட்ட பிரபாகரனின் கண்களில் கனல்!

“நடந்ததை மறந்திடுங்க. அதையே நினைச்சு வருத்தப் படாதீங்க!”

“ச்சீ!” கையைத் தட்டி விட்டான்.

“மறக்கணுமா? யாரை? என் தேவியையா? மறக்கப் போகி றேன்தான்.. எதைத் தெரியுமா? உனக்குத் தாலி கட்டியதை..”

“...?”

“செத்தாலும் தேவிதான் என் பொண்டாட்டி. என் தேவி இந்த உலகத்தை விட்டே போனதுக்குக் காரணம் நீ! உனக்குத் தண்டனை தர வேண்டாமா?”

“நான் என்னங்க பண்ணினேன்?”

“எல்லாத்துக்கும் நீதான் காரணம்! நீ ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைக்கணும்ங்கறதுக்காக என் சந்தோஷத்தையே குழி தோண்டிப் புதைச்சிட்டியே! என் தேவியோட ஆத்மா சாந்தியடையணும். அதுக்காக நீ தண்டனையை அனுபவிச்சே ஆகணும்!”

“...?”

“ஆம்பளைச் சுகம் தெரியாதவரைக்கும், அனுபவிக்காத வரைக்கும் பெண் வாய்க்கால் தண்ணி மாதிரிதான். ஆனா, ருசி கண்டுட்டா, காட்டாற்று வெள்ளம் மாதிரி. அதுக்காகத்தான் முதலும் கடைசியுமா உன்னைத் தொட்டேன்!”

“....?”

“அதை நினைச்சி நீ ஏங்கி ஏங்கிச் சாகணும். என் தேவி எதையும் அனுபவிக்காம போய்ச் சேர்ந்திட்டா. நீ மட்டும் சந்தோஷமா வாழ்ந்திட முடியுமா? போ.. போய்டு, உன் அண்ணன்கிட்டேயே!”



‘ஒரு பொண்ணுக்குக் கல்யாணத்துக்குப் பிறகு எல்லாமே கணவன்தான். நான் வாழ்ந்தாலும், செத்தாலும் உங்களோட தான். தேவியோட இழப்பு பெரிசுதான். உங்க வேதனை எனக்குப் புரியுது. என்னைக்காவது என் மேலயும், உங்களுக்கு அன்பு வரும். அந்த நாளுக்காகக் காத்திருப்பேன்!”

பிரபாகரன் எதிர்பார்த்த பதிலே அதுதான்! அவள் போய் விட்டால்.. எப்படித் தண்டனை தருவதாம்? அவளை ஏளன மாய்ப் பார்த்துவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

நீலகண்டன் தங்கையைப் பார்க்க ஆசை ஆசையாய்ச் சென்னைக்கு வந்தபோது, மிரட்டிக் கல்யாணம் செய்து அப்பாவிப் பெண்ணின் உயிர் போகக் காரணமான அவரை மோசமாய்ப் பேசி, ‘இனி உனக்கும் எனக்கும் ஒட்டுமில்லை, உறவுமில்லை!’ என்று வீட்டை விட்டே விரட்டினான். அன்று போனவர்தான் அதன் பிறகு எட்டிப் பார்க்கவே இல்லை.

பிரபாகரனுக்கு இன்னும் வசதியாயிற்று.

வேண்டுமென்றே பல கெட்ட பழக்கங்களுக்கு அடிமை யானான். சுபத்ராவை அணு அணுவாய் இம்சித்துத் தற்கொலைக் குத் தூண்ட வேண்டும் என்பது அவன் லட்சியம்.

சுபத்ரா ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள்.

கணவன் மனம் மாறும் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தவளுக்குப் பேரிடி விழுந்தது.

விலை மாதை வீட்டிற்கே வரவழைத்துக் கும்மாளம் போட்டான்.

இறுகிப் போனாள் சுபத்ரா.

நேசித்து மணந்த கணவனின் அன்பு கிடைக்காமல் அவனைக் குடிகாரனாய், தாசியை நாடிப் போகிறவனாய் மாற்றி வாழும் வாழ்க்கையை நரகமாக்கி விட்ட ஒரு பெண்ணிற்கு மரணம் பெரிய தண்டனையில்லையே!

அன்றுடன் அவனிடம் பேசுவதை நிறுத்தினாள். ஒரே வீட்டில் தனித் தனியாக வாழ்ந்தனர். அவளின் தன்னம்பிக்கையும், தைரியமும் படிப்பும் உடனடியாக ஒரு நல்ல வேலையைப் பெற்றுத் தந்தது.

இப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்வதை விட விவாகரத்து எவ்வளவோ மேல்தான்.

ஆனால் விவாகரத்து மூலம் தன் குழந்தையின் எதிர்கால வாழ்க்கை வீணாகி விடுமோ என்கிற பயம்! இனி அவளின் வாழ்க்கை மகளுக்காக! அவளுக்காகவே வாழத் தொடங்கினாள், சுபத்ரா.

பிரபாகரனோ ஒவ்வொரு நாளும் அவள் மீது வெறுப்பை வளர்த்துக் கொண்டே போனான். அவமானப்படுத்தினான். அசிங்கப்படுத்தினான். சுபத்ரா பொறுத்துக் கொண்டாள், மகளுக்காக!

தன் கதையைக் கல்யாணிடம் சொல்லி முடித்த சுபத்ரா வழிந்த கண்ணீரை அழுத்தமாய்த் துடைத்துக் கொண்டாள்.

சூரியன் முற்றிலும் காணாமல் போயிருந்தான். இருள் தென்றலுடன் கைகோத்தபடி வந்து கொண்டிருந்தது.

கல்யாணின் நெஞ்சு அடைத்தது.

இவளுக்கா? இவளுக்கா இத்தனை துன்பம் நேர்ந்தது? தினமும் தணலில் அமர்ந்து முகத்தில் புன்னகை மாறாமல் பணியில் கவனமாய் இருக்க எப்படி முடிகிறது? மோசமான சூழ்நிலையிலும் மகளுக்காகக் கணவனை விட்டுப் பிரியவில்லையே! பெண்ணிற்கு, தாய்மைக்கு இவளல்லவா இலக்கணம்?

அவளின் நிதானம், பண்பு, அவனின் மதிப்பில் மேலும் உயர்ந்து நிற்கிறாள் சுபத்ரா!



''என்ன பேசறதுன்னே தெரியலே, சுபத்ரா. நான் ஆறுதல் சொன்னாலும் அது வெறும் வார்த்தைகள்தான். நீங்கள் பட்ட, பட்டுக் கொண்டிருக்கிற வேதனைக்கு நீங்களேதான் களிம்பு பூசியாக வேண்டும். உங்க அண்ணன் இப்போது எப்படியிருக்கிறார்?''

''அவர் இப்போது உயிரோடு இல்லை. என் வாழ்க்கை இப்படியாகிவிட்டதே என்கிற வேதனையும், நான் வெறுத்து ஒதுக்கியதையும், அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மஞ்சு பிறக்கும் முன்பே அண்ணன் இறந்து விட்டார். என் பெயருக்கு எழுதி வைத்திருந்த சொத்துக்கள் அனைத்தையும், ஊரில், பள்ளி, மருத்துவமனை கட்டத் தானமாகக் கொடுத்து விட்டேன். அப்படியாவது அண்ணன் செய்த பாவத்திற்குப் பரிகாரமாகி விடாதாங்கிற நப்பாசைதான்!''

''சரி.. இவ்வளவு மோசமான நபருடன் ஏன் ஒரே வீட்டில் வசிக்கணும்? டைவர்ஸ் பண்ணிடலாமே!''

''மஞ்சு! என் மஞ்சுவின் எதிர்காலம் பாதிக்கக் கூடாது.''

''அதற்கு எத்தனையோ வழியிருக்கிறதே, சுபத்ரா. அவள் எதிர்காலம் பாதிக்கப்படாமல் முடிவெடுக்க முடியாதா என்ன?''

''என்ன வழி? நீங்கள்தான் சொல்லுங்களேன்!'' என்றாள் விரக்தியாய்ச் சிரித்து.

உடனடியாய்க் கூறப் பதிலில்லை, கல்யாணிடம்!

''சீக்கிரமே ஒரு வழி சொல்லுகிறேன், சுபத்ரா!'' என்றவன், அப்போதுதான் உணர்ந்தான்.

மேடம், மேடம் என்று எப்போதும் மரியாதையாக அழைப்பவன் வார்த்தைக்கு வார்த்தை பேர் சொல்லி அழைத்ததை!

வீட்டிற்குச் சென்ற பிறகும் சுபத்ராவின் நினைவுதான்!

சே.. எவ்வளவு அருமையான பெண். அவளுக்குப்போய் இப்படியொரு மோசமான கணவன், வாழ்க்கை! எத்தனையோ

பெண்கள் கணவன் இருக்கும் போதே, கள்ளக் காதலில் ஈடுபடுகிறார்கள்! இவளோ பேசாத கணவனுடன் ஒரே வீட்டில் பத்து வருடம் வசிக்கிறாள் என்றால்... எந்தளவு பொறுமை யிருக்க வேண்டும்! அவள் பிரச்சனையைத் தீர்க்க நான் ஏதாவது செய்தே ஆக வேண்டும்..''

அவன் யோசனையைக் கட்டறுத்தபடி செல்போன் ஒலித்தது.

சங்கமித்ரைதான்!

என்னவாம் இவளுக்கு?

''ஹலோ...'' என்றான் கல்யாண்.

''உங்க மதிப்பிற்குரிய சுபத்ரா கூட பீச் பார்க்குன்னு கொஞ்சிக் குலாவினது போதாம கோவில்லே கூடவா?'' என்றாள்.

''...?''

''என்ன, அதிர்ச்சியா யிருக்கா - எப்படி இவளுக்குத் தெரிஞ்சுதுன்னு? அபத்தமான இந்தக் காதலை இல்லைன்னு மறுக்க முடியுமா உங்களால?''

''முடியாதுதான்!''

''என்னது?''

''காதலை மறுக்க முடியாதுதான்!'' என்று போனைக் கட் பண்ணினான் கல்யாண்.



தன் கைகளை இறுகப் பற்றிக் கொண்டிருந்த கல்யாணை வியப்புடன் பார்த்தாள், சுபத்ரா. அவன் கண்களில் தெரிந்த பரிவு, பாசம் இதுவரை அவள் பார்த்திராதது.

''க..ல்.. யா..ண்!''

24



''இந்தக் கைகளை இனி எப்பவும் விட்டு விட மாட்டேன், சுபத்ரா!''

''எ..என்ன சொல்றீங்க?''

''நானிருக்கிறேன், சுபத்ரா. மஞ்சுவுக்கு நல்ல தகப்பனாக நானிருப்பேன். சுபத்ரா! இனி எல்லாமே உனக்கு நான்தான்!''

'...?''

''ஏன் அதிர்ச்சியாகறே? இது பொய்யில்லே. நிஜம். உன்னை உள்ளங்கையிலே வச்சுத் தாங்குவேன். சுபி! எனக்கும் சரி, உனக்கும் சரி, முதல் வாழ்க்கை தோல்வியிலேதான் முடிஞ்சது. இத்தனைக்கும் காதல் கல்யாணம். நம்ம பார்ட்னர்ஸ் நம்மளைப் புரிஞ்சுக்கலே. நாம ரெண்டு பேரும் ஒண்ணா சேர்றதுதான் நியாயம். இந்த ஊரை விட்டே போய்டுவோம். அப்பதான் மஞ்சுவுக்குச் சிக்கலில்லாத வாழ்க்கை அமையும். என்ன சொல்றே, சுபி?''

அவன் சொல்வதை நம்ப முடியாமல், நம்பாமல் இருக்கவும் முடியாமல், கைகளையும் விடுவித்துக் கொள்ள விரும்பாமல், என்ன பதிலைச் சொல்வதென்ற குழப்பத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளின் பதிலுக்காகக் காத்திருந்தவன், கடூரமான சப்தம் கேட்டுத் திடுக்கிட்டான்.

சுற்றிலும் இருட்டு. ஜன்னல் வழியே சோகையான நிலா வெளிச்சம். எவனோ லாரிக்காரன் நள்ளிரவு தூக்கக் கலக்கத்தோடு நாய் மீது மோதிவிட... அதன் மரண ஓலம்தான் கல்யாணைத் தூக்கி வாரிப் போட்டிருந்தது.

'கனவா! இப்படிப்பட்ட கனவா? என்ன இது?'' வியர்த்துக் கொட்ட... வியந்தான்.

சுபத்ராவும், நானும்? இதென்ன குழப்பம்? இந்த மாதிரி சுபத்ரா சம்பந்தப்பட்ட கனவுகள் இப்போதெல்லாம் அடிக்கடி

வருகிறதே? என்னாச்சு எனக்கு? அன்று கூடச் சங்கமித்ரை போனில் கேட்டபோது, 'ஆமாம், காதலிக்கிறேன்!' என்றேன். எவ்வளவு தைரியமாய் வந்தது வார்த்தை? என் மனம் சுபத்ராவை நாடுகிறதா என்ன?''

ஆனால், அவன் உள் மனசு ஆமாம் என்றோ, இல்லை என்றோ கூறவே இல்லை.

அதன் பிறகு அவன் உறக்கம் முற்றிலுமாய்த் தொலைந்து போனது.

★ ★ ★

குட்டி போட்ட பூனையாய் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தாள், சங்கமித்ரை. டைனிங் டேபிள் மேல் முழுதாய்ச் சாப்பிடாமல் வெறுக்கப்பட்ட உணவு தட்டில் இருந்தது.

வீட்டில் யாருமில்லை.

அம்மா உறவினர் வீட்டுக்குப் போயிருந்தாள். தானே எடுத்துப் போட்டுச் சாப்பிட அமர்ந்தவளுக்கு ஏதேதோ நினைவிற்கு வர... இரண்டு கவளத்தோடு கையைக் கழுவி எழுந்து கொண்டாள்.

அன்று...

கல்யாண் போனில் சொன்ன வார்த்தைதான் நெஞ்சை அறுத்துக் கொண்டிருந்தது. இரத்தத்தைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தது.

'காதலை மறுக்க முடியாதுதான்!'

நாராசமாய் இப்போதும் காதில் ஒலித்தது.

எவ்வளவு திமிர்! இத்தனை நாளும் இல்லை, இல்லை என்று மறுத்து வந்தவன், இப்போது தைரியமாய் ஒப்புக் கொள்கிறான். இவனைச் சும்மா விடக் கூடாது. அசிங்கப்படுத்த வேண்டும்.



அவமானப்படுத்த வேண்டும். எல்லாவற்றிற்கும் காரணமான அந்தச் சுபத்ராவைச் சும்மா விடக் கூடாது. கல்யாண் கூட அடுத்த பட்சம்தான். முதலில் அவளைக் கவனிக்க வேண்டும். என்ன செய்யலாம்? குரூரமாய்ச் சிந்தித்தாள்.

காலிங் பெல் அழைத்தது, சிந்தனை அறுபட்டது.

அவ்வளவு சீக்கிரம் அம்மா வந்துவிட்டாளா, என்ன?

கதவைத் திறந்த சங்கமித்ரை திறந்த வாய் மூடவில்லை.

வந்திருந்தவள், சுபத்ரா.

''நல்லா யிருக்கியா மித்ரா!'' பயமும், வரவழைத்துக் கொண்ட புன்னகையுமாய்க் கேட்டாள் சுபத்ரா.

இடுப்பில் ஒரு கையும், கதவில் ஒரு கையுமாய் அவளை வழிமறைத்தபடி நின்று, ஏளனமும், முறைப்புமாய்ப் பார்த்தாள், சங்கமித்ரை.

''எங்கே வந்தே? இங்கே உன் கள்ளப் புருஷன் வர்லியே?''

சுபத்ராவுக்கு வலித்தது. எச்சிலோடு விழுங்கிக் கொண்டாள்.

''மித்ரா..! நீங்க என்னைத் தப்பா புரிஞ்சு வச்சிருக்கீங்க!''

''தப்பானவளைத் தப்பாத்தானே புரிஞ்சுக்க முடியும்?''

''ப்ளீஸ்.. நான் உன்கிட்டே பேசணும். வாசல்ல வச்சுப் பேச வேண்டாமே!'' என்றாள் கெஞ்சலாய்.

மித்ரா வழிவிட்டு உள்ளே செல்ல, பின் தொடர்ந்தாள் சுபத்ரா.

''சொல்லு. என்ன விஷயம்?''

''வீட்லே வேற யாருமில்லையா?''

''அதெல்லாம் உனக்கெதற்கு?''

''பெரியவங்களும் இருந்தா நல்லது. புரிஞ்சுப்பாங்க.''

''சும்மா சீன் காட்டாதே. வந்த விஷயத்தை மட்டும் சொல்லு!''

''கல்யாண் ரொம்ப நல்லவர், மித்ரா!''

''ஓ... அப்படியா? என்னை விட அவரை உனக்குத்தானே நல்லாத் தெரியும்! சொல்லு. அப்புறம்?''

''அபத்தமாய்ப் பேசாதே, மித்ரா. நாங்க நல்ல நண்பர்கள். அவ்வளவுதான். நீதான் தப்பாப் புரிஞ்சுக்கிட்டு டைவர்ஸ் வரைக்கும் போயிருக்கே!''

''டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பினது நானில்லே. உன்னோட கள்ளக் காதலன்தான்!''

''வேதனைப்படுத்தாதே, மித்ரா! அவரோட ஒவ்வொரு செயலுக்கும் அர்த்தம் கண்டுபிடிச்சு, சந்தேகப்பட்டே. நீ கொஞ்சம் அனுசரிச்சு இறங்கி வந்தா, எல்லாப் பிரச்சனையும் முடிஞ்சிடும், மித்ரா!''

''எப்படி யெப்படி...? நான் அனுசரிச்சிட்டுப் போகணுமா? எதை? நீயும், அவரும் கண்ட இடம் சுத்தித் திரியறதையா? கொஞ்சிக் கும்மாளம் போடறதையா?''

''அப்படி யெல்லாம் எதுவுமில்லேம்மா!''

''அப்படியா? சமீபத்துல கூடச் செங்காளியம்மன் கோவில்ல ரெண்டு பேரும் மணிக் கணக்கிலே உட்கார்ந்து பேசலே? நீ அழறதும், அவர் ஆறுதல் படுத்தறதும்.. அடடா..! நல்லாவே வசியம் பண்ணி வச்சிருக்கே. டபுள் கேம் ஆடறியா? அதான் நீயே கதின்னு கிடக்கிறாரே... அப்புறம் எதுக்கு என்கிட்டே வந்து நடிக்கிறே? என்ன முழிக்கிறே? இவளுக்கு எல்லா விஷயமும் எப்படித் தெரியுதுன்னா? என்னைச் சாதாரணமா எடை போட்டுடாதே!''



''சந்திச்சுப் பேசறது தப்பா?''

''அதான் எந்நேரமும் ஆபீஸ்லே ஒண்ணாவே இருக்கீங்களே! அதுவும் போதாம வெளியிலே வேற எதுக்குச் சந்திப்பாங்களாம்! சரி, நான்தான் அபாண்டமா பொய் சொல்றேன்னு வச்சுக்கிட்டாலும், உன் புருஷனும் பொங்கி அழறாரே. நீ அவருக்குப் பண்ற துரோகத்தை யெல்லாம் பொறுத்துக்கிட்டு உன் கூடக் குடும்பம் நடத்தறாரே!''

''அவர் அழுதாரா?''

''ஆமாம். அவரே எனக்கு ஒரு நாள் போன் பண்ணி நீ பண்ற கூத்தையெல்லாம் சொல்லி அழுதார். நான் அவர் இடத்திலே இருந்திருந்தா.. எப்பவோ உன்னை வீட்டை விட்டு விரட்டி அடிச்சிருப்பேன். அந்த மனுஷனா இருக்கவே பொறுமையா இருக்கார். இதுக்கு என்ன சொல்றே?''

சுபத்ரா வேதனையுடன் சிரித்தாள்.

''சில கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது, மித்ரா. ஆனா, ஒன்னை மட்டும் உறுதியா சொல்றேன். எங்களைச் சந்தேகப்பட்டு, உன் வாழ்க்கையைப் பாழாக்கிக்காதே! நான் வர்றேன்..''

''திரும்பவுமா? இனி வராதே. இது பத்தினிங்க வாழ்ற வீடு. நீ வந்து அசிங்கப்படுத்தாதே.''

''மி.. த்...ரா..!''

''போதும். கிளம்பு. உன்னைப் பார்த்தாலே எரிச்சலா இருக்கு.''

''...?''

''ஆனா, நிம்மதியா, சந்தோஷமா இருந்துடலாம்னு மட்டும் நினைச்சிடாதே! இனிதான் உனக்குக் கெட்ட காலமே ஆரம்பம்.

இதைப் போய் அப்படியே உன் ஆசைக் காதலன்கிட்டே சொல்லு!''

மனம் கல்லாக, வெளியில் இறங்கி நடந்தாள், சுபத்ரா.

''சீ..! இதெல்லாம் ஒரு பொழப்பு மானங்கெட்ட கழுதை!'' அவள் காதுபடவே சொல்லிய மித்ரா, கதவை ஓங்கிச் சாத்தினாள்.

பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்த சுபத்ரா, துளிர்த்த கண்ணீரை நாசூக்காய்த் துடைத்துக் கொண்டாள்.

எதிரே இரண்டு ஆண்கள் அவளையே பார்த்தபடி வந்து கொண்டிருந்தனர்.

★ ★ ★

''ஆமாம்.. மஞ்சள் கலரில், பச்சைக் கலர் பூப்போட்ட புடவை, கொஞ்சம் உயரமா, வெள்ளையா இருப்பா, நீதான் ஏற்கெனவே பார்த்திருக்கியே, கவனிச்சுக்க, ரேட் எவ்வளவுன்னு கேள்.. மத்ததெல்லாம் ஞாபகமிருக்கா? சரி வச்சிடறேன்!'' யாரிடமோ பேசி விட்டு வாய் விட்டுச் சிரித்தபடி செல்போனை பாக்கெட்டில் போட்டுக் கொண்டான் பிரபாகரன்.

''சுபத்ரா.. உன்னை விட மாட்டேன்டி. சின்னப் பையனா, வாட்ட சாட்டமா ஒருத்தனை வளைச்சுப் போட்டுக்கிட்டு ஊர் சுத்தறியா? ஊரே காறித் துப்பற அளவுக்கு உன்னை அசிங்கப்படுத்தறேன் பார்!'' சொல்லிவிட்டு மறுபடி சத்தமாய்ச் சிரித்தவனுக்கு இருமல் சேர்ந்து கொண்டது.

தொடர்ந்து இருமியவனுக்குத் தண்ணீர் தேவைப்பட்டது. அடுத்த அடி தண்ணீர்க் குடத்தை நோக்கி வைத்தவனால், அதற்கு மேல் அசைய முடியவில்லை.



கை, காலையெல்லாம் யாரோ இழுத்துப் பிடித்தாற் போல், மரத்துப் போக... குரலும் எழ மறுத்தது.

''ம..ஞ்..சு..!'' என்று வாய் அசைந்ததே தவிரக் குரல் எழும்பவில்லை.

என்னாயிற்று எனக்கு? பயந்து விட்டான்.

இரண்டு நிமிடங்கள் அந்த அவஸ்தை நீடித்து.. பின் சரியாயிற்று..

பிரபாகரனின் உடல் நடுங்கிற்று.

'என்ன பிரச்சனை எனக்கு?'



## 26

பால் பொங்கி வழிந்தது.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த கல்யாண் தீய்ந்த வாசனையால் ஈர்க்கப்பட்டுப் பதறினான்.

அடடா..! கேஸை அணைத்துப் பாலில் சர்க்கரையும், காபித் தூளையும் கலந்தவன்... பருகிக் கொண்டே கிச்சனை நோட்டம் விட்டான்.

குளிக்காத, தலைவிரிகோலப் பெண் போல ஒழுங்கின்றி இருந்தது. நேர்த்தியாக அடுக்கப்படாத தூள், பருப்பு வகை டப்பாக்கள், ஸிங்கில் கழுவப்படாத பாத்திரங்கள், பொங்கி வழிந்த குழம்பும், பாலும் கோலம் போட்டிருந்த கேஸ் ஸ்டவ்.

பார்க்கவே அருவருப்பாய் இருந்தது.

மாடுலர் கிச்சன் தொழிலில் இருப்பவன். அவன் நேர்த்தியைப் பாராட்டி ஏகப்பட்ட ஆர்டர்கள் குவியும். ஆனால் அவன் வீடு?

பெண் இல்லாத வீடு வெறும் காடுதான்!

அம்மாவாவது சீக்கிரம் வந்தால் தேவலை. அம்மாவுக்கு எல்லாமே சுத்தமாக இருக்க வேண்டும். அந்தந்த இடத்தில் பொருளை வைக்க வேண்டும், அம்மாவின் அந்த ஒழுங்கையும், நேர்த்தியையும், சுத்தத்தையும் சுபத்ரா வீட்டில்தானே பார்த்தேன்!

மறுபடி நினைவலைகள் சுபத்ராவை நோக்கி ஓடின.

அற்புதமான பெண்! நல்ல பெண்ணுக்கும், நல்ல ஆணுக்கும் கடவுள் ஏற்ற துணையைத் தருவதில்லை. அதற்கு நானும் சுபத்ராவுமே உதாரணம். பேசிவிட வேண்டும். என் மனதில் உள்ள அத்தனையையும் அவளிடம் கொட்டிவிட வேண்டும். இன்றோ, நாளையோ கண்டிப்பாய்ப் பேசிவிட வேண்டும்.

போன் ஒலித்தது.

குடித்து முடித்த காபி டம்ளரை வைத்துவிட்டுப் போனை நோக்கி ஓடினான்.

எஸ்டிடி! அம்மாவாய் இருக்குமோ?

''ஹலோ...!'' என்றான் எடுத்து.

''குட் மார்னிங் கல்யாண்! நான்தான் பாலாஜி பேசறேன்!''

எதிர்பார்க்காத கல்யாண் சுரத்தையின்றி, ''குட்மார்னிங்!'' என்றான்.

''எதிர்பார்த்திருக்க மாட்டே. புரியுது. ஆனா வேற வழியில்லை. தலைக்கு மீறி வெள்ளம் போய்க்கிட்டிருக்கு. அம்மா நடந்த எல்லாத்தையும் சொல்லி அழுதாங்க. நான் மித்ரா விஷயத்திலே தலையிடக் கூடாதுன்னுதான் நினைச்சிருந்தேன். ஆனா முடியலே கல்யாண்!''

''...''



''நான் இப்ப டெல்லியிலே இருக்கேன். இன்னும் ரெண்டு மாசம் இங்கே யிருந்தாக வேண்டிய கட்டாயம். பிரச்சனை டைவர்ஸ் வரைக்கும் போயிருக்குன்றதே பெரிய வேதனையான விஷயம். நீயும், மித்ராவும் உயிருக்குயிரா நேசிச்சீங்களே..! அப்புறம் எப்படிக் கல்யாண் சட்டுனு இப்படி ஒரு முடிவை எடுத்தே?''

''பாலாஜி.. ப்ளீஸ்.. முடிஞ்சு போன விஷயத்தைக் கிளறாதே! உன் தங்கையால நான் பட்ட வேதனைகளும், அவமானங்களும் போதும். காலத்துக்கும் மறக்க முடியாதபடி பண்ணிட்டா. என்னை மட்டுமல்லாம, என்னைச் சுத்தி உள்ளவங்களையும்.''

''தெரியும் கல்யாண். அவங்க பேரென்ன.. ம்.. சுபத்ரா! அவங்களையும் ரொம்பக் கஷ்டப்படுத்தியிருக்கா மித்ரா. ஏதோ அவசரத்துல கண்ணு மண்ணு தெரியாம நடந்துக்கறா. தப்புத் தப்பா முடிவெடுக்கிறா. எனக்கும் ஆத்திரம் வருது. தண்டனை அனுவிக்கட்டும்னு என்னால சும்மாயிருக்க முடியலே கல்யாண். என் கூடப் பொறந்து தொலைச்சிட்டாளே! எனக்காக அவளை மன்னிச்சிடு, கல்யாண். மித்ராவைப் பத்தி எனக்குத் தெரியும். உன் மேல ஏகப்பட்ட பாசம் அவளுக்கு. அதனால தான் இப்படி நடந்துகிறா, நான் வந்து அவளுக்குத் தெளிவு படுத்தறேன். நீ மட்டும் அவசரப்பட்டு முடிவெடுத்திடாதே, கல்யாண்... ப்ளீஸ்!''

''இங்கே பாரு பாலாஜி. நான் பக்குவமில்லாதவன் இல்லே. நான் யோசிச்சுதான் இந்த முடிவை எடுத்திருக்கேன்.''

''இப்படிப் பிடிவாதமா பேசினா எப்படி, கல்யாண்? பிரச்சனைக்குத் தீர்வு டைவர்ஸ் இல்லே.''

''முதல்ல உன் அருமைத் தங்கச்சியைத் திருத்து. பிறகு பார்த்துக்கலாம்!'' கோபமாகப் பதிலளித்து விட்டு, போனைப் பட்டென்று வைத்தான், கல்யாண்.

இவன் வேறு நேரம் காலம் தெரியாமல்... கொஞ்சமாவா பாடு படுத்தினாள் மித்ரா? மன்னிப்பதாம். நான் முடிவு எடுத்தாச்சு. என் வாழ்க்கையில் இனி மித்ராவுக்கு இடமில்லை. அவளாவது... திருந்துவதாவது...!

அதன் பின் அலுவலகம் புறப்பட ஆயத்தமானான். குளித்து முடித்து உடையணிந்தவனை செல்போன் அழைத்தது.

சங்கமித்ரைதான்!

இவளெதற்குப் பண்ணுகிறாள்?

''ஹலோ...'' என்றான்.

''ஹலோ... நான்தான்!''

''தெரியுது... என்ன விஷயம்?''

''தலையிலே கிரீடம் வச்ச மாதிரி மிதப்பீங்களே!''

''எனக்கு வேலையிருக்கு... என்ன விஷயத்துக்காகப் போன் பண்ணினேன்னு சொன்னா நல்லது!''

''ஆமாமா.. சார் இப்பல்லாம் எவ்ளோ பிஸின்னு எனக்குத் தெரியாதா? ஒரு நாளைக்கு இருபத்து நாலு மணி நேரம் போதாதே. இதெல்லாம் தெரியாம எங்கண்ணன் வேற போன் பணணிக் கெஞ்சியிருப்பானே?''

''...''

''அவர் விஷயம் தெரியாதவர் சார். நண்பன் மேல அபார நம்பிக்கை. அதனால என் மேலதான் தப்புன்னு உங்ககிட்டே மன்னிப்புக் கேட்டு எனக்கு வாழ்க்கை தரச் சொல்லிப் பிச்சை கேட்டிருப்பார். சார்.. அதுக்காக இரக்கப்பட்டுப் பிச்சை போட்டுடாதீங்க.. சுபத்ரா ஒரு சாக்கடைன்னு கட்டின புருஷனே சர்டிபிகேட் கொடுத்துட்டார்.. அந்தச் சாக்கடைல மொய்க்கிற ஈ.. அதாவது நீங்க எனக்கு வேண்டாம். நான் சுத்தமானவ..!''



''இதோ.. பார்..''

''இருங்க சார். முடிச்சிடறேன். நாமதான் பிரியறதுன்னு முடிவாகியாச்சே... பிறகெதுக்கு உங்க ஆசை நாயகியை என் வீட்டுக்கு அனுப்பி டிராமாப் போடணும்?''

''என்னது... சுபத்ரா உன் வீட்டுக்கு வந்தாங்களா?''

''ஏன் நடிக்கிறீங்க? என்னை ஏமாத்த யாராலும் முடியாது. நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நல்லாக் கேட்டுத்தான் அனுப்பினேன். எனக்கு ஒண்ணு மட்டும் புரியலே. ரெண்டு பேரும் நகமும் சதையும் போல இருக்கீங்க. பிறகேன் அவ இங்க வந்து நடிக்கிறா?''

''ஏய்.. சுபத்ரா.. பேரைச் சொல்லக் கூட யோக்யதை இல்லே உனக்கு. வை போனை.. கோர்ட்டில் சந்திப்போம்.''

★ ★ ★

''எதுவாயிருந்தாலும் ஆபீஸிலேயே பேசியிருக்கலாமே, கல்யாண்? எதுக்கு இந்த ரெஸ்டாரண்டுக்கு வரச் சொல்லி வற்புறுத்தினீங்க? நாம இப்படி வெளியிலே சந்திக்கிறது ஆரோக்கியமான விஷயமில்லே!'' என்றாள், தயக்கத்துடன், சுபத்ரா.

''முதல்ல ஸ்வீட்டைச் சாப்பிடுங்க.. அப்புறம் பேசலாம்!''

சாப்பிட்டனர். வேறு எதையும் சாப்பிட மறுத்ததால் அவனும் வற்புறுத்தவில்லை.

சுபத்ரா அவனுடன் வெளியில் சந்திப்பதைத் தவிர்க்க நினைத்தாள். தன்னையும் அவனையும் இணைத்துப் பிரபாகரனும், சங்கமித்ரையும் சந்தேகப்படுவதும், அதன் விளைவாகக் கல்யாணும், மித்ராவும் விவாகரத்து வரை போயிருப்பதும் அவளை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி இருந்தது.

அவ்வப்போது நடப்பதுதான் என்றாலும், அன்று சில ஆண்கள் அவளிடம், 'ரேட் என்ன?' என்ற ரீதியில் ஆரம்பித்து, அவளையும், கல்யாணையும் சம்பந்தப்படுத்திப் பேசி, அவனை விட நாங்கள் எதிலும் குறைந்தவர்கள் இல்லை, எவ்வளவு கேட்டாலும் தருகிறோம்... வா என்று கைப்பற்றி இழுத்ததும், அவர்களிடமிருந்து தப்பித்து ஓடியதும்,இப்போது நினைத்தாலும் நடுங்கியது. அதற்குக் காரணம் பிரபாகரன் என்பதும் புரியாமலில்லை.

இந்தப் பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று தீவிரமாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

இந்த நேரத்தில், முக்கியமாய்ப் பேச வேண்டும் என்று கல்யாண் வேறு அழைத்து வந்து விட்டான்.

''சொல்லுங்கள், கல்யாண்... மஞ்சு காத்திருப்பாள். போகணும்!''

''என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள், சுபத்ரா?''

''என்ன திடீரென்று?''

''ப்ளீஸ்... சொல்லுங்களேன்!''

''இனிய நல்ல நண்பர்!''

''ஆக.... நான் நல்லவன் என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லையே!''

''இல்லை.''

''அன்று உங்கள் எதிர்காலப் பிரச்சனைக்கு வழி சொல்கிறேன் என்றேன், அல்லவா?''

''ஆமாம்!''

''ரொம்ப யோசித்து, நான் இந்த முடிவை எடுத்திருக்கிறேன். ஆனால், அவசரப்பட்டு என்னைத் தவறாக நினைத்துவிடக் கூடாது!''



''புதிர் போடுகிறீர்கள்! என்ன முடிவு? அதைச் சொல்லுங்கள்.''

''முதலில் நீங்கள் டைவர்ஸுக்கு அப்ளை செய்யுங்கள்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''மஞ்சுவுக்கு ஒரு நல்ல வாழ்க்கை, எதிர்காலம் தேவை. அதற்காகத்தானே இவ்வளவு அவமானப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?''

''ம்!''

''நானிருக்கிறேன், சுபத்ரா. அவளை என் மகளாக ஏற்றுக் கொண்டு அவளுக்கு நல்ல வாழ்க்கையை நான் அமைத்துத் தருகிறேன்.''

பெரிய இடியொன்று தலையில் விழுந்தது போல் அதிர்ச்சியில் உறைந்து போனாள், சுபத்ரா.

''வயது வித்தியாசத்தை விடுங்கள். நாமிருவருமே லைஃப் பார்ட்னரால் வாழ்க்கையை இழந்தவர்கள். இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி வேதனைப்படுத்தியவர்கள் வாயை அடைக்க இதுதான் வழி. இந்த ஊரை விட்டே போய் விடுவோம்.. புத்தம் புது ஊரில் மஞ்சுவுக்காக வாழ்வோம்.''

''....''

''நான் ரொம்ப யோசிச்சுதான் இந்த முடிவை எடுத்திருக்கிறேன். நீங்களும் யோசித்து ஒரு நல்ல முடிவைச் சொல்லுங்கள்.. சொல்வீர்களா, சுபத்ரா?'' சட்டென அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

திடுக்கிட்ட சுபத்ரா வேதனையும் கண்ணீருமாய் அவனைப் பார்த்தவள், மெல்லக் கையை விடுவித்துக் கொண்டாள்.

''நேரமாகிறது. நான் வருகிறேன்!''

''ஒன்றும் சொல்லாமல் போகிறீர்களே?''

''யோசித்துச் சொல்கிறேன்!'' என்றவள் வேகமாய் வெளியேற...

நம்பிக்கையுடன் நிம்மதியாய் மூச்சு விட்டான் கல்யாண்.



## 27

எல்லா ஆண்களும் ஏன் அவசர புத்திக் காரர்களாகவே இருக்கிறார்கள்? பிரபாகரன் தான் அப்படி என்றால், கல்யாணுமா? கல்யாண் இப்படியொரு முடிவை எடுக்க எது காரணமாய் இருக்க முடியும்? மித்ராவைப் பழிவாங்கவா? அல்லது என் மீதுள்ள பரிதாபமா? காரணம் எதுவாய் இருந்தாலும் எடுத்த முடிவு தவறுதான்! இனி இதைப் பற்றி யோசிப்பதை விட, நான் ஒரு சரியான முடிவு எடுத்தாக வேண்டிய நேரம் வந்து விட்டது.

தீர்மானித்த சுபத்ரா எதிரே இருந்த டேபிளைப் பார்த்தாள்.

காலியாய் இருந்தது.

கல்யாண் இன்னும் அலுவலகப் பணியாய் வெளியே சென்றிருந்தான். மூன்று நாட்களாய் இப்படித்தான் வெளியில் சென்று விடுகிறான். அவளுக்கு யோசிக்க அவகாசம் தருகிறானாம். சுபத்ராவுக்கும் அவன் இல்லாதது நிம்மதியைத் தந்தது. சங்கடத்தைத் தவிர்க்க முடிந்ததே!

தன் டேபிள் டிராயரைத் திறந்தாள். ஏகப்பட்ட விசிட்டிங் கார்டுகளுக்கு மத்தியில் குறிப்பிட்ட அந்தக் கார்டைத் தேடினாள். ஐந்து நிமிடத் தேடலுக்குப் பின் கிடைத்தது.

அதிலிருந்த நம்பரைப் பார்த்து போனில் ஒற்றியெடுக்க, மறுபுறம் ரிங் போனது.

* * *



டாக்டர் ரிப்போர்ட்டைப் படித்து முடித்து விட்டு, யோசனையுடன் எதிரே அமர்ந்திருந்த பிரபாகரனைப் பார்த்தார்!

''உங்க கூட யாரும் வரலியா, மிஸ்டர் பிரபாகரன்?''

''எனக்கு யாருமே இல்லை!''

''மனைவி?''

''செத்துப் போயிட்டா.''

''ஓ.. ஸாரி..!''

''ரிப்போர்ட் என்ன சொல்லுது டாக்டர்.. எதுவாயிருந்தாலும் மறைக்காமச் சொல்லுங்க...நான் ரொம்ப தைரியசாலி!''

''நிறைய குடிப்பீங்களா?''

''நிறையவே!''

''உங்க லங்ஸ் ரொம்ப டேமேஜ் ஆகியிருக்கு. தலையிலே லைட்டா ப்ளட் க்ளாட்டாகியிருக்கு. உடனடியா ஆபரேஷன் பண்ணிட்டா சரிப்படுத்திடலாம். அதனாலதான் சில சமயம் உங்களுக்கு கை கால் இழுத்துப் பிடிச்ச மாதிரி. பேச்சு வராம சிரமப்பட்டீங்க... இது ஸ்ட்ரோக் வர்றதுக்கான அறிகுறி.''

''....?''

''இந்த நிமிஷத்திலேர்ந்து நீங்க குடிக்கறதை விட்டாகணும். இல்லேன்னா...''

''ஆபரேஷனுக்கு எவ்வளவு ஆகும் டாக்டர்?''

''ஒண்ணறையிலிருந்து ரெண்டு லட்சம் வரை. டோன்ட் ஓர்ரி மிஸ்டர் பிரபாகரன். ரிலாக்ஸ்டா இருங்க. கண்டிப்பா க்யூர் பண்ணிடலாம்.''

''ஓகே டாக்டர்! நான் பணத்தோட வர்றேன்.''

''குடிக்கக் கூடாது.. அது முக்கியம்..''

''கண்டிப்பா டாக்டர். இனிக் குடிக்கவே மாட்டேன்!''

ஹாஸ்பிடலை விட்டு வெளியே வந்தவன் வாசலில் காறித் துப்பினான்.

''த்தூ.. நாதாறிப்பய.. சாதாரண கேஸ் ட்ரபிளுக்கு ஆபரேஷன் பண்ணணுமாம். என் உடம்பைப் பத்தி எனக்குத் தெரியாதா? ஒரே நேரத்தில் பத்துப் பேரைத் தூக்கிப் போட்டு உதைக்கிற உடம்பு இது. தலையில அதுவாம். லங்ஸ்ல இதுவாம். யாரை ஏமாத்தறான்? இந்தக் காலத்திலே எந்த டாக்டர் உண்மையா நடந்துக்கிறான்? படிப்புக்குச் செலவு பண்ணின காசை எடுக்கறதுக்காகச் சாதாரணக் காய்ச்சலுக்குக் கூட ஆபரேஷன் பண்றானுங்க. முதல்ல.. நான் இங்கே வந்ததே தப்பு.'' கையிலிருந்த மெடிக்கல் ரிப்போர்ட்டை நான்காய்க் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டான்.

இருபதடி தொலைவில் இருந்த டாஸ்மாக் கடைக்குள் நுழைந்தான்.

★ ★ ★

பள்ளிக்குத் தயாராகி நின்றிருந்த மகளிடம் வந்தாள், சுபத்ரா.

''லஞ்ச் பாக்ஸ் எடுத்துக்கிட்டியா, மஞ்சு?''

''ம்..!''

''புக்ஸெல்லாம் எடுத்து வச்சுக்கிட்டியா?''

''ம்!''



சுபத்ராவுக்கு மகளைப் பார்க்க வேதனையாக இருந்தது. அவளிடம் சரியாகவே முகம் கொடுத்துப் பேசுவதில்லை. ...லில் விஷம் கலந்து விட்டானே, பிரபாகரன் . இனியும் அவனிடம் மகளை விட்டு வைத்திருப்பது தவறு.''

''அப்ப சரி. கிளம்பு. ஆட்டோ வந்துடுச்சே?''

''நான் கொஞ்சம் பேசணும்மா!''

''என்னடா...? கேளு..!''

''இன்னும் ரெண்டு வாரத்துல ஆனுவல் எக்ஸாம்.''

''தெரியுமே!''

''இப்பவே ஹாஸ்டல்ல அப்ளை பண்ணினாதான் செவன்த் அங்கே படிக்க முடியுமாம். விசாரிச்சேன்!''

பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள், சுபத்ரா.

''மஞ்சு... எக்ஸாம் வருது. அதுல மட்டும் கான்சன்ட்ரேட் பண்ணு. கூடிய சீக்கிரம் நீ கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைக்கும். உன் விருப்பப்படியே படிக்கலாம். கவலைப் படாதே!''

மஞ்சு அம்மாவையே வியப்பாய்ப் பார்த்தாள்.

''நம்பிக்கையாட போம்மா. நீ நல்லாருக்கணும்னு என்னை விட அதிகமா யாரும் ஆசைப்பட்டுட முடியாது. உன்னைச் சந்தோஷமா வச்சுக்க என்ன செய்யணுமோ... அதை நான் செய்வேன். போம்மா. நேரமாச்சு பார்.''

மஞ்சுவிடம் கொஞ்சம் தெளிவு பிறக்க.. படியிறங்கி ...ந்தாள்.

''என்னை விட்டுப் பிரிய அவ்வளவு அவசரப்படுகிறாயே மஞ்சு. அவ்வளவு வெறுப்பா என் மீது?' கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

★ ★ ★

''சொல்லு, சுபத்ரா!''

அறைக்குள் நுழைந்த அடுத்த நிமிடமே கல்யாண் கேட்க, ஃபைலில் மூழ்கியிருந்த சுபத்ரா கண்களில் கேள்வியுடன் ஏறிட்டாள்.

''என்ன சொல்லணும்?''

''உனக்கு யோசிக்க அவகாசம் கொடுத்தேன். இரண்டு வாரம் ஓடிப் போச்சு. அந்த விஷயத்தைப் பத்திதான் கேட்கிறேன்.''

''முக்கியமான வேலையில் இருக்கிறேன், மிஸ் கல்யாண். இன்னொரு நாள் பேசுவோமே!''

''இது அதை விட முக்கியமான விஷயம். நம்ம ரெண்டு பேரோட வாழ்க்கைப் பிரச்சனை.''

''சரி... அதுக்காக இங்கேயேவா? இது ஆபீஸ். நம்ம பர்சனல் மேட்டரைப் பேசற இடமில்லே.''

''பரவாயில்லை. இதுநாள் வரைக்கும் நம்ம ரெண்டு பேரும் கடமை தவறாமதான் வேலை செய்தோம். இன்னைக்கு ஒரு நாள் கடமை தவறுவதில் தப்பில்லைன்னு நினைக்கிறேன். எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும். சொல்லு.''

''நீங்க இப்படிப் பேசறதே எனக்குப் பிடிக்கலே!''

''எது பிடிக்கலே?''

''என்னை உரிமையோட... நீ.. வா.. போன்னு பேசறதை!''



''சு.. ப.. த்.. ரா..!''

''நட்போட பழகணும்னு நினைச்சீங்கன்னா அந்த உரிமைய நான் தருவேன்! ஆனா, என்னை உங்க உடைமையா நினைச்சு எடுத்துக்கற உரிமையிலே உடன்பாடில்லை எனக்கு!'' என்றாள் தெளிவாக.

அதிலேயே அவள் பதில் புரிந்து போகத் துடித்துப் போனான், கல்யாண்.

''சுபத்ரா..! யோசிக்காம அவசரப்பட்டு முடிவெடுக்காதீங்க. நான் நல்லவன், சுபத்ரா. உங்களுக்குத் தெரியாதா என்னைப் பத்தி?''

''நான் நல்லா யோசிச்சுதான் இந்த முடிவை எடுத்தேன். என் நண்பர் ரொம்ப நல்லவர். அதிலே எனக்குக் கர்வம் உண்டு. ஆனா, என் நண்பர் மனசு சொல்றபடி கேட்டு முடிவெடுப்பவர். அவ புத்தி சொல்றதைக் கேட்டு நடக்கிறவ. தேவிங்கற பெண்ணுக்காகப் பிரபாகரன் எனக்குக் கொடுத்த தண்டனைக்கும், சுபத்ராங்கற பெண்ணுக்காக மித்ராவுக்கு நீங்க கொடுக்கப் போகிற தண்டனைக்கும் பெரிய வித்தியாசமில்லே, கல்யாண்!''

''....?''

''சமூகம் நம்மளைத் தப்பா பார்க்குதுன்னா அது தப்புன்னு உணர வைக்கணும். தவிர நாமளும் கல்லெறிஞ்சு பழி உணர்ச்சியை நிரூபிக்கக் கூடாது. மித்ராவின் கோபத்துக்கு நீங்க தருகிற தண்டனை பெரிசு. இதைக் கூட உங்களால் சகிச்சுக்க முடியலேன்னா நீங்க அவளை நேசிக்கிறதே பொய்னு சொல்வேன்!''

''அவதான் என்னை அசிங்கப் படுத்தினா!''

"இருக்கட்டுமே... அன்பு காட்டினவளும் அவதானே அதை ஏன் மறந்தீங்க?"

"வியாக்கியானம் பேசாதீங்க. மஞ்சுவின் எதிர் காலத்து காகத்தானே இந்த முடிவை எடுத்தேன்? பிரபாகரன் உங்களை அசிங்கப்படுத்துவது மட்டும் மஞ்சுவின் எதிர்காலத்தை பாதிக்காதா?"

"கண்டிப்பா பாதிக்கும். அதுக்கும் ஒரு வழி இருக்கு!"

"என்ன வழி?"

"இனி என் வாழ்க்கையில் பிரபாகரனுக்கு இடமில்லை மஞ்சுவோட தனியே போய்டப் போகிறேன்!"

"மஞ்சுவின் அப்பா யார்னு கேட்க மாட்டாங்களா?"

"கண்டிப்பாகக் கேட்பாங்க... என் பூவையும், பொட்டை பார்த்து! அதை எடுத்துட்டா?"

"சுபத்ரா!"

"யெஸ். என் முடிவு எல்லா வகையிலும் சரின்னு நினைக்கிறேன். என் மனதில் உங்களுக்கென்று ஓர் உயர்ந்த இடமுண்டு, கல்யாண். அங்கே நட்பென்கிற கிரீடம் சூட்டிக் கம்பீரமாக அமர்த்தியிருக்கிறேன். அந்தக் கம்பீரம் குறையக் கூடாது. ஸோ.. இனி இதைப்பத்தி நாம் பேச வேண்டாம்!"

"சுபத்ரா... இன்னும் கூட இதை ஒரு தீர்மானமான முடிவாய் எடுத்துக் கொள்ள முடியவில்லை. டேக் யுவர் ஓன் டைம்.. யோசிச்சு ஒரு நல்ல முடிவாய்ச் சொல்லுங்க!" என்றவன் அதே வேகத்தோடு வெளியேறினான்.

"கடவுளே!" என்று தலையைப் பிடித்துக் கொண்டா சுபத்ரா.

பத்து நிமிடம் கடந்திருக்கும்.

போன் வந்தது. அதில் வந்த செய்தி அவளை உறைய வைத்தது.

பதறியபடி இருக்கையை விட்டு எழுந்தாள்.



28

"ஏ..என்னது?" காதிலிருந்த போன் கை நழுவிக் காலுக்கடியில் பூமி நழுவப் பார்த்தது.

சமாளித்துக் கொண்டாலும், கண்களில் கரகரவென்று வழிந்தது சங்கமித்ரைக்கு.

"ஏ.. என்னடி.... என்னாச்சு? ஏன் அழறே?" அதுநாள்வரை பேசாமலிருந்த செந்தாமரை மகளைப் பார்த்துப் பதறி விட்டாள்.

"அ.. அவருக்கு.. அவருக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சாம்..!"

"ஐயோ.. எந்த ஆஸ்பத்திரியிலே இருக்கார்?"

சங்கமித்ரைக்குப் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. அம்மாவுக்குப் பதில் சொல்ல இருப்புக் கொள்ளாமல் ஓடினாள் வெளியே!

★ ★ ★

ஹாஸ்பிடல்!

காரிடாரில் வரிசையாய்ப் போடப்பட்டிருந்த சேர்களில் இறுக்கமான முகத்தோடு சுபத்ரா அமர்ந்திருக்க... நான்கைந்து சேர்கள் தள்ளி மஞ்சு அழுது கொண்டிருந்தாள்.

அவள் அழுகையை நிறுத்தவோ, ஆறுதல் படுத்தவோ முடியாமல், ஜடமாய் அமர்ந்திருந்தாள் சுபத்ரா.

பதறியடித்துக் கொண்டு உள்ளே நுழைந்த மித்ராவைப் பார்த்து விட்டாள், சுபத்ரா. மஞ்சுவும் அழுகையை நிறுத்தி அவளை ஆச்சர்யமாய்ப் பார்த்தாள்.

''எங்கே.. எங்கே என் கல்யாண்? என்னாச்சு அவருக்கு?''

''பதறாதே.. மித்ரா... பொறுமையா யிரு!'' என்றாள் சுபத்ரா.

''பொறுமையா? இன்னுமா? திருட்டுத்தனமா சுகம் தேடற உனக்கு என்னடி தெரியும்? அவருக்கு ஏதாவது ஆச்சுன்னா... நானில்லே தாலியை இழக்கணும்?''

''அபத்தமாய்ப் பேசாதே, மித்ரா.. இது ஹாஸ்பிடல்.. பிஹேவ் யுவர் செல்ப்! நான் சொல்றதை முதல்ல கேள்!''

''என்னடி கேக்கச் சொல்றே? என் கல்யாண் என்னை விட்டுப் பிரிஞ்சதே உன்னாலதான். என்னை வெறுக்க நீதான் காரணம். அநியாயமா எங்க ரெண்டு பேரையும் பிரிச்சிட்டியே! நான் அவரை எவ்வளவு நேசிச்சேன்? தெரியுமா உனக்கு? டைவர்ஸ், டைவர்ஸ்னு வாய் கிழியக் கத்துறேனே ஒழிய... அவர் என்னை டைவர்ஸ் பண்ணின அடுத்த நிமிஷமே உயிரை மாய்ச்சுக்க முடிவெடுத்திருக்கிற கோழை நான்! இப்ப அதுக்குக் கூட அவகாசம் தராம அவரோட வெளியிலே சுத்தி ஆக்ஸிடெண்ட் ஆகி.. ச்சீ... நீயெல்லாம் பொம்பளையா? உன்னை...'' கைநீட்டி ஓங்கி அறைய முற்பட்ட மித்ராவின் கரத்தைப் பற்றியது வலிய கரமொன்று.

திடுக்கிட்டுத் திரும்பிய மித்ரா மேலும் அதிர்ந்தாள்.



26918

காரணம்.. அங்கு திடகாத்திரமாக நின்றிருந்தது சாட்சாத் கல்யாண்தான்.

''நீ.. நீங்களா?''

''.....?''

''உ... உங்களுக்கு ஆக்ஸிடெண்ட்னு இது போன் பண்ணி...''

''முதல்ல என்னை மன்னிச்சிடு, மித்ரா'' என்றாள், சுபத்ரா. ''நான்தான் அப்படியொரு பொய் சொல்லி இங்கே வர வழைச்சேன்.''

''...?'

''ஹாஸ்பிடல்ல அட்மிட் செய்யப்பட்டிருப்பது மிஸ்டர் பிரபாகரன்! ஸ்ட்ரோக் வந்து சீரியஸான நிலைமையிலே இருக்கிறார்.''

''வாட்?''

''நீ கல்யாணையும் என்னையும் புரிஞ்சுக்கணும். கல்யாண் உன்னைப் புரிஞ்சுக்கணும்னுதான் பொய் சொல்லி வரவழைச் சேன்!''

''.....?''

''என் பர்சனல் விஷயங்களைச் சொல்லி அனுதாபத்தைத் தேடிக்கிறது எனக்குப் பிடிக்காத விஷயம். அதனாலதான் இதுநாள் வரைக்கும் உன்கிட்டே சொல்லலை, மித்ரா. சொல்லியிருந்தா என்னைப் புரிஞ்சிட்டிருப்பே. ஆனா, இப்ப எல்லாம் கைமீறிப் போய்டும் போலிருக்கு. அதனாலதான் சொல்றேன்,'' என்றவள், கல்யாணை அழுத்தமாய்ப் பார்த்து

மாவட்ட நூலக கிளை நூலகம்

விட்டுத் தன் கடந்த கால வாழ்க்கை முழுவதையும் சொல்லி முடித்தாள்.

சங்கமித்ரை வாயடைத்துப் போயிருந்தாள்.

மஞ்சுவோ ஸ்தம்பித்துப் போயிருந்தாள்.

''ஒரு பெண் ஆணைச் சந்தேகப்பட்டா, பாதி வீடு எரிஞ்ச மாதிரி! ஆனால், ஒரு ஆண் பெண்ணைச் சந்தேகப்பட்டுட்டா முழு வீடும் எரிந்த மாதிரி! என் கணவரை விட்டு விலகாத தற்குக் காரணம் நான் அவரை நிஜமாக நேசித்தது. அதே சமயம் தெரிந்தே தவறு செய்த அவரை மனதளவில் விலக்கி வைத்தேன். அவர் செய்த தவறுக்கு மூல காரணம், [illegible] மீது அவர் வைத்திருந்த உண்மையான காதல் என்னால் சிதைஞ்சு போன கோபம். ஆனா, அதுக்காக எனக்குக் கொடுத்த தண்டனைகள் அதிகம். என்னைப் பற்றி மித்ரா வீட்டிற்கும், ஆபீசிற்கும் மொட்டைக் கடிதம் போட்டது, வீட்டிற்கே பெண்களை வரவழைத்துச் சல்லாபித்தது, நண்பர்களை ஏவி விட்டு என்னிடம்...'' சொல்லும்போதே குரல் உடைந்து போக, எச்சிலை விழுங்கி அழுகையை அடக்கி விட்டுத் தொடர்ந் தாள்.

''இதையெல்லாம் யாரால் தாங்கிக் கொள்ள முடியும்? சொல்லு, மித்ரா. ஆனால், எல்லாத்தையும் என் மகளுக்காகப் பொறுத்துக்கிட்டேன். என் வாழ்க்கையை மஞ்சுவுக்காக அர்ப்பணித்தேன். அவளோட எதிர்கால நலனுக்காகத்தான் அதே வீட்டில் வசித்தேன். நான் வாழ்வது மஞ்சுவுக்காக! இதில் பிரபாகரனுக்கோ, கல்யாணுக்கோ இடமில்லை. கல்யாண் என் நண்பர். பிரபாகரன் என் மகளின் தந்தை. நான் மஞ்சுவின் தாய்! இவைதான் என்னைச் சுற்றியுள்ள மனிதர்கள் ஏற்றிருக்கிற கதாபாத்திரங்கள்.



''மித்ராவின் சந்தேகத்துக்குப் பின்னே கல்யாண் மீது வைத்துள்ள மிகப் பெரிய காதல் ஒளிந்திருப்பதுதானே நிஜம்? அவர் சந்தேகப்படுமளவிற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தது நீங்கள்தானே? மனைவியைப் பயமுறுத்திப் பார்ப்பதும் சந்தேகப்பட வேண்டும் என்பதற்காகப் பொய் சொல்வதும் ஆண்களுக்கு ஒரு சந்தோஷம், அது மித்ரா விஷயத்தில் விபரீதமாகி விட்டது.

''மித்ராவைப் பற்றி நான் புரிந்து வைத்திருக்கிற அளவிற்குக் கூட நீங்கள் புரிஞ்சுக்கலையே, கல்யாண்? அதனால்தான் உங்களை மறைவாய் நிற்கச் சொன்னேன். அவள் பதறி வந்த [illegible]ந்தைப் பார்த்தீர்கள் அல்லவா? டைவர்ஸ் கிடைச்சா புதுசா ஒரு வாழ்க்கையைத் துவங்குகிற அளவுக்கு இல்லே அவளோட கோபம்! உயிரை மாய்ச்சுக்க நினைக்கிற அளவுக்குக் காதல் உங்கள் மீது! சிறு தும்மலுக்கெல்லாம் டைவர்ஸ் கேட்டு கோர்ட்டுக்கு ஓடினால் இந்தியா என்னாவது?

''மனித வாழ்க்கைங்கிறது பல திருப்பங்களைக் கொண்ட ஆறு. நாமளும் விதியோட கைகோத்துக்கிட்டு ஓடிக்கிட்டே தான் இருக்கணும். ஆண்களுக்குத் தொழில் உயிர் என்றால், பெண்களுக்குப் புருஷன்தான் உயிர். இதை நான் உங்களுக்கு மட்டும் ஏன் சொல்றேன்னா, காரணமே இல்லாம மித்ரா சந்தேகப்பட அஸ்திவாரம் போட்டதே நீங்கள்தான்!'' என்றாள், நீளமாய் உபதேசித்து, சுபத்ரா.

மித்ரா சுபத்ராவை நெருங்கி வந்தாள்.

கை கூப்பி வணங்கினாள்.

''என்ன மித்ரா இது?'

''எனக்கு என்ன பேசறதுன்னே புரியலிங்க, நான் அபத்தமா பேசின பேச்சுக்களை மன்னிப்பதால மட்டும் பாவத்தைப் போக்கிட முடியாது. ஆனாலும் கெஞ்சிக் கேட்டுக்கிறேன், மன்னிச்சிடுங்க ப்ளீஸ்!'' என்றாள், கன்னங்களில் கண்ணீர் கோடு போட.

''சீச்சீ... அழக் கூடாது. நீயும் கல்யாணும் சேர்ந்து வாழ்ந்தால் அதுவே போதும் எனக்கு!''

''பெண்கள்னா பொறுமையின் சிகரமா இருக்கணும். அதை நீங்க எனக்கு உணர வச்சுட்டீங்க. நான் அவரோட சேர்ந்து வாழத் தயாராயிருக்கிறேன். அவர் தயாரான்னு கேட்டுச் சொல்லுங்க!''

''என்ன கல்யாண், உங்களுக்கு இப்ப மீடியேட்டர் தேவைதானா?'' என்று கேட்டாள், சுபத்ரா.

அவளை மன்னிப்புக் கோரும் பாவனையுடன் பார்த்தவன்.. சித்ராவின் அருகில் சென்றான்.

நான்கு கண்களும் எதையோ பேசின. அழுதன. சிரித்தன. நான்கு கரங்களும் ஒன்று சேர்ந்தன.

சுபத்ரா நாசூக்காக அங்கிருந்து நகர்ந்தவள் ஐசியுவில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரபாகரனைக் கண்ணாடிக் கதவின் வழியே பார்த்தாள்.

கண்மூடிப் படுத்திருந்த பிரபாகரனுடன் ஏதேதோ கருவிகள் இணைக்கப்பட்டிருந்தன.

சுபத்ராவின் திறமையைப் பார்த்துக் கேரளாவில் இருந்த பெரிய நிறுவனமொன்றின் எம்.டி. தன் நிறுவனத்தில் சேருமாறு எப்போதோ கேட்டிருந்தார்.



அவளும் தொடர்பு கொள்ள.. உடனே வந்து பணியில் சேருமாறு அழைக்க, பத்து நாளில் ஜாயின் பண்ணியாக வேண்டும். இந்த நேரம் பார்த்துத்தானா இவனுக்கு?

அவள் கால்களைச் சேர்த்துக் கட்டிப் போட்டது போல் உணரக் குனிந்து பார்த்தாள்.

மஞ்சு!

''என்னை மன்னிச்சிடும்மா. ஸாரிம்மா. நான் தெரியாம உன்னை...'' கேவிக் கேவி அழுதாள்.

''மஞ்சு...! என் கண்ணே! நீ சின்னக் குழந்தைடா. நீ என்னை அடிச்சாக் கூட வலிக்காது. ஏன்னா... நீ என் குழந்தை!'' கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

''என்னோட அம்மா நீதான்.. நீ மட்டும்தான். உன்னைப் பத்தி பொய் சொன்னதாலதான் அந்தாளு இப்படிக் கிடக்கிறார்!''

''மஞ்சும்மா... அவர் உன்னோட அப்பாம்மா.. அப்படி எல்லாம் பேசக் கூடாது....ம்..!''

★ ★ ★

டாக்டர் சிரமப்பட்டுப் பிரபாகரனின் உயிரைக் காப்பாற்றியிருந்தாலும்.. உடலின் வலது பாகம் முழுக்க இயங்காமல் போய்விட்டது. அடுத்தவர் உதவியின்றி அவனால் அசைய முடியாது.

சுபத்ரா அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்தபடி பிரபாகரனையும் உடல் உபாதைகளையும் துடைத்து, அலுவலகம் கிளம்ப... பிரபாகரன் அவளுக்குச்

செய்த மாபாதகங்களை எண்ணிக் கண்ணீர் விட்டான். அவனை மாலை வரை கவனித்து, உணவூட்ட ஒரு வயதான பெண்மணியை அமர்த்தியிருந்தாள். மஞ்சுவோ தந்தையிடம் பேசுவதில்லை.

அந்த நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டபடி ஒரு மாதம் கழித்துப் பணியில் சேரும் நாளும் வந்தது.

கல்யாணும், மித்ராவும், சந்தோஷமாகப் புதுவாழ்க்கையைத் துவங்கி இருந்தனர்.

ஆனாலும் அலுவலகத்தில் சுபத்ராவும் அவனும் முன்பு போல் முகம் பார்த்துப் பேச முடியவில்லை. கல்யாணுக்கு அவளைப் பார்க்கும் போதெல்லாம் உறுத்தலாக இருந்தது. எவ்வகையிலும் தன்னால் அவர்களின் தாம்பத்திய வாழ்க்கை பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள். தவிர, கேரளாவில் தரப்படும் ஆயுர் வேதச் சிகிச்சை பிரபாகரனை விரைவில் குணப்படுத்தும் என்று நம்பினாள்.

கேரளா செல்லும் நாளும் வந்தது.

தன்னைத் தனியே விட்டு விட்டுச் சென்று விடுவாளோ என்ற பயம் பிரபாகரனைச் சூழ்ந்தது.

சாமான்களை ஒரு லாரியில் ஏற்றி விட்டாள்.

கார் அவர்களுக்காகக் காத்திருந்தது. அவர்களை வழி யனுப்பக் கல்யாணும், மித்ராவும் வந்திருந்தனர்.

மஞ்சு தந்தையை வெறுப்பாய்ப் பார்த்தாள்.

''அம்மா..! இவரை இங்கேயே விட்டுட்டு வாம்மா. இவர் வேணாம் நமக்கு!''



''மஞ்சு..! நீ போய் கார்ல உட்கார். போ!'' உத்தரவிட்டு விட்டு.. எதையாவது விட்டுவிட்டுப் போகிறோமா என ஆராய்ந்தாள்.

பிரபாகரன் பயந்து போனான்.

''ஸுபட்டா. ஸுபட்டா.. நான்...'' என்றான், குழறலாய்.

அவளோ காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

''ஸுபட்டா.. மன்ச்டு.. நான்..'' ஒரு கையை நெஞ்சில் வைத்துக் கொண்டு கண் கலங்கினான்.

சுபத்ரா வெளியேறிச் சென்றாள்.

''ஸுபட்டா.. நான்.. நான்..!''கண்களை மூடிக் கலங்கினான்.

ஒரு கரம் வந்து அவன் கண்களைத் துடைத்தது.

சுபத்ராதான்! அவனைச் சலனமின்றிப் பார்த்தாள்.

''நான் அந்தளவுக்குக் கல் நெஞ்சக்காரி இல்லை, பிரபாகரன். ஏன்னா நீ கட்டிய மஞ்சள் கயிறுக்கு நான் நிறைய மரியாதை கொடுத்திருக்கிறேன். தொப்புள் கொடி உறவு கூட உன் கூடப் பாதிதூரம் தான் வரும். ஆனா, மனைவிங்கிற உறவு சுடுகாடு வரை வரும். நீ வெறுத்தாலும் கூட! கல்யாண், கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்களேன், ப்ளீஸ்..!''

அவள் குரலுக்கு ஓடி வந்தவன்... அவள் ஒரு பக்கமும், இவன் ஒரு பக்கமும் கை கொடுக்க, பிரபாகரனைக் காரில் ஏற்றி அமர வைத்தார்கள்.

''வர்றோம், மித்ரா.. வர்றோம் கல்யாண்!'' காரில் ஏறி அமர்ந்தவள் கையசைத்தாள். மஞ்சுவும் டாட்டா காட்ட,

கணவன் மனைவி இருவரும் கண்கள் கலங்கக் கையசைத்து வழியனுப்பி வைத்தனர்.

கார் புறப்பட்டது.

மஞ்சு, பிரபாகரன் என்கிற இரு குழந்தைகளுடன் பயணிக் கிறாள் சுபத்ரா என்னும் தாய்! ஒரு திருப்பத்தில் நிலை தடுமாறிப் பிரபாகரன் சரிய.. இடக் கரத்தால் அவனைப் பற்றிக் கொள்கிறாள், சுபத்ரா.

தாய்மையின் ஸ்பரிசத்தை வெகு நாள் கழித்து உணர்கிறான், பிரபாகரன்.

'கடவுளே! இவளுக்கு ஊழியம் செய்ய எனக்கொரு வாய்ப்புக் கொடு!' மனமுருக வேண்டிக் கொண்டான்.

பெண்மை சிறிதுமில்லாத ஆண்மை, ஆண்மை சிறிது மில்லாத பெண்மை, குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றதில்லை!

26918

